# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 6 புதன்கிழமை (22.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 300


## வைகோவின் மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது

# தடையை நீக்கினால் புலிகளுக்கு உளவியல் ஊக்குவிப்பாக அமையும்

## தமிழக அரசாங்கம் டில்லி நீதிமன்றில் வாதாட்டம்

புதுடில்லி, செப்ரெம்பர்22

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி, ம.தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமி புதுடில்லி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனுவை நீதியரசர் விக்கிரம ஜித் சென் நேற்று நிராகரித்தார்.

புலிகள் மீதான தடையை நீக்கினால், அந்தப் பயங்கரவாத இயக்கம் இந்தியா முழுவதும் செயற்படுவதற்கு உளவியல் ரீதியாக ஊக்குவிப்பு வழங்குவதாக அமையும் என்று நீதிமன்றில் தமிழக அரச தரப்பு வாதாடியது.

*தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகள் தொடர்கின்றன. புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர் ஐந்தாவது ஈழப்போரைத் தொடங்கி தனித்தமிழ் ஈழத்தைப் பெறுவார் என்றும் அவர்கள் நம்புகின்றனர். அதனால் இலங்கையின் ஒற்றுமையையும், இறையாண்மையையும் பாதிப்புறச் செய்யும் - என்று தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் எஸ்.தனஞ்சயன் எடுத்துக் கூறினார்.*

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய மத்திய அரசாங்கத்துக்கும் தமிழக மாநில அரசாங்கத்துக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் எதிரானவர்கள் - பரமஎதிரிகள். இந்தியாவின் தலைவர்களான காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, அவரின் மகன் ராகுல்காந்தி, மகள் பிரியங்கா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் மு.கருணாநிதி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் ஆகிய தலைவர்களுக்கு எதிரானவர்கள் என்றும் தமிழக அரசு சார்பில் நீதிமன்றில் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழகதத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், தமிழ் பேரினவாதிகள் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவளித்து பொதுக்கூட்டங்களையும், ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகிறார்கள். அவர்கள் நடத்தும் கூட்டங்களில் விடுதலைப்புலிகளின் சட்டவிரோத

(24ஆம் பக்கம் பார்க்க)

## வல்லிபுர ஆழ்வார் தேர்ப்பவனி இன்று

வடமராட்சி, செப்.22

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா பக்திபூர்வமாக இடம் பெறும்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மு.ப. 9.15 மணிக்கு தேரில் வல்லிபுர ஆழ்வார் ஆரோகனித்து அருட்காட்சி வழங்குவார். தேர்திரு விழாவை முன்னிட்டு பக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி வந்த சொகுசு பஸ் விபத்து

### நால்வர் சம்பவ இடத்திலேயே பலி!

கொழும்பு, செப்.22

மன்னாரிலிருந்து சிலாபம் ஊடாக கொழும்பை நோக்கிப் பயணித்த சொகுசு பஸ் ஒன்று நேற்று அதிகாலை ஆனமடுவ முதலைக்குளிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் நான்குபேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்திரேலிய அகதிகளின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, செப். 22

ஆஸ்திரேலிய வில்லாவூட் தடுப்பு முகாம் கூரையின் மீது ஏறி தற்கொலை செய்துகொள்வோம் என அச்சுறுத்திய வெளிநாட்டு அகதிகள், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிதியப் பிரதிநிதியுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோருபவர்களை நாடு கடத்தப்படுகின்றமையை ஆட்சேபித்து இவர்கள் நேற்றுமுன்தினம் முதல் தடுப்பு முகாம் கூரையின் மீது ஏறி தற்கொலை செய்து கொள்வோம் என அச்சுறுத்தி போராட்டம் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பலாலி தவிர்த்து வலி.வடக்கில் மக்களை மீள்குடியமர்த்தும் பணி விரைவில் சாத்தியம்

### யாழ்.மாவட்டத் தளபதி நேற்றைய மானிப்பாய் நிகழ்வில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பிரகாரம் வலி.வட்க்கில் பலாலி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மிக விரைவில் அது சாத்தியப்படும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் மஹிந்த ஹத்துறுசிங்க தெரிவித்தார்.

குடாநாட்டில் 51 ஆவது படைப்பிரிவில் கீழ் உள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட மீள்குடியர்ந்த குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தனராகப் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

### வீட்டுத் திட்டம் தொடர்பாக ஆராய

## இந்திய உயர்மட்ட பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

யாழ்ப்பாணம், செப்.22

இந்திய அரசினால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக இந்திய உயர்மட்டப் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர்.

கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செய

(24ஆம் பக்கம் பார்க்க)

## 130 பேர் கொண்ட பெரிய பட்டாளத்துடன் ஜனாதிபதி நியூயோர்க் செல்லவேண்டுமா?

### ரூ. 14 கோடி வீண் செலவு எனச் சீறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, செப்.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் 130 பேர் ஐ.நாவுக்குச் சென்றுள்ளனர் என்றும் அவர்களின் செலவுக்காக மக்களின் வரிப்பணத்தில் இருந்து 14 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் ஐ.தே.க. எம்.பி. திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியில் இருந்துகொண்டே எவரும் நாடாளுமன்றில் சுயேச்சையாக இயங்க முடியாது

### செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விளக்கினார்

கொழும்பு, செப்ம்பர் 22

ஐ.தே.க. எம்.பிக்கள் அக்கட்சியின் உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களால் நாடாளுமன்றில் சுயேச்சைக் குழுவாக செயற்பட முடியாது என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

அக்கட்சியின் எம்.பிக்கள் 25 பேர் சுயேச்சைக் குழுவாக இயங்குவதற்கு, 10நாள்கள் காலக்கெடு விதித்துள்ளமை தொடர்பாகக் கருத்துக் கூறியபோதே இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்

(24ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் அன்னபூரணம்



பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் தற்போது 31, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய திருமதி சுப்பிரமணியம் அன்னபூரணம் நேற்று (21.09.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி யும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் திருஞானமூர்த்தி, தெட்ஷணாமூர்த்தி, தவராணி, யோகமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயாரும் லீலாவதி, சிவானந்தன், அருந்ததி, சத்தியபாமா, ஆகியோரின் அன்பு மாமியாரும் ராகவன், சுகேசன், கீர்த்திகா, சௌமியா, லக்ஷ்மன், விஜிதரன், விதுர்ஷா, நிவ்வியா, ஆஞ்சலி, அருள், ஜயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2010) புதன்கிழமை மு.ப. 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்,*
*(தட்டாதெருச்சந்தி).*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விஜயகாந்தராஜா கிறிஸ்ரன் ஜோன்சநாத் (ஜோன்சி)



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகாந்தராஜா கிறிஸ்ரன் ஜோன்சநாத் (ஜோன்சி) நேற்று (21.09.2010) செவ்வாய்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயகந்தராஜா மற்றும் மாலினி தம்பதியரின் அன்புப் புதல்வனும் பிரசாத் (இயக்குநர், சுருதிலயா இசைக் குழு), தீபநாத், கொலஸ்ரிக்கா (மகாஜனக் கல்லூரி), மகிழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கஸ்தூரியின் பாசமிகு மைத்துனரும் ஹரிஸ்மன், றியாஸ்மன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.09.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, குளமங்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## செல்வி விசாலினி செல்வராசா

(முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.)



1029/39, கே.கே.எஸ்.வீதி, மதவடிலேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசாலினி செல்வராசா நேற்று (21.09.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் குணபாலசுந்தரி தம்பதியரின் மூத்த புதல்வியும் கீதா (கனடா), சர்மிளா, ரஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகிலனின் அன்பு மைத்துனியும், பரமன் - சந்திரவதனியின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (22.09.2010) புதன்கிழ்மை பி.ப. 3 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கொழும்பு கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1029/39, கே.கே.எஸ்.வீதி,*
*மதவடி லேன், நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**தாய், சகோதரர்கள்.**


**Work Permit**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு **Work Permit**, டோகா, கட்டார் நாடுகளுக்கான இன்ஜினியர் (சிவில்), மேசன், தச்சுவேலை, சாரதி உடனடி வேலை வாய்ப்புகளுக்கு தொடர்பு: **0777 880286**

**TV கள் மலிவு விற்பனை**

Sony wega Flat 14" - 10,000/=, 21" - 14,000/=, 25" - 22,000/=, 29" - 25,000/= மற்றும் பொக்ஸ் வகைகள், அம் பிளிபயர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், Casste Deck, ரேடியோக்கள், மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 1393670, 021 4920853

இ.மகேஸ்வரன்
அப்பளக்கோம்பனி, சீனிப்புளியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**The World Great Oppertunity**

எதிர்கால சவால்களை தன்னம்பிக்கையுடன் வெற்றி கொள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்தி பெற்றவராயின் சாவகச்சேரியில் அமைந்துள்ள (Innovage) சர்வதேச நிறுவனத்திற்கு முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புகள் இடம்பெறுகின்றன. கவர்ச்சியான சம்பளமும் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு: V.Udayarajan
071 7494735, 021 4915550

**A/L எழுதிய மாணவர்களுக்கு**

இலவச ஒரு மணி நேர Spoken English Work Shop சான்றிதழ், பேசுதலுக்கான Key Board மற்றும் Gulden இலவசம்.

காலம் : 23.09.2010 வியாழக்கிழமை
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12
மாலை 1-2, 2-3, 3-4, 4-5

**My way English**
182, Stanley Road, Jaffna. T.P.: 0711257035


## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை 24 ஆம் திகதியே நடக்கும்

யாழ்ப்பாணம், செப். 22

சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த எழுத்துப்பரீட்சைகள் ஏற்கனவே எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இப்பரீட்சை நடைபெறும் திகதி மாற்றப்பட்டுள்ளது எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒழுங்கில் குறித்த திகதியில் பரீட்சை நடைபெறும் என்றும் யாழ். மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## இன்று குருபூசை

அருள்திரு கடையிற் சுவாமிகளின் 119ஆவது குருபூசை இன்று யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்திய நாதன் தேவஸ்தானத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கடையிற் சுவாமிகள் குறித்த சொற்பொழிவும் பிரார்த்தனையும் அன்னதானமும் நடைபெறும்.

## வலி.மேற்குப் பிரதேச சபைக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு இரண்டுமாடிகளைக் கொண்ட பொதுநோக்கு மண்டபமும் அலுவலகமும் இணைந்த ஒரு கட்டடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளன.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் 35.455 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம்அமையவுள்ளது.

வட மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி இதற்குரிய கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளார். (த-121)


**முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் தேவை**

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் "சுப்பிரமணியம் மாலதி" முன்பள்ளிக்கு ஆசிரியை ஒருவர் தேவை.

தகைமைகள்: க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள்.
முன்பள்ளி பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை.
ஆங்கிலம் கற்பிக்கத் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

தகுந்த சான்றிதழ்களுடன் 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத்திற்கு சமுகமளிக்கவும்.

(103640) - செயலாளர்.


## கண்ணீர்ப் பூக்கள்



முன்னாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.குட்டிப்பிள்ளை கிட்ணர் (J.P.) அவர்களின் அன்பு மனைவியாகிய

அமரர் திருமதி.
**கிட்ணர் கனகம்மா**
**B.A. (Lond.)**
(யா/செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவி, ஆசிரியை, உபஅதிபர், பதில் அதிபர்.)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று சிட்னியில் நடைபெறவுள்ள அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள முடியாவிட்டாலும் எங்கள் குடும்ப உறுப்பினர்களினதும், செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களினதும் சார்பில் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

லயன். வ.பரமசிவம் (J.P.) குடும்பத்தினரும்,
செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும்.

*128, செல்லர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (103637)


**யாழ் நகரில்** *மிகக்குறைந்த கட்டணங்களில்*

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்**

To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

100% நல்ல சம்பளம்

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் விரும்பும் நாடுகளில் கற்கலாம்.
➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் நேரடியாகச் செய்வார்கள்.

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2½ Months
(We guarantee minimum band 5.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPOKEN ENGLISH
இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

Diploma in English | Advance Diploma Iin English
100 % பயிற்சி
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel: 021 [illegible] Hotlines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி { 02.10.2010, 06.10.2010, 09.10.2010 } காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி

IELTS
SPOKEN ENGLISH
ஆரம்பமாகின்றது

UNION COLLEGE
Richmond COLLEGE
BICKENHALL COLLEGE

✵ குறைந்த கட்டணம்
✵ பல்கலைக்கழக விரிவுரையாளர்களை, ஆசிரியர்களைக் கொண்ட
✵ பல திறமைமிகு மாணவர்களை உருவாக்கித் தந்த

Interlink

ஆரம்பமாகிறது - 01.10.2010 முதல்
அனுமதி பெறும் 10 மாணவர்களுக்கு
அனுமதி இலவசம்

**European College of Higer Studies**
315½ Parameswara Junction, Palaly Road, Jaffna
T.P.: 0213734747, 0771882507, 07[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உள்ளூராட்சி தேர்தல் சட்ட திருத்தம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சட்ட விதிகள் மாற்றப்படவுள்ளன. அந்தச் சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதில் மட்டுமன்றி அந்தச் சபைகளின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் புதிய நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

தேர்தல் மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் பிரதம கொறடாவுமான தினேஷ் குணவர்த்தனா இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சி சபைளுக்கான தேர்தல் சீர்திருத்தச் சட்டமூலம் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எனினும் அதன் மீதான விவாதம் பின்னரே நடைபெறும் என்பது தகவல்.

எப்படியோ, நாடாளுமன்றில் அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மைப் பலம் உள்ளதால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மறுசீரமைப்புச் சட்டம் தங்கு தடையின்றி நிறைவேறிவிடும்; மலையிலிருந்து பாயும் அருவி போன்று வீச்சுடன் நிறைவேறும். அது நிஜம்.

புதிய சட்டத்திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி சபை ஒன்றின் அங்கத்தவர்களில் 70 சதவீதமானோர் வட்டார ரீதியாகவும் 30 சதவீதமானோர் விகிதாசார முறையிலும் தெரிவுசெய்யப்படுவர்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களைத் தெரிவு செய்வதிலும் புதிய விதிகள் கையாளப்படவுள்ளன. குறிப்பிட்ட சபையில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியே தலைவரைத் தெரிவுசெய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்காது. அதற்குப் பதிலாக சபையின் மொத்த அங்கத்தவர்களில் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமான உறுப்பினர்களின் ஆதரவை, வாக்குகளைப் பெறுபவர் மேயராக அல்லது தலைவராகத் தெரிவுசெய்யப்பட வாய்ப்பு ஏற்படும் சாததியத்தைக் காணமுடிகிறது.

அமைச்சர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்ட இரண்டு திருத்தங்களும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்திலும் அவற்றின் சேவைகளிலும் நிறையவே புதிய மாற்றங்களைக் கொண்டு வரும், ஆளும் தரப்பு நினைப்பதை அல்லது வகுப்பதை ஏதேச்சதிகாரத்துடன் நிறைவேற்றுவது தடுக்கப்படும் என நம்பலாம்.

அங்கத்தவர்களில் ஐம்பது சதவீதத்துக்கும் குறைந்த எண்ணிக்கைப் பலம் கொண்ட கட்சி அங்கத்தவரோ அல்லது குழுவின் அங்கத்தவரோ ஏனைய கட்சி அல்லது குழுவின் அங்கத்தவர்களின் ஆதரவுடன் உள்ளூராட்சி சபை ஒன்றின் ஆட்சித் தலைவராக வரமுடியும். அவ்வாறு மாற்றுக் கட்சிகளின் அல்லது தரப்புகளின் ஆதரவுடன் தலைமைப் பதவிகளைப் பெறுபவர் தாம் சாராத கட்சி உறுப்பினர் அல்லது குழுக்கள் பிரதிநிதித்துவம் செய்யும் வட்டாரங்களில் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பணியாற்றுவதற்கும் கடமைப் பட்டவராகிவிடுவார்.

இதனால் உள்ளூராட்சி சபைகளின் வட்டாரங்களில் ஓரளவிலேனும் சமச்சீரான வளர்ச்சியைக் காணமுடியும். அதாவத இப்போதுள்ளது போன்று அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் அல்லது குழுவின் பிரதேசங்களில் மட்டுமே அபிவிருத்தி வேலைகள் முன்னேற்றம் என்ற நிலையில் மாற்றம் உண்டாகும்.

அந்த மாற்றத்துக்கு மேலும் வலுச்சேர்ப்பதற்கு உத்தேச சட்டத் திருத்தம் வகை செய்யும் என்று நம்பலாம். அதாவது உள்ளூராட்சி சபை ஒன்றின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தலைவர் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யவேண்டும் என்ற புதிய விதி, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையின் கீழ் அடங்கும் சகல பகுதிகளின் அபிவிருத்திக்கும் வகை செய்ய வேண்டு மென்ற தூண்டுதலை தலைவர் சார்ந்த கட்சிக்கும் கொடுக்க வாய்ப்புண்டு.

ஆனால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை ''விலைக்கு வாங்கியது'' போன்று உள்ளூராட்சி சபையின் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளின் அல்லது எதிர்த்தரப்புகளின் அங்கத்தவர்களை தமது பக்கம் இழுப்பதற்கும் இடம் உண்டு என்பதனை மறப்பதற்கில்லை.

எப்படியோ உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியில் ஏகபோகத்தை (சர்வாதிகரத்தை என்றும் சொல்லலாம்) ஓரளவுக்குகனும் புதிய சட்ட விதிகள் குறைக்கும் என்று நாம் நம்ப இடந்தருகிறது.

# தமக்குரிய சுற்று நிருபங்களின் பிரதிகளை வழங்குமாறு கிராம அலுவலர்கள் கோரிக்கை

## யாழ்.அரச அதிபருக்குக் கடிதம்

வலி.வடக்கு,செப்.22

கிராம அலுவலர்கள் சம்பந்தமாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பப்படும் அனைத்து சுற்றுநிருபங்களினதும் பிரதிகளைக் கிராம அலுவலர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் அதனை முழுமையாகச் செயல்படுத்தவும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என வடக்கு, கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு வடக்கு, கிழக்கு மாகாண கிராம அலுவலர் சங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு:

* இடம்பெயர்ந்து இடைத்தங்கல்கள் முகாம்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் மக்களின் பணிகளில் ஈடுபடும் கிராம அலுவலர்களுக்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்ட கொடுப்பனவைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

* யாழ்.மாவட்டத்தில்சில பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களினால் கிராம அலுவலர்கள் நியாயமான காரணம் இன்றி உள்ளக இடமாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எதிர்காலத்தில் இத்தகைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது. இத்தகைய இடமாற்றங்கள் செய்வதாக இருந்தால் கிராம அலுவலர் தொழிற்சங்கம், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு பிரதி அனுப்பப்பட வேண்டும்.

* கிராம அலுவலர்களுக்கான நினைவூட்டற் குறிப்பேடுகள் வழங்கப்படாத நிலையில் கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப்போட்டியில் நினைவூட்டற் பதிவேட்டுக்கும் புள்ளிகள் போட்டப்பட்டுள்ளன. இதனால் எதிர்காலத்தில் நினைவூட்டற் பதிவேடுகளை வழங்க நடவடிக்கையெடுக்கப்படவேண்டும் என்று அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# பிரதேச செயலகங்கள் தோறும் செயற்றிறன் விருத்தி நிகழ்வுகள்

## நீதியமைச்சின் சட்டத்தரணிகள் குழு மேற்கொள்கிறது

நாவற்குழி,செப்.22

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சில் கடமையாற்றும் சட்டத்தரணிகள் குழுவொன்று சாவகச்சேரி, கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்றிறன் விருத்தி நிகழ்வுகளை மிக அண்மையில் நடத்தியது.

அமைச்சின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு தலைமையிலான சட்டத்தரணிகள் குழு இந்த நிகழ்வுகளை வழிப்படுத்தியது.

பிரதேச செயலக அதிகாரிகளுக்கு ஒரு நாளிலும்பொதுமக்களின் சமூக நிறுவன பிரதிநிதிகளுக்கு ஒரு நாளிலுமாக இருநாள்செயலமர்வுகளாக இவை நடைபெற்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்புடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புதல் எனும் நிகழ்ச்சித் திட்டதின் கீழேயே இச் செயலமர்வுகள் நடைபெற்றன.

இந்த அமைச்சின் நிதியளிப்புடன் அடுத்த ஒக்ரோபர் மாத இறுதியில் சாவகச்சேரி, கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவுகளில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவையொன்று நடத் தப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாக இது நடத்தப்பெற்றுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டைக்குரிய புகைப் படங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அடைக்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்றல், முதியோர் அடையாள அட்டை உடனேயே வழங்கப்படுதல், சிறுவர் , பெண்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவுதல், வீடமைப்பு மற்றும் நஷ்டஈடு தொடர்பான பிரச்சினைகளுக்கு உதவுதல், மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்களுக்கு உதவுதல் போன்ற சேவைகள் வழங்கப்படும்.

இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விவரங்களை பெறுவதற்கு ' செயற்றிட்ட முகாமைத்துவ அலகு, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, உயர்நீதிமன்ற கட்டடத்தொகுதி, கொழும்பு - 12 என்னும் முகவரியுடனோ அந்த அலுவலகத்தின் 0115626764 என்னும் இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

## உயர் தொழில்நுட்ப நிறுவன அரையிறுதிப் பரீட்சை

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் கல்வியாண்டு 2010 இற்கான அரையிறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வருடமாணவர்களும் விண்ணப்பப்படிவங்களை நிறுவன நிர்வாகக் காரியாலயத்தல் பெற்று எதிர்வரும் 27 ஆம்திகதிக்கு முன்னர் பெற்று அலுவலகத்தல் ஒப்படைக்குமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்து விழிப்புணர்வுக் கண்காட்சி

## 28 ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு யாழ். போக்குவரத்துப் பிரிவுத் தலைமைக் காரியாலயப் பொலிஸாரினால் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மாபெரும் போக்குவரத்து விதிமுறை தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தலைமையில் நடைபெறவுள்ள இக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி. சில்வாவும், சிறப்பு விருந்தினராகப் பிரதிப்பொலிஸ் மா அதிபர் காமினி அமரக் கோன் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியில் வீதி ஒழுங்குகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் மோப்ப நாய்களின் தொழிற்பாடுகள் தொடர்பாகவும் விளக்க மளிக்கப்படவுள்ளது.

தற்போது குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்தும் விதமாக யாழ். பொலிஸ் தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியில் அனைத்துப்பொது மக்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் நேவின் பத்மதேவா கேட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த முப்பது வருடங்களின் பின்னர் வீதி ஒழுங்குகள் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்தும் விதமாக இந்த விழிப்புணர்வுக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இதை யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளையும் சேர்ந்த பொலிஸார் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். பிரதான வீதியில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய இக்கண்காட்சி இடவசதி போதாமையால் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி நிகழ்விற்கு யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் மாணவ, மாணவிகள், பொதுமக்கள், ஒட்டோசாரதிகளெனப் பல்வேறு தரப்பினரும் அழைக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல்கள் பொதுமக்களைச் சென்றடையும் முகமாக இங்குள்ள ஒன்பது பொலிஸ் நிலையங்கள், பேருந்துத் தரிப்பிடங்கள், வீதிகளில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படவுள்ளன - என்றார். (த-16)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 07 23.09.2010 | |
| | வியாழக்கிழமை |
| திதி: | : பூரணை |
| | பி.ப.03.04 வரை |
| நட்சத்திரம் | : பூரட்டாதி |
| | மு.ப. 10.11 வரை |
| சுபநேரம் | : 07.32-09.02 வரை |
| ராகுகாலம் | : 01.32-03.02 வரை |

# இலங்கையின் சக்தி மூலங்களில் அணுசக்தியை சேர்க்கத் திட்டம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 22

இலங்கையின் சக்தி மூலங்களில் ஒன்றாக அணு சக்தியையும் சேர்த்துக் கொள்ளும் சாத்தியம் பற்றி ஆராய்வதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வீயன்னாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் 54ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் தொடாந்து உரையாற்றுகையில், அணுசக்தித் துறைக்குத் தேவையான மனித வளங்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை அணுசக்தி அதிகார சபை ஆரம்பத்துவிட்டது என்று கூறினார். (ஒ)

## நிறுவுநர் தினம் இன்று

கோப்பாய், செப்.22

நீர்வேலி, அத் தியார் இந்துக் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக் கிய இராச்சிய பிரிவின் நலன்விரும்பிகள் சங்க மத் திய குழு உறுப்பினர் பொ.சிவசுப்பிரமணியம் கலந்துகொள்வார். (ஒ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

புஷ்பகரன் மரியமலர் ஆகிய நான் எனது பெயரை இன்று (22.09.2010) புதன்கிழமை முதல் புஷ்பகரன் ரேணுகா எனப் பெயர்மாற்றம் செய்துள்ளேன் என் பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

புஷ்பகரன் ரேணுகா,
கச்சாய் தெற்கு, சாவகச்சேரி.

## பதவிவெற்றிடம்

### SALES EXECUTIVE

Brantel Lanka (Pvt.) Ltd. இற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதிற்கு உட்பட்ட கீழ்வரும் தகைமை உடையவர்கள் இன்றும், நாளையும் (22.09, 23.09)சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

★ கல்வித்தகைமை G.C.E. (O/L), (A/L)
★ தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்கள் சிங்களமொழி தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
★ சாரதி அனுமதிப்பத்திரம் (மோட்டார் சைக்கிள்) கட்டாய தகைமையாகக் கொள்ளப்படும்.

(சி/570672) ராம் கப்பசிற்றி, 306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

### பரிசில் நாள் - 2010

நலமே

காலம்
24.09.2010 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி

இடம்
கல்லூரி அருணாசலம் மண்டபம்

தலைவர்
**திரு.அ.கயிலாயபிள்ளை**
(கல்லூரி முதல்வர்)

முதன்மை விருந்தினர்
**திருமிகு தி.இராசநாயகம் அவர்கள்**
பிரதிப் பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம்

சிறப்பு விருந்தினர்
**திருமிகு போ.ஜெயக்குமார் அவர்கள்**
உதவிப் பதிவாளர் - யாழ்.பல்கலைக்கழகம்

கௌரவ விருந்தினர்
**திருமிகு ச.கிருஷ்ணமூர்த்தி அவர்கள்**
சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம், ஐக்கிய இராச்சியம்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 2008/2009 வருடங்களில் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களைப் பரிசில் பெறு வதற்காக அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்.
யா/சாவ.இந்துக் கல்லூரி.

(சி/570666)

## Computer Express
### Institute of Information Technology

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
## அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book,Tally) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

10/09/2010 க்கு முன் பதிவுகளுக்கு முந்துங்கள். பயன்பெறுங்கள்.

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

Batch i - 22.09.2010 } 9AM
Batch ii - 24.09.2010 } 9AM
Batch iii - 25.09.2010 } 11AM
Batch iv - 26.09.2010 } 11AM

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Class Start 27.09.2010 9AM
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

## AUTOMOTOR CLUB LANKA ( PVT ) LTD

Mobile: 077 8739485

★ எமது நிறுவனத்தில் கடமைபுரிய உத்தியோகத்தர்கள் தேவை. (யாழ்ப்பாணம், வவுனியா)

1. கணக்காளர்
   தகைமை: A/L வர்த்தகம்
   சம்பளம் பேசித்தீர்மானிக்கப் படும்.
2. வெளிக்கள உத்தியோகத்தர்
   தகைமை: O/L
   சம்பளம் 10,000 தொடக்கம் 15,000 வரை
3. சாரதி
   தகைமை: மெக்கானிக் வேலை தெரிந்திருக்கவேண்டும். ELF "350" வாகனம் வைத்திருத்தல் வேண்டும்.
   சம்பளம்: 30,000 தொடக்கம் 40,000 வரை

நேர்முகப் பரீட்சை 25.09.2010 முற்பகல் 10 மணி - பிற்பகல் 2 மணி.

**இடம்: இளங்கலைஞர் மன்றம்,**
சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கோண்டாவில், இராமகிருஷ்ணா பாடசாலை வீதியில் உள்ள உடைந்த வீட்டுக்குப் பின்னால் உள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. உரிமை யாளர் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளார்.

தொடர்பு: ப.பாலகிருஷ்ணன், ராஜா பினான்ஸ் முன்பாக, பலாலி வீதி, கோண்டாவில். 0778453786

## காணி விற்பனைக்கு

நாவற்குழி, கண்டி வீதி, கைதடி அரசினர் வைத்தியசாலை முன்பாக "சிங்கமலைத்தோட்டம்" காணியில் 1 நூட் 1.3 பேர்ச் (4 பரப்பு 1.12 குளி) காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0662230807 - 0777971635 (மாலை - 7 - 8)

## விற்பனைக்கு

14 அடி நீளமுள்ள கூலர்பெட்டி விற்ப னைக்குண்டு.
தொடர்பு: 0777726874

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பேரானந்தம் தருமலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திரு நெல்வேலி, மடத்தடி, மாவிட்டபுரத்தை வசிப் பிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட திருமதி பேரானந்தம் தரும லிங்கம் நேற்றுமுன்தினம் (20.09.2010) திங் கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங் கம் - சின்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, வைத் தியலிங்கம், குணபூபதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ் சென்ற நாகமுத்து தருமலிங்கத்தின் (பிரபல அரசாங்க ஒப்பந்த காரர்) அருமை மனைவியும் துளசிதாசன், தமயந்தி (பாப்பா) ஆகி யோரின் அன்புத் தாயாரும் வனதாசன், பேரின்பராணி ஆகியோ ரின் மாமி யாரும் திசாந், சோவன்யா, ராகவி ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.09.2010) புதன்கிழமை கல் கிசை மகிந்த மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு நாளை (23.09.2010) வியாழக்கிழமை ந.ப. 12 மணியள வில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 2.30 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/4 C, பத்திரனை காடின்,
பாத்தியா மாவத்தை,
களுபோவில, தெஹிவளை.

(சி/570994)

தகவல்:
துளசிதாசன் (மகன்).

### திருமதி யோகேஸ்வரன் விமலாதேவி



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சுவிற் ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரன் விமலாதேவி 18.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் ம.யோகேஸ்வரனின் அன்பு மனைவி யும் தரணிகா, கார்த்திகா, கீர்த்திகா ஆகியோ ரின் அன்புத் தாயும் குகஈசன், குகநேசன், கிரியந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கணேசமூர்த்தி, சத்தியமூர்த்தி, சிவானந்த தேவி ஆகியோரின் அன்புச் சகோதரி யும் அமரர்களான மயில்வாகனம் - இரத்தினம்மா, கனகரத்தினம் - செல்லம்மா மற்றும் றாசமணி - தங்கமலர் தம்பதியினரின் மருமகளும் லதிதாம்பிகை, சிவனேஸ்வரி, காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஷியாம், ஐஷா, ராகுல் ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2010) புதன் கிழமை சுவிற்ஸர்லாந்தில் ந.ப. 12 மணியளவில் (இலங்கை நேரம் பி.ப. 4 மணி) இடம்பெறும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

(சி/570668)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பையா தியாகராசா
(உரிமையாளர், பிரபா ஸ்ருடியோ)



யாழ்ப்பாணம், ஈச்ச மோட்டை, சுண்டுக்குளி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தியாகராசா 19.09.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா -செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்வரத் தினத்தின் (மாசிவன் - நீர்வேலி) அன்புக் கண வரும், லதா, உஷா, சுதா கரன், பிரமிளா ஆகியோ ரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், பாலசிங்கம், ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் கம லாம்பிகை (மணி), காலஞ்சென்ற சறோஜினி (கிளி) ஆகி யோரின் அருமைச் சகோதரனும் நிதிலா, ரதிலா, சிந்திலா, யாழினி, யாமினி, நிரோஜன், பிரதாப், நிரஞ்சன், அஸ்வின், அருண், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (21.09.2010) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணி தொடக்கம் பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியைகள் நடை பெற்ற பின்னர் மாலை 5 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.0775476130,
0776304054

(சி/570993)

தகவல்:
பிரமிளா ரவிக்குமார் (மகள்),
சுதாகரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயம் உள்ளடங்கலாக
# வடக்கில் படையினரின் பயன்பாட்டிலுள்ள வீடுகள், காணிகள் விரைவில் உரிமையாளரிடம்

யாழ்ப்பாணம்,செப்.22

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயம் உள்ளடங்களான வடக்கிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான 1200 வரையிலான காணிகள் மற்றும் வீடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதற்கும் அந்த இடங்களிலுள்ள இராணுவத்தினரை அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பொது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களிலுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் வீடுகள் சிலவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் காவலரண்களும் நிறுவப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் இராணுவத்தினரால் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து தற்போது பொதுமக்கள் தத்தமக்குச் சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளுக்கு மீளத் திரும்பத் தொடங்கியுள்ளனர். இதனையடுத்துப் பொதுமக்களின் காணிகள், வீடுகளில் தங்கியிருந்த இராணுவத்தினர் படிப்படியாக அப்பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டுவருகின்றனர்.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிச் செல்லும்போது அவர்களால் அக்காணிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் மற்றும் அனைத்துவித உபகரணங்களும் அகற்றப்படுவதுடன் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட பெருமளவு பொருள் பண்டங்களும் பொது மக்களின் பயன்பாடுகளுக்காக அவ்விடங்களில் கைவிட்டுச் செல்லப்படவுள்ளன.

அத்தோடு காணி உரிமையாளர்களின் தேவைகளுக்கு அமைய அவர்களின் காணிகளைத் துப்பரவு செய்து வழங்கவும் இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகச் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(த-22)

# இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் செயற்பாட்டைப் பாராட்டி விருது

### *விவசாயிகளின் கடன் அறவீட்டில் சாதனை*

அச்சுவேலி,செப்.22

அச்சுவேலி, இலங்கை வங்கிக் கிளைக்கு கடன் வழங்கல் மற்றும் கடன் அறவிடல் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் கிடைத்துள்ளது. இதனைப் பாராட்டி இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் வங்கி முகாமையாளர் த.புவனேந்திரனுக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை 1380 லட்சம் ரூபாவை 1035 விவசாயிகளுக்குக் கடனாக வழங்கியது. அந்தக் கடனில் 99.2 வீதத்தைத் திருப்பி அறவீடு செய்து சாதித்துள்ளது.

இந்தவகையில் ஒரே வருடத்தில் கூடிய தொகையைக் கடனாக வழங்கியது மட்டுமன்றி ஆகக் கூடுதலான தொகையான 99.2 வீதத்தைத் திருப்பி அறவீடு செய்திருப்பது அகில இலங்கை ரீதியில் பெரும் சாதனையாகும். அந்த வகையில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் விருதும் சான்றிதழும் வழங்கிப் பாராட்டிக் கௌரவித்துள்ளார்.

விருது வழங்கும் வைபவம் ஜயவர்த்தனபுர வங்கியாளர் கற்கை நிலையத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை மூலம் விவசாயிகள் பெற்றுக் கொண்ட விவசாயக் கடனைப் பயன்படுத்தி விவசாயப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டதுடன் குறித்த தவணையில் கடனைத் திருப்பியும் செலுத்தி விடுகின்றனர். இந்த வகையில் 2010 ஆம் ஆண்டுக்கான விவசாயக் கடன் வழங்கும் வேலைத்திட்டத்திலும் அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை முன்னணியில் உள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஏ-9 பாதை திறக்கப்பட்டு யாழ்.மாவட்டத்துக்கு முதன் முதலாக விஜயம் செய்தபோது அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளைக்கு விஜயம் செய்து விவசாயிகளுக்கு விவசாய உபகரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டதுடன் வங்கியின் செயற்பாடுகளையும் - வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகளையும் பாராட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-11)

## 18 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பான கருத்தாடல்

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் குறித்த விடயம் தொடர்பாக 'வர்க்க எதிரியின் அரவணைப்புக்கு திரிபுவாதத்தின் தவிப்பு' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பி.ப 3.30 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இலக்கம் 33, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறும்.

நிகழ்வின் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சர்வதேச மாக்சியக் குழு அறிவித்துள்ளது.

(த-7-160)

## சாவகச்சேரி இந்துவின் பரிசளிப்பு விழா

தென்மராட்சி,செப்.22

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலர் (பொது நிர்வாகம்) இ.இராசநாயகம் கலந்து கொள்வார்.

(த-207)




# யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை தற்போது முன்னேற்றமடைந்துள்ளது

## மத்திய வங்கி பிரதிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை தற்போது முன்னேற்றம் அடைந்து வருகின்றது. மக்களுக்கான கடன் திட்டங்களையும் பல வங்கிகள் வழங்கத் தொடங்கியுள்ளன. இது ஒரு நல்ல ஆரம்பம். இவ்வாறு ஏனைய வங்கிகளும் மக்களுக்குத் தேவையான கடன்களை வழங்க முன்வரும் என்று நம்புகிறேன் என மத்தி வங்கியின் வடபிராந்திய பிரதிப் பணிப்பாளர் அ.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மக்களின் சேமிப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனவே ஒழிய கடன்களை வழங்க முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டு மக்களால் பொதுவாக முன்வைக்கப்படுவதுபற்றிக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வங்கிகள் மக்களுக்குக் கடன் வழங்குவதற்குப் பின்னடிக்கும் நிலைமை தற்போது ஓரளவு குறைவடைந்து வருகின்றது.

வங்கிகள் ஆரம்பத்தில் மக்களுக்குக் கடன்களை வழங்குவதில் பின்னடித்தன. தற்போது அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப கடன்களை வழங்கி வருகின்றன. இருப்பினும் அடையப்பட வேண்டிய இலக்கு நீண்ட தூரத்திலேயே உள்ளது என்றார்.

(த-15)

# சாரதிப் பயிற்சி பெற்ற முன்னாள் புலிகளை இ.போ.ச.வெற்றிடங்களுக்கு நியமிக்குக

## வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.22

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களில் சாரதிப் பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கு வடமாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களில் நியமனம் வழங்குமாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட சுமார் 100 விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்குக் கோண்டாவில் பஸ் டிப்போவில் சாரதிப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே இவர்கள் உரிய சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருப்பதால் இவர்களுக்கான நியமனங்களை வழங்குமாறு இ.போ.ச.யாழ்.டிப்போவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் இவர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இம்முன்னாள் உறுப்பினர்கள், தம்மில் பல்வேறு கல்வித்தரங்களை உடையவர்களும் பட்டதாரிகளும் காணப்படுவதால் தமது கல்வித் தகைமைக்கு ஏற்ப இலங்கை போக்குவரத்துச் சபையில் தமக்கு நியமனங்களை வழங்குமாறும் கேட்டுள்ளனர்.

(த-16)

## கடையிற் சுவாமிகளின் குருபூசைதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.22

கடையிற் சுவாமிகளின் குருபூசைத் தின நிகழ்வு இன்று புதன்கிழமை மண்டைதீவில் உள்ள சுவாமிகள் வசித்த ஆச்சிரமத்தில் நடைபெற உள்ளது.

எனவே அடியார்கள் அன்றையதினம் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் அபிடேக ஆராதனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(த-207)



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை அகில இலங்கை ரீதியில் நடத்திய சைவநெறித் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம், சைவநெறித் தேர்வுப் பரீட்சைப் பொறுப்பாசிரியர் இரா.செல்வவடிவேல், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகியோர் உரைநிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரச...

# தேர்த் திருவிழாச் சிறப்பு...

### மஹோற்சவ குருவின் ஆசியுரை



தொன்மைவாய்ந்த நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரின் கோயில் தேர்த் திருவிழா இன்றாகும். வேழமுகத்து விநாயகர் தேரில் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பஞ்சகிருத்தியத்தில் அழித்தல் தத்துவத்தை குறிப்பது ரதோற்சவம். ஆன்மாக்களின் ஆணவம் நீக்கி அருள் தரும் திருவிழா தேர்த்திருவிழா. வடம்பிடித்து இழுத்துத் தொண்டு செய்தால் எங்கள் வாழ்க்கை வடமும் சிறப்பாக நடைபெறும். அடியார்கள், ஆனைமுகத்தானை தேரில் கண்டு தரிசித்து நல்லருள் பெறுவார்களாக. எல்லோரும் சுகத்துடனும் சிறப்புடனும் வாழ நல்லாசிகள் உரித்தாகட்டும்.

சிவஸ்ரீ.சா.சோமதேவக் குருக்கள் (பிரதமகுரு).

### இரதம் ஏறிவரும் அரசகேசரி விநாயகன் இன்னல் களைந்து நல்லருள் பாலிக்க பிரார்த்திக்கின்றோம்



செம்மொழிகளான தமிழும் சமஸ்கிருதமும் வளர்த்த பெரும் பதியாகிய 'கதலீவனம்' என்ற நீர்வேலிக் கிராமத்தின் நடுநாயகமாக விளங்குவதே அரசகேசரிப் பெருமானின் திருக்கோயில்.

இரகுவம்சம் மகாகாவியத்தை தமிழில் படைத்த சீர்மிகு அரசகேரி என்ற யாழ்ப்பாணப் பேரரசனான பரராஜசேகரின் மருகனும் மஹாமந்திரியுமானவனால் வழிபடப் பெற்ற கோயில் என்பதும் இதன் சிறப்பு.

இரகுவம்சம் இக்கோயிற் திருமுற்றத்தில் வைத்தே அரங்கேற்றம் செய்யப்பட்டதால் 'செம்பாட்டுப் பிள்ளையார்' என்றும் அழைக்கப்பெறுகிறது.

பாலாம்பிகா தேவி உடனாய வைத்தியநாதப் பெருமானுடன இராஜசிம்ம கணேசனாக எழுந்தருளியிருக்கும் அரசகேசரி விநாயகர் இன்று இரதோற்சவம் கண்டருள்கிறார்.

சிற்ப எழில் நிறைந்த திருத்தேரில் தன் சகோதரன் குமரன் உடன்வர எழுந்தருளும் இப்பெருமானின் திருவடிகளைப் பணிந்து எல்லோரும் கடந்த கால அவல எண்ணங்களினின்று விடுபட்டு உடல், உள, நலம் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ கு.தியாகராசக்குருக்கள், நீர்வேலி.

### 'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்'



வளம் நிறைந்த நீர்வேலிப் பகுதியில் வேண்டுவார்க்கு வேண்டும் வரமளிக்கும் அரசகேசரி விநாயகன் இப்பிரதேச மக்களின் வாழ்வில் நீக்கமற நிறைந்து காணப்படுகிறார். மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான சகல சௌபாக்கியங்களையும் அருளி ஆன்ம ஈடேற்றத்திற்குத் துணைபுரிகின்றார்.

எம்பெருமான் இன்று தேரில் ஏறி பெருவிழாக் காணும் இவ்வேளையில் சகல மக்களும் இன்புற விநாயகரின் கழல் பணிந்து வேண்டுகிறேன்.

ந.ஜெயகிருஸ்ணன்,
தொண்டர்சபை உறுப்பினர் சார்பாக.

### முதல் வணக்கம் விநாயகருக்கே



நீர்வளமும் நிலவளமும் கொண்ட நீர்வயம்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அரசகேசரிப் பிள்ளையார் எங்கள் எல்லோருக்கும் அருள்பாலிப்பாராக.

தனக்குமேல் தலைவனில்லாதவன் என்ற பொருளைக் கொண்ட முழுமுதற் பொருளான விநாயகர் தேரேறி வரும் காட்சியைக் கண்டுகளிப்போம். ஆலயங்களிலே எவ் ஆலயமாயினும் அங்கு முதல் வணக்கம் விநாயகருக்கே. அறுவகைச் சமயங்களில் கணபதியை முழுமுதலாகக் கொண்ட சமயம் காணபத்தியம். ஆனாலும் சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம், சௌரம் போன்ற சமயங்களைச் சேர்ந்தவர்களும் கணபதியை வழிபடுகின்றனர். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட விநாயகப் பெருமான் தேரேறி வரும் காட்சியைக் கண்டு களிப்போமாக!

த.நடராஜா, பிரதேச சபைசெயலாளர், தலைமைப் பணியகம், வலி.கிழக்குப் பிரதேசசபை,புத்தூர்.

## நீர்வை அரசகேசரிப்பிள்ளையார் வரலாறு

நீர்வேலி இந்து தர்மத்தை அழியாமல் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாற்றிய ஊர். பதினாறாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துக்கு வந்த போர்த்துக்கேய மதவெறியர்கள் அரசைக் கைப்பற்றியதுடன் நல்லூர்க்கந்தன் கோயில், மாவைக் கந்தன் கோயில் உள்ளிட்ட பெருங்கோயில்களை எல்லாம் நிர்மூலம் செய்ததும் குருமார்களையும் சைவப்பற்றாளர்களையும் வதைத்துக் கட்டாய மத மாற்றம் செய்ததும் பலரும் அறிந்தவை.

'நல்லூரிலிருந்த இராசதானியும் பெரியகோயிலும் (கந்தசுவாமி கோயில்) போர்த்துக்கேயரால் கி.பி.1621 இல் முற்றாக அழிக்கப்பட, அங்கிருந்த கோயிற் சிலா விக்கிரகங்களைக் குளமொன்றில் புதைத்து விட்டுக் கோயிற் குருக்கள்மார் நீர்வேலிப் பகுதிக்கு ஓடினர்' என்று அக்கால வரலாற்றை எழுதிய ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை (யாழ்ப்பாண சரித்திரம் - 1933) குறிப்பிடுகின்றார். ஆக, அந்நிய ஆட்சிக் காலத்தில் சைவத்தின் காவலரணாக நீர்வேலி திகழ்ந்திருக்கிறது.

இவ்வூர் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் வாழ்ந்த பதி. பெரியதோர் இந்துக் கல்லூரியைத் தன்னகத்தே கொண்ட ஊர். நீரவாபீபுரம் என்றும் கதலீவனம் என்றும் சொல்லப்படும் இவ்வூர் இந்துக்களின் வழிபாட்டு மொழியான சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு இலங்கையில் மிகப்பெரிய பங்காற்றிய சிறப்பும் உடையது. அத்துடன் கவிஞர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் ஏன் ஆங்கிலப் புலமை மிக்கவர்களுக்கும் விருப்பிற்குரிய கிராமமாகவும் இது திகழ்கிறது.

வளம்மிக்க நீர்வையூரின் நடு நாயகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது அருள்வளர் அரசகேசரிப்பிள்ளையார் கோயில். விநாயகர், சிவபெருமான், அன்னை என்றும் மூன்று மூர்த்திகளுக்கும் மூன்று கருவறைகள். இவற்றில் அரசகேசரியான் என்றும் ராஜசிம்ம கணபதி என்றும் கூறப்படும் பிள்ளையாருக்கும் பாலாம்பிகா உடனுறை வைத்தீஸ்வரர் என்று போற்றப்பெறும் சிவனாருக்கும் முக்கிய இடமுண்டு. இவ்விரு மூர்த்திகளுக்கும் தனித்தனியே மண்டபங்கள் அமைந்து விளங்குகின்றன. இலக்கியங்களும் இருக்கின்றன.

வாயிலில் பஞ்சதள இராஜகோபுரம். ஒரு சிவாலயத்துக்குரிய அத்தனை இலட்சணங்களுமுடைய அமைப்பு, உள்வீதி வலம் வரும்போது வடக்கு வீதியில் திருமஞ்சனக் கிணறு காணப்படுகின்றது. தினமும் இறைவனுடைய அபிஷேக ஆராதனைகளுக்கு உபயோகிக்கப்பெறும் இக்கூப தீர்த்த அமைப்பு வித்தியாசமானது.

மூன்றடி விட்டமும் பதினெட்டு முழம் ஆழமும் கொண்ட இக் கிணறு மனிதர்களால் வெட்டப்பட்டோ, கட்டப்பட்டோ இருக்க முடியாது. தான்தோன்றி என்று கருதப்பெறும் இக்கிணற்றை மையமாக வைத்தே இவ்வாலய வரலாறு பேசப்படுகின்றது. தெவிட்டாத சுவைமிகு இத்தீர்த்தத் துளியுட வரலாற்றுத் துளியையும் நோக்குவோம்.

1591-1616 காலப்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவன் சிங்கைப் பரராஜசேகரன் என்ற பேரரசன்.

இந்தப் பரராஜசேகரனே நல்லூரில் தமிழ்ச் சங்கம் அமைத்த தமிழாராய்ந்திருக்கின்றான்; யமுனா ஏரியைக் கட்டுவித்திருக்கின்றான். இவ்வகையிலேயே தன்னிகரற்று விளங்கிய அவ்வரசனுக்கு உற்ற துணையாய் இருந்தவன் அவனது மருமகனும் மாமந்திரியுமான அரசகேசரி.

மந்திரி மட்டுமல்ல, காளிதாசன் வடமொழியில் செய்த இரகுவம்ச மகாகாவியத்தை தமிழில் பாடிய கவியரசனும் கூட!

அவன் ஓரிரவு கனாக் கண்டான். ஆனைமுகக் கடவுள் தோன்றி ஒரு கட்டளையிடக் கண்டான்.

கஜமுகப் பெருமான் கட்டளையின் வண்ணம் இராஜவீதி வழியே தன் குதிரையைச் செலுத்தினான், கனவில் கண்ட பனந்தோப்பின் வழியே செல்ல அதனைத் தூண்டினான். கடவு காட்டிய இடம் எது? தேடினான்... தேடினான்... இத்தேடலில் அவன் நா வறண்டது. தண்ணீர்த் தாகம் வாட்டியது. அப்பொழுதுதான் அந்த அபூர்வமான கிணற்றைக் கண்டான். நீரை அள்ளிப் பருகினான்; ஆச்சரியமான புத்துணர்வு பெற்றா

கிணற்றின் அருகில் அம்மையப்பனுடன் ஆனைமுக சிலாவடிவில் இருக்கக் கண்டான். இதுவே தான் கனவில் இடம் என உணர்ந்தான். ஆகம விதிப்படி கோயில் கட்டிக்

ஒரே கூரையின் கீழ் ஆலய அபிஷேகத் திரவியங்கள், மருந்துப் பொருள்கள், புடைவை வகைகள், மளிகைப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றை மலிவாகப் பெற்றிடலாம்.

**திருமுருகன்**

**திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்**

கரந்தன் வீதி, நீர்வேலி. (கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி)
தொ.பே. 0212217320, 077 6660211.

**ஷாம்பவி பதிப்பகம்**

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளைச் சிறந்த முறையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துத் தருபவர்கள்.

**Shampavi Printers**

276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4143
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. 077 6184425

**முக்கண்ணன் மைந்தனே விநாயகா...!**

Ceylon Grain Eleva PCC பிறிமா நிறுவனத்தின் கால்நடை தீவனத்திற்கான யாழ்.மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்

யானை மார்க் கூரைத் தகடுகளின் யாழ்.மாவட்டத்திற்க ஏக விநியோகஸ்ர்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பில் மிகக் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும் மிகவி ஏற்றி இறக்கும் சேவை.

**லம்போத**
ரான்ஸ்போ

ஜி.நிசங்கன்
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
தொ.பே: 0776341328, 0778010056



**பிறவுண்ஸ் அன்**

❄ TAFE உழவு இயந்திரம், ❄ EXIDE பற்றரி வகைகள்
என்பவற்றையும் அக்ரோ ரெக் நிறுவனத்தின்
சில்லறையாகவு

மேலும் CIC தயாரிப்புக்களான ❄ உரவகை
❄ கால்நடைத் தீவனங்கள் ❄

ஏனைய கெல்லீஸ், பாம்கெமி, மக்ரட்ஸ் கம்ப
மருந்துகள் என்பவற்றையும் வீட்டுப்பாவனைக்
சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ்

**பவானி**

இராஜ வீதி, நீர்வேலி

**கஜமுகா றேட் சென்ரர்**

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



51ஆவது படைப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்குதலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன் உரையாற்றுவதையும், தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கோழிக்குஞ்சுகளை வழங்குவதையும், மாணவர் ஒருவருக்கு 51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் பலகல்ல கற்றல் உபகரணங்களை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கவிநேசன்)

# மக்களை அலைக்கழிக்கும் நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,செப்.22

மக்களை அலைக்கழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தி எவ்வேலையையும் விரைவாகச் செய்து முடிப்பதற்கு கிராம அலுவலர்கள் முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுடன் கடந்த சனிக்கிழமை யாழ்.செலயகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிராம அலுவலர்கள் மக்களின் தேவைகளை இனம்கண்டு அதற்குப்பரிகாரம் காண வேண்டும். யாரும் தமது கடமைகளைப் புறந்தள்ளக் கூடாது. அரசு யாழ்குடாநாட்டில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இந்த வகையில் அதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளிலும் பங்களிப்பை வழங்க வேண்டும்.



யாரும் தகாத செயல்களிலும் மது போதையிலும் மற்றும் லஞ்ச ஊழல்போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது. உங்களைப் பற்றியும் ஏன் உயர் அதிகாரிகளைப் பற்றியும்கூட நாளாந்தம் ஐம்பதுக்கும் குறையாத முறைப்பாடுகள் வருகின்றன. அதே போன்று உங்களுடைய சேவையை நல்ல முறையில் பாராட்டியும் கூட எனக்கு கடிதங்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன.

எந்த வகையான பிரச்சினையாக இருந்தாலும் என்னுடன் நீங்கள் தொடர்பு கொண்டு கதைக்க முடியும். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் பொது சேவை அலுவலர்களாகவும் அரச ஊழியர்களாகவும் இருப்பதினால் மிகவும் கவனமாகப் பொறுப்புணர்வுடன் நாம் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

கிராம அலுவலர்கள் தமது கடமைக்கு உரிய நேரத்தில் செல்லாவிட்டால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள்.

இதனை நான் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றபோது அனுபவித்துள்ளேன். எனவே இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாது பொது மக்களுக்கு உரிய சேவைகளை வழங்கத் தாங்கள் முன்வர வேண்டும் - என்றார். இச்சந்திப்பின்போது யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்துகொண்டனர். (த-16-86)

# டிறிபேக் கல்லூரி வறிய மாணவருக்கு கனடா பழைய மாணவர் கிளை நிதியுதவி

தென்மராட்சி,செப்.22

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையினரால் வழங்கப்பட்ட நிதி கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நிதியாக கடந்த 20ஆம் திகதி வழங்கப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கல்வியில் ஆர்வமுள்ள நான்கு மாணவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதற்கான வங்கிப் புத்தகம் வழங்கப்பட்டன.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்லூரிப் பழைய மாணவர் சங்கச் செயலர் க.சண்முகலிங்கம் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வங்கிப் பதிவுப் புத்தகங்களை வழங்கினர்.

இதேவேளை -

கல்லூரி பிரதான மண்டபத்திற்கு கல்லூரி பழைய மாணவி திருமதி தயாபரன் பிரமீயா ஒலிபெருக்கிச் சாதனங்களை இந்நிகழ்வில் அதிபரிடம் கையளித்தார். (த-207)

# வலந்தலைச் சந்திக்கு அருகிலுள்ள மீன் சந்தையை உடன் இடம்மாற்றுக

## அபிவிருத்திக் கூட்டத்தில் கோரிக்கை

காரைநகர்,செப்.22

காரைநகர் வலந்தலைச் சந்தியில் அமைந்துள்ள மீன்சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றபோது பொதுமக்களினால் இந்தத் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயமான ஈழத்துச் சிதம்பரம் காரைநகரில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைத் தரிசிக்க தினமும் பெருமளவு பக்தர்கள் வருகை தருவதுடன் திருவெம்பா உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இங்கு வருகின்றனர்.

இவ்வாறு ஆலயத்திற்கு வருகை தரும் மக்களை வரவேற்கும் நிலையமாக காரைநகரின் நுழைவாசலில் அமைந்துள்ள மீன் சந்தை விளங்குகின்றது. எனவே இந்த மீன் சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

பொன்னாலைச் சந்தியில் இருந்து காரைநகர் மேற்கு வீதி, கிழக்கு வீதி என்பன குறிப்பிட்ட தூரம் வரை அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப்படுவதனால் குறித்த சந்தைக் கட்டடத்தைப் பஸ்தரிப்பு நிலையமாக மாற்றி மீன் சந்தைக்காக பிறிதொரு இடத்தில் கட்டடம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை பொதுமக்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. (த-250)

# வடமராட்சி கிழக்கில் திங்கள் முதல் மேலும் 5 பாடசாலைகள் ஆரம்பம்

## கொத்தணி முறையில் அவை செயற்படும்

பருத்தித்துறை,செப்.22

வடமராட்சி கிழக்கில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை முதல் மேலும் ஐந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள பாடசாலைகளைக் கொத்தணி முறையில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கல்வி வலயம் ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, தாளையடி றோ.க.த. க. பாடசாலை, செம்பியன் பற்று றோ.க. த.க. பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய ஐந்து பாடசாலைகளே கடந்த திங்களன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் ஏற்கனவே இயங்கி வரும் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையுடன் இணைந்து செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் இயங்குகின்றன.

உடுத்துறை மகாவித்தியாலயத்துடன் இணைந்து மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும் , தாளையடி றோ.க. த.க. பாடசாலையும் இயங்கவுள்ளன.

அதேவேளை-

இங்குள்ள 13 பாடசாலைகளில் ஏனைய 7 பாடசாலைகளையும் வெகுவிரைவில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வடமராட்சிக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-190-236-16)

# யாழ்.ஆஸ்பத்திரியிலுள்ள வேளாங்கன்னி மாதா ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை,செப்.22

யாழ்.போதனா வைத்தியசாலை புனித வேளாங்கன்னி அன்னை ஆலயத் திருவிழா நாளை பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திரிதின வழிபாடுகள் நடைபெற்று 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு குணமாக்கல் வழிபாடும் நற்கருணை விழாவும் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியும் அன்னையின் ஆசீரும் இடம்பெறும். (த-135)

# மதகு புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.22

நல்லூர் இந்து விடுதி, நல்லை ஆதீனம் ஆகியவற்றின் பின்புறம் பருத்தித்துறை வீதியில் உள்ள மதகு புனரமைப்புப் பணி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

2 மில்லியன் ரூபா செலவில் சுமார் 10 மீற்றர் வரை நீளமான இந்த மதகை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அடுத்துவரும் 8 நாள்களுக்குள் திருத்தியமைக்கும் எனத் தெரிகின்றது.

மதகு புனரமைப்பு வேலைகள் இடம் பெறுவதால் இந்தப் பாதைப் போக்குவரத்து மூடப்பட்டுள்ளது. வாகனங்கள் இந்து விடுதிக்கு முன்புறம் உள்ள வீதியால் போக்குவரத்துச் செய்கின்றன. (த-7)

# மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உணவல்லாத பொருள்கள்

தென்மராட்சி,செப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் மீளக் குடியமர்ந்து இதுவரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் உணவுப் பண்டம் அல்லாத பொருள்கள் வழங்கப்படாதவர்களுக்கு பொதிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளன.

இதுவரை பொதிகள் பெற்றுக் கொள்ளாத 125 குடும்பங்களின் தலைவர்கள் குடும்ப அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (த-207)




# பகுதியாகச் சேதமடைந்த வீடுகளைத் திருத்த உதவி

தென்மராட்சி,செப்.22

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களின் பகுதிசேதமடைந்த வீடுகள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இந்திய அரசின் வீடமைப்புத் திட்ட நிதியில் தலா 2 லட்சம் ரூபா செலவில் புனரமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென பிரதேசத்தில் 250 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தோரில் 135 பேருக்குப் புதிதாக வீடுகள் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரடிச் சுவாமிகளில் மூத்தவர் கடையிற் சுவாமிகள்

**புகழ்பூத்த மகான் யோகர் சுவாமிகளுக்குக் குருவாய் அமைந்த செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் அருட்கடாட்சத்தால் சித்துக்கள் கைவரப் பெற்றவர். அத்தகு மூத்த சித்தரான கடையிற் சுவாமிகளது 119 ஆவது குருபூசைத் தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள்.


ஈழத்தில் நான்கு பெரும் திசைகளிலும் நான்கு பெரும் சமாதிக் கோயில்கள் இருக்கின்றன. வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் கடையிற் சுவாமிகள் சமாதியும் தெற்கே நாவலப்பிட்டி குயீனஸ் பரியில் நவநாத சித்தரின் சமாதியும் மேற்குத் திசையில் கொழும்பு முகத்துவாரத்தில் பெரியானைக்குட்டிச் சுவாமிகளின் சமாதியும் கிழக்குத் திசையில் காரைதீவில் சித்தாதானைக்குட்டி சுவாமிகளின் சமாதியும் விளங்குகின்றன. பாரத நாட்டிலிருந்து ஈழம்வந்த இந்த நான்கு பெரும் மகான்களின் பரம்பரை ஒன்று இன்று ஈழம் முழுவதும் காலூன்றிப் பரவியுள்ளது. இந்த நால்வரில் ஈழத்திற்கு முதன்முதலில் வருகை தந்தவர் கடையிற் சுவாமிகள் ஆவர். ஆதிகடைநாதன் என்று ஆரா அன்புடன் கொண்டாடப்படும் அருள் வள்ளலாகிய யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் இலங்கையில் ஓர் அருட் பரம்பரைக்கு மூல வித்திட்ட குரு முதல்வராவார்.

தமது உத்தம சீடரும் தம்மைப்போல் ஞான சித்தருமாகிய ஸ்ரீ சச்சிதானந்த சிவா அபிநவநரசிம்மருடன் கிராமம் கிராமமாய் சென்று மக்களுக்குச் சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினார். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலேதான் கடையிற் சுவாமி முத்தியானார்.

அக்காலத்திலேயே வட பாகத்திலே ஊர்காவற்றுறை துறைமுகமாக விளங்கியது. இந்தியாவிலிருந்து கப்பலில் இலங்கை நோக்கிவந்தார். முதன்முதலில் அவருக்குத் தெரிந்த இடம் எழுவைதீவாகும். இக்காரணம் கொண்டே அமைந்தது. ஊர்காவற்றுறையிலிருந்து கால்நடையாக யாழ்ப்பாணம் நோக்கி வந்தார். வரும்போது சுவாமிகள் முதன்முதலில் தங்கியிருந்த இடம் மண்டைதீவாகும்.

அந்நாளில் யாழ்ப்பாணத்தில் வையிர முத்துச் செட்டியார் என்பவர் இருந்தார். அவர் அடிக்கடி இந்தியாவிற்கு யாத்திரை செய்யும் வழக்கம் இருந்தது. தற்செயலாக சுவாமியைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாரதநாட்டிலே பெரியவர்கள் வழிகாட்டல்களாக இருக்க தமது நாட்டிலே எவருமே இல்லை என்பது செட்டியாருடைய கவலை. நீங்கள் ஈழத்திலும் சமய மறுமலர்ச்சியும் அடியார் பணியும் தலை சிறந்து விளங்கவேண்டும் என வேண்டினார்.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை செட்டியார் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று தமது குருநாதனைத் தமக்குத் தந்துவிடல்



வேண்டும் என்பது அன்று அவருடைய உருக்கமான வேண்டுகோள் வழிபாடு முடிந்து பூரண மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

செட்டியார் வீட்டிலேயே சமையல் முடியுந்தறுவாயில் இருந்தது. அத்தருணம் சுவாமியார் ஒருவர் புகுந்தார். அம்மையார் முகம் மலர வரவேற்றார். பசிதாங்க முடியவில்லை. உணவு பரிமாறவேண்டும் என்றார். அம்மையார் தயங்கினார். கணவர் வரவில்லை என்பதுதான். பரபரப்புடன் ஆசனம் அமைத்து இலை போட்டார். இன்னும் இலை போடு என்றார். இரு இலைகளிலும் உணவு பரிமாறி முடிந்ததும் செட்டியார் வீட்டுக்குள் நுழைந்தார். அன்று கும்பிட்ட பயனைக் கையோடேயே கண்டு கொண்டார். குருவருளும் சீடர் அன்பும் ஒருங்கு கலந்துவிட்டன.

செட்டியார் உடல், பொருள் ஆவி மூன்றையும் குருநாதனுக்கே தத்தம் செய்தார். அத்தருமசாதனம் இன்று கந்தர்மடத்தில் அன்னசத்திரம் என்ற பெயரோடு விளக்கமுற்றது. அங்கேதான் சுவாமிகளுடைய சீடர் சின்னச்சாமி அவர்களுடைய சமாதி உள்ளது.

பெரியகடையில் மிகப்பெரிய புடைவைக் காரர் ஒருவர் ஒரு தீபாவளித் தினத்திலே சுவாமிகளை இடைமறித்து விலை யுயர்ந்த பட்டாடை ஒன்றை அவர் தோளிற் போர்த்தி மேனியிற் சந்தனம் பூசி, மலர் மாலை அணிவித்து வணங்கினார். அவ்வழியே தீண்டாச் சாதியான் ஒருவன் சென்றான். அவனை அழைத்துத் தன் தோளிற் கிடந்த பட்டாடையைக் கழற்றி தோளிற் போர்த்து ''முற்பிறப்பிலே நேபாளராசா நீ போ'' எனக் கூறிவிட்டு தம் வழியே சென்றார்.

பெரியகடைப் பகுதி மட்டுமல்லாது மண்டைதீவிற்கு போய்வரும் வழக்கமும் அவரிடம் இருந்தது. அதனால் மீனவரிடையேயும் அவரை வணங்கும் அடியார்கள் இருந்தார்கள்.

ஒரு சமயம் ஒரு கொட்டிலில் அழுகுரல் கேட்டது. அவ்வீட்டின் தலைவன் மீன் பிடிக்கச் சென்றவன் காற்றுப் பிசகால் கடலில் அலைந்து வழி தப்பி வீட்டுக்கு மீளவில்லை என்றாள் மனைவி. சுவாமி உடனே பனைமட்டை எடுத்து நடுவீட்டில் நின்று கூத்தாடி ''ஏலையா ஏலேலோ'' என்று வள்ளம் வலிப்பது போல் வலித்தார்.

அவ்வேளை மீனவன் வீடு வந்தான் வீட்டு நிலம் கிளறி இருப்பதைக் கண்டு கேட்டான். அதற்கு மனைவி ''இது பைத்தியம் கூத்தாடியது'' என்றாள். இதைக் கேட்ட மீனவன் பூரிப்படைந்தான். அங்கே வள்ளம் வலித்தது போன்றிருந்தது. இங்கேயும் இப்படியா என்று கண்ணீர் ததும்பினான்.

சுவாமியினுடைய திருவுருவம் கவர்ச்சிகரமாயும் உண்மையுடையவர்க்குப் பயபக்தி விளைப்பதாயுமிருக்கும். அவ்வாறான உயரமுள்ள பூரித்த திருமேனி, முழந்தாள் வரை நீண்ட திருக்கரங்கள், நீண்டகன்ற திருமூக்கு, விரிந்தசையுங் குஞ்சி, ஒளி விளங்கும் எலுமிச்சம் பழவர்ணம். இவை அவர் தம் திருவருட் பொலிவாகும்.

அரையில் வேட்டியும் தோளில் சால்வையும் அவரின் திருவுடையாகும். அது பெரும்பாலும் கரு நிறமாகவே தோன்றும். வெண்சீலை வேய்ந்த குடையொன்று என்றும் அவர் வசம் இருக்கும். உலாவும் போதேல்லாம் அதனைக் கக்ஷத்தில் வைத்துக் கொள்வார். நெற்றிலே திலகம் ஒன்று பளபளக்கும். இத்திருக்கோலத்துடனே என்றும் ஆனந்தவடிவாகக் காட்சியளிப்பார். மெட்டாக அடிபெயர்த்து நடத்தல், ஓடுதல், உலாவுதல், கொஞ்சுதல், குழைதல், அடித்தல், அணைத்தல், ஏசுதல் போன்ற கனந்ததீத நிலையிலேயே சுவாமிகள் நிகழ்த்திய அருள் நடனங்களாகும்.

மாமிசம் புசித்தல், மது அருந்துதல், போன்ற வழக்கங்களையும் கொண்டிருந்தார்.

இவ்வகையாகச் சுவாமிகள் பல தடவை நல்லூர் பக்கத்திலும் உலாவியதுண்டு. அக்காலத்தில் செல்லப்பர் என்ற ஒரு பக்குவசீலர் வாழ்ந்துவந்தார். அவர் அவ்விடம் சென்று உலாவும் கடையிற் சுவாமியை பல தடவை உற்றுநோக்கினார்.

இங்ஙனம் அருட்பெரு விளையாடல்கள் புரிந்து அன்பர்களை ஆட்கொண்டிருந்த கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதிகளிலும் மண்டைதீவிலும் உலாவியவராவார்.

பிற்காலத்திலே சுவாமிகள் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த நீராவியடி என்னும் இடத்தில் தங்கிவிட்டார்.

இவ்விடம் நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் தென்மேற்குத் திசையாகக் கோயில் எல்லையிலிருந்து சுமார் 50 யாருக்கு அப்பால் உள்ளது. கோயிலின் மேற்கு வீதி வழியாகத் தெற்குச் செல்லும் பாதையின் ஓரத்திலே உள்ள அந்த இடத்தில் சுவாமிகள் சமாதியானார்.

அந்த இடத்தில் சுவாமியின் சமாதி நிலையும் கைகூடியது. சுவாமிகள் கர வருடம் புரட்டாதி மாதத்தில் பூரணையும் பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய புண்ணிய வேளையில் மகாசமாதி அடைந்தார். அந்திம காலத்திற் சுவாமிகளுடனிருந்த அன்பர்களுடைய முயற்சியால் சமாதிக் கோயில் ஒன்று எழுப்பப்பட்டது.

தற்போது அக்கோயில் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மூலஸ்தானத்தில் சிவலிங்கம் (ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாதன் தேவஸ்தானம்) இருப்பதால் சிவன் கோயில் என்றே அழைப்பார்.

அலங்காரத் திருவிழா, பிரதோஷம், சிவராத்திரி, கௌரி விரதம், நவராத்திரி போன்றவையும் நடைபெற்று வருகின்றன. கடையிற் சுவாமியின் குருபூசை தினத்தன்று விசேட அபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

- வாணி

நேற்றைய உதயனில் 'இந்திய - சீனத் தலையீடுகளால் திண்டாடும் தெற்காசிய நாடுகள்' என்னும் தலைப்பில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி நாளை உதயனில் வெளிவரும்.




## Uk யில் படிக்கவும் வேலை செய்யவும் ஓர் வாய்ப்பு !!

2010 நவம்பர் மாதத்திற்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன!
விரையுங்கள்!

குறைந்தபட்ச மாணவர்களே தெரிவு செய்யப்படுவர்.
உடனடியாக CAS கடிதம் கொடுக்கப்படும்.

டிப்ளோமா
- உயர்தர டிப்ளோமா
- பட்டதாரி டிப்ளோமா
- உயர்தர பட்டதாரி டிப்ளோமா
- கௌரவ பட்டதாரி டிப்ளோமா மற்றும் MSC / MBA பட்டதாரி படிப்பிற்காக

உங்கள் அருமையான சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!!

Tier 4, "A" தராதரத்திற்கு மேலான கல்லூரி, பல்கலைக்கழகங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.
உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

COLLEGE OF MANAGEMENT STUDIES (CMS)

Jaffna Branch
Mr. Shethooran - Mob: 077 888 8616 Mrs. P. Kokulan - Mob: 077 351 5552
No. 62, Vembadi Rd, Jaffna.
Vavuniya Branch
Mr. S. Kamaladasan - Mob: 077 605 9662

Head Office:
No.50, 2/11 Galle Road, Colombo Plaza, Colombo 6.
Ms. C. Indrarathna. Tel No: 0113158223
web: www.cmslk.com / email:chethi009@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மதுப்போத்தல் வழங்கும் மலையக அரசியல்வாதிகள்!

## யுனிசெப் அதிகாரி விசனம்

நுவரெலியா, செப். 22

மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் அதிகரித்துவரும் மதுபாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போது தான் சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். தேர்தல் காலங்களில் மலையக அரசியல்வாதிகளே இளைஞர்களுக்கு மதுப்போத்தல்களை வழங்கும் துர்ப்பாக்கியம் இங்கு தான் காணப்படுகின்றது - என யுனிசெப் நிறுவன அதிகாரி முன்ஸிக் மொஹமட் தெரிவித்தார்.

கடந்தவாரம் நோர்வூட் சமூக நல்வழி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மது ஒழிப்பு சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்..

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடளாவிய ரீதியில் நாளாந்தம் இறப்பவர்களில் கணிசமானோர் மதுவுக்கு அடிமையானவர்கள் என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மதுவுக்கு அடிமையாகும் இளைஞர் - முதியோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக மதுபாவனையால் நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்குவருவோருக்கு ''இது மதுவினால் ஏற்பட்ட நோய்'' என்று வைத்தியர்கள் கூறுவதில்லை .

இன்று எமது நாட்டில் தேசிய வருமானம் 10 கோடி ரூபா என்றால், வைத்திய செலவு 30 கோடி ரூபாவாக இருக்கிறது. இந்த நிலையில் விலைவாசி அதிகரிப்புக் குறித்து அரசை விமர்சிப்பதில் எதுவித பிரயோசனமும் இல்லை.

ஆனால் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் பெருந்தோட்ட மக்கள் செறிந்து வாழும் மத்திய மாகாணத்திற்கு வேறாகவும், ஏனைய எட்டு மாகாணங்களுக்கு வேறாகவும் உள்ளமை தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அமைச்சர் பஷில் ராஜபக்ஷவும் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் தடைக்கல்லாக உள்ள மதுவை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர் இது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டி விடயம்.

ஆனால் நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட ஹட்டன், டிக்கோயா, வட்டவளை, கினிகத்தேன, பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா, சாமிமலை ஆகிய நகரங்களில் காலை 6.00 மணி முதல் இரவு 11 மணிவரை 'வைன் ஸ்டோர்'களிலும் 'றெஸ்ரோரன்டு' களிலும் மதுபான விற்பனை இடம்பெற்று வருகின்றது. இது கவலைக்குரிய விடயமாகும்.

கலால் திணைக்களமும், இப்பகுதிக்கான பொலிஸ் நிலையங்களும் இதனைக் கண்டும் காணாமலும் உள்ளன, சில அதிகாரிகள் கையூட்டல் பெறுகின்றனர் என்றும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்திய வம்சாவளி மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மட்டும் ஏன் இந்த அவலநிலை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.




இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில், ஜனாதிபதியும் அவரது சகோதரரும் எடுத்துக் கொண்டு மது ஒழிப்பு திட்டத்தைக் கடைபிடிக்கும் பட்சத்தில் பெருந்தோட்டப் பகுதியில் சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களின் புதுயுகம் காணலாமே தவிர வேறுவழி இல்லை.

இது தொடர்பில் மலையகத் தொழிற்சங்க அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் வாதிகள் தமது சுகபோகங்களுக்காக சாராயத்தை ஒரு கருவியாகப் பாவிப்பது வெட்கத்திற்கும் வேதனைக்குமுரிய ஒன்று.

இவர்கள் மக்களுக்கு சரியான சேவையைச் செய்யும் பட்சத்தில் ஏன் தேர்தல் காலங்களில் பெருந்தோட்டப் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு இரவோடு இரவாக சாராயப் போத்தல்களை வழங்க வேண்டும்?.

சாராயக் கலாசாரமற்ற தேர்தல் நடைபெறுமானால் அவர்கள் தேசத் தொண்டர்களாக மதிக்கப்படுவர். மலையகத்தில் மறுமலர்ச்சி ஏற்படும். மலையகச் சிறார்களுக் குப் போஷாக்கு அவசியம்.

அரசியல்வாதிகள் வெறுமனே மேடைகளில் தாங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் செய்கிறோம் எனத் தம்பட்டம் அடிப்பதில் எதுவித பலனும் இல்லை - இப்படி அவர் தெரிவித்தார். (ளி)

# காதலிமீது சந்தேகம் கொண்டு அவரை பெற்றோல் ஊற்றி எரிக்க முயன்ற காதலன்

கண்டி, செப். 22

எட்டு வருடங்கள் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய ஒருவர் தனது காதலி மீது பெற்றோல் ஊற்றித் தீ வைக்க முயன்ற சம்பவமொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டியில் இடம்பெற் றுள்ளது.

தனது காதலியைக் கரம்பிடித்து சிறப்பான வாழ்க்கையை நடத்துவதற்காக வெளிநாடு சென்ற இவ்விளைஞர் எட்டு வருடங்கள் கழித்து நாடு திரும்பியுள்ளார்.

எனினும் தனது காதலி, வேறு ஒரு இளைஞருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவரைப் பெற்றோல் ஊற்றிஎரிக்க முற்பட்டுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (ளி)

# பராமரிப்புக்கு விட்ட குழந்தையை சித்திரவதை செய்த தம்பதியர் கைது

கண்டி, செப்.22

வெளிநாடு சென்ற தமது உறவுப் பெண்ணொருவரின் இரண்டுவயதுக் குழந்தையைப் பொறுப்பேற்ற தம்பதியர் அக்குழந்தையை அடித்தும், சிகரட்டால் சுட்டும் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹிராந்து கோட்டே பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட குழந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டு ஹிராந்துகோட்டே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

குழந்தையின் தந்தை இறந்துவிட்டார். தாய் தொழிலுக்காக வெளிநாடு சென்று விட்டார். அவர் தனது குழந்தையை உறவினர்களான இத்தம்பதியினரிடம் ஒப்படைத் துச் சென்றுள்ளார். குழந்தையின் பராமரிப்புக்காக அவர் மாதாந்தம் பணம் அனுப்பியும் வந்துள்ளார்.

இந்த நிலையில் குறிப்பிட்ட தம்பதியர் குழந்தையைக் கொடூரமாகச் சித்திரவதை செய்து வந்துள்ளனர். இது குறித்து பொலிஸ் சிறுவர் மகளிர் பிரிவுக்கு அயலவர்கள் முறைப்பாடு தெரிவித்தனர். இதையடுத்து பொலிஸார் 50 வயதுடைய கணவரையும், 48 வயதுடைய அவரது மனைவியையும் கைது செய்தனர். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ளி)

# வெல்லாவெளி விசேட அதிரடிப்படை முகாம் அகற்றல்; இராணுவம் மையம் கொள்ளலாம் என மக்கள் அச்சம்

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேசம் வெல்லாவெளி கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையினரின் முகாம் கடந்த சனிக்கிழமை முதல் படிப்படியாக அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இப்பகுதியில் மீண்டும் இராணுவத்தினர் முகாமிடும் சாத்தியம் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போரதீவுப்பற்றுப் பிரதேசம் விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பின்னர் முற்றிலும் இராணுவமயப்படுத்தப் பட்டது.

இராணுவமயப்படுத்தலைத் தொடர்ந்து தமிழர்களின் பூர்வீக நிலங்கள் எங்கும் படையினரின் முகாம்கள் முளைத்தன. அவ்வாறு அமைக்கப்பட்ட முகாம்களில்




ஒன்றே இந்த வெல்லாவெளி விசேட அதிரடிப்படை முகாமாகும்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த முகாம் அகற்றப்படுவது குறித்து கிராம மக்கள் பெரும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

தங்களது பூர்வீக நிலங்கள் மீண்டும் தமக்குக் கிடைப்பதில் அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் இப்பகுதியில் இராணுவத்தினர் முகாமிடலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளதால் கிராம மக்கள் தரப்பில் பெரும் அச்சம் கிளம்பியுள்ளது.

தமது நிலங்கள் கிட்டாது போவதுடன், மீண்டும் தாம் கெடுபிடிகளுக்கு ஆளாகலாம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## லண்டன் றோட்டறிக் கழகம் நிதியுதவி

மட்டக்களப்பு, செப்.21

கல்முனை றோட்டறிக் கழகத்துக் கூடாக மருதமுனை ஹியுமன் லிங்க் மாற்றுத் திறன் கொண்ட மக்களுக்கான நிறுவனத்தின் செயற்றிட்டங்களுக்காக, லண்டன் றோட்டறிக் கழகம் நிதியுதவி செய்துள்ளது.

லண்டன் றோட்டறிக் கழகத்தின் 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மேற்படி நிறுவனத்திடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கையளிக்கப்பட்டது.

ஹயுமன் லின்க் நிறுவனப் பொது முகாமையாளர் ஏ.கமறுதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு காசோலையைக் கையளித்தார்.

கல்முனை றோட்டறிக் கழகத் தலைவர் ரீ.சுபராஜன், செயலாளர் ஹென்ரி அமல்ராஜ், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டனர். (ளி)

# முப்பது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதிகள்

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு மாவட்ட தென்எல்லையில் அமைந்துள்ள துறைநீலாவணைப் பிரதேசத்தின் கிழக்கு, மேற்கு வீதிகள் மூன்று தசாப்த காலமாகப் புனரமைக்கப் படவில்லை. இவ்வீதிகள் குன்றும், குழியுமாகக் காட்சி தருகின்றன என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

'மஹிந்த சிந்தனை'யின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. எனினும், இவ்வீதிகள் புனரமைக்கப்படாமல் ஏன் புறந்தள்ளப்படுகின்றன?- என்றும் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

துறைநீலாவணையில் அமைந்துள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சுகாதார மத்திய நிலையம் முதலான இடங்களுக்குச் செல்லும் வீதிகளே இவ்வாறு புனரமைப்புத் திட்டத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ளன என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

கிழக்கு - மேற்கு வீதிகள், ஏனைய உள் வீதிகள் ஆகியவற்றின் சீர்கேடுகள் தொடர்பாகப் பல அரசியல்வாதிகளிடம் முறையிடப் பட்டும், கண்ட பலன் ஏதுமில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் இச்சீர்கேடுகளை நீக்க முன்வர வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# அல் - மர்ஜான் மு. கல்லூரிக்கு போட்டோப் பிரதி இயந்திரம்

மட்டக்களப்பு, செப்.22

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எஸ்.எஸ்.பி.மஜீத்தின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட போட்டோப்பிரதி இயந்திரம் சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு கையளிக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் நினைவுதின துஆப் பிரார்த்தனை கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் இக்கல்லூரிக்கு இவ்வியந்திரம் கையளிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் கே.எல்.ஏ.தகூல் கையளிப்பு வைபவத்துக்குத் தலைமை வகித்தார். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எஸ்.எஸ்.பி. மஜீத் இயந்திரத்தைக் கையளித்தார். அத்துடன் மர்ஹூம் அஷ்ரப் ஞாபகார்த்த உரையொன்றையும் அவர் நிகழ்த்தினார்.

மேசிகோப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பல்லின சமூக இலச்சினையை உருவாக்கும் சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற வை. எவ்.சலீமா என்ற மாணவிக்கு மாகாண சபை உறுப்பினர் சைக்கிளைப் பரிசாக வழங்கினார். (ளி)

# இடி,மின்னல் தாக்கத்தால் பாடசாலை மாணவன் பலி

திருகோணமலை, செப்.22

திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்ட இடிமின்னல் தாக்கத்தினால் பாடசாலை மாணவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் 9இல் கல்வி பயிலும் நிகார் நிப்லாஸ்(வயது - 14) எனப் வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலை முடிவடைந்தபின் உதைபந்தாட்டப் பயிற்சியில் சக மாணவர்களுடன் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கிண்ணியா வைத்தியசாலையிலிருந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**GERMAN SWISS**

மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: 10, PALALY ROAD, JAFFNA. T.P.: 0771604823 (103656)

**காணி விற்பனைக்கு**

சுச்சமோட்டை, பிரதான வீதியில் 3 பரப்பு குளி 7 3/32 விஸ்தீரணமுடைய வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. (103653)
தொடர்பு: 0777726874

**கிறீன் காட் வீசா**

அமெரிக்கா கிறீன் காட் லொத்தர் வீசா விண்ணப்பப்படிவங்களை இலவசமாக பெற்று கொள்ள Rs. 15/= முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதிய கடித உறையை அனுப்ப வேண்டிய முகவரி

" INTERNET" Bristol
Cyber Cafe No.8/3/4, Bristol Street,
Colombo- 01
Tel : 2393919 , 0774276579

பதிவு இல : 44843

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **773**
சீட்டிழுப்பு திகதி **20.09.2010**

எழுத்து: **K**

வெற்றி இலக்கங்கள்: **21 52 69 70**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 23,784,204/= | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 330 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 633 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16016 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9113 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 227316 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35759 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **9,760,620.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 24,337,248.00**

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு கமலநாதன் (வவா)

பிறவுண்றோட், ஐந்தாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கமலநாதன் 19.09.2010 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் குணேஸ்வரியின் அன்புக் கணவரும் பாத்தீபன், குமுதா, தனுஷா, நளினி, ஞானகி, கார்தி ஆகியோரின் அன்புமிகு தந்தையும் சண்முகராசா, ஜீவராசா, ஜெயா, ரஜினி ஆகியோரின் அன்புமிகு மாமனும் ஜஸ்லீனா, வினோசன், விதுஷா ஆகியோரின் அருமைப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (22.09.2010) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளாக வீதி,
திருநெல்வேலி. (103648)

தகவல்:
[illegible]

## அளவுக்கதிகமாக பனடோல் அருந்திய யுவதி மயக்கம்

தென்மராட்சி, செப்.22

காய்ச்சலின் தாக்கம் அதிகரித்தால் அளவுக்கதிகமான பனடோலை அருந்திய யுவதி மயக்கமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தேவேந்திரா சுவேந்திரா (வயது-23) என்னும் யுவதி மயக்கமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-207)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் செல்லத்துரை



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லத்துரை 20.09.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், கனகநாயகம் (ஜேர்மனி), தர்மபாலா (இந்திரன், லண்டன்), விஜயலக்சுமி (ஆசிரியை, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), தர்மதேவி (பவானி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசிகலா (லண்டன்), சாந்தகுமார் (தொ.நு.உத்தியோகத்தர், விவசாயபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), ஸ்ரீகணேசன் (கண்ணன், சங்கானை ப.நோ.கூ.ச) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோசன், மதுரன், ஆதவன் (லண்டன்), ஜிதுர்சனன், ஜிருசிகன் (மாணவர்கள், யாழ். இந்துக் கல்லூரி), ஜிருசிகா (மாணவி, யா.இ.ஆ.பா), ஜிதுசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.11 மணிக்கு தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அடைக்கல மாதா கோயிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை (103636)

தகவல்:
குடும்பத்தினர்

# வேலணை பிரதேச சபை - வேலணை
# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன

கேள்விப்பத்திரம் வழங்குதல்:
23.09.2010 முதல் 29.09.2010 பி.ப. 2.30 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல்: 01.10.2010 நண்பகல் 12 மணிவரை.

கேள்வி திறக்கும் காலம்: 01.10.2010 பிற்பகல் ஒரு மணி

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவு தரம் |
|---|---|---|---|
| சிவலைப்பிட்டி சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடம் அமைத்தல்- புங்குடுதீவு | 7500.00 | 560.00 | C 10 |
| சாட்டி அந்தியேட்டி மடம் அமைத்தல்- வேலணை | 24000.00 | 560.00 | C 09 |
| நுணுக்கல் வீதி புனரமைப்பு- புங்குடுதீவு | 7500.00 | 560.00 | C 10 |
| கோடாரி கொடுத்தான் வீதி புனரமைப்பு- நயினாதீவு | 7500.00 | 560.00 | C 10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து எம்மால் கோரப்படுகின்றன.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளை **செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை** என முகவரியிடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரத்தைக் குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்** அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி திறக்கும்போது கேள்விகாரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.


பிரதேச சபை
வேலணை
*20.09.2010* (சி/570657)

**கெஜரெத்தினம் தவராசா**
செயலாளர்,
பிரதேச சபை - வேலணை.

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா கிட்ணர்

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி)



50, இராஜ வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் 3/100, Pendle hill, Australia ஐ வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகம்மா கிட்ணர் 18.09.2010 சனிக்கிழமை சிவபத மடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- அம்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை-அன்னமுத்து தம்பதியரின் மருமகளும் கிட்ணர் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்- கோப்பாய்) அவர்களின் பாசமிகு மனைவியும் உதயகுமார், யசோதா, உருத்திரகுமார், சாந்திக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, நல்லம்மா மற்றும் செல்லம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சியாமளா, துஷ்யந்தி, மேகலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2010) புதன்கிழமை அவுஸ்திரேலியாவில் இடம்பெறும்.

3/100, Stapletion Street
Pendle hill, WSW 2145, Australia
[illegible] (103650)

தகவல்:
தம்பிப்பிள்ளை குடும்பத்தினர்.
0214901075
செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய்

# கருணாகரப் பிள்ளையார் கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 22.09.2010





### ஆலய வரலாறு

பல்வகைச் செல்வங்களும் மலிந்து விளங்கும் உரும்பிராய் பதியின் கற்பகமெனக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார் கருணாகரப் பிள்ளையார். கருணாகர ஐயர் என்பவரால் பூசிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வந்தமையால் கருணாகரப்பிள்ளை யார் என்ற பெயர் வந்ததென்பர் பெரியோர்.

உரும்பிராய் பதியின் மேற்கு எல்லையில் சைவாசாரம் மிக்கவர்க ளும், விருந்தோம்பும் சிறப்பை இயல்பாகப் பொருந்தியவர்களும், இசைவல்லுநர்களும் நிறைந்து விளங்கும் இணுவிலம்பதியின் கிழக்கு எல்லையில் மருத நிலங்களாலும், சோலைகளாலும் சூழப்பட்டு அமைந்திருக்கிறது கருணாகரப் பிள்ளையார் ஆலயம். ஆலயம் இருக்கும் குறிச்சி பரத்தைப்புலம் எனப்படும். எனவே உரும்பிராய் பரத்தைப் புலக் கருணாகரப் பிள்ளையார் என்னும் பெயர் சிறப்பாக வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்தை அரசு புரிந்த தமிழ் அரசனான விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி காலத்திற்றோன்றிய பூர்வ ஆலயங்களில் இவ்வாலயமும் ஒன்று என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். பலவித மரங்களும் அடர்ந்து சூழ்ந்து இருந்த இவ்விடத்தில் ஓர் அரச மரத்தின் கீழ் ஒரு பிள்ளையார் இலிங்கம் இருந்ததாகவும், அது தோன்றிய காலம் எவருக்கும் தெரியாதென்றும் கூறுவர்.

பாதசாரிகளும், கிராமவாசிகளும் இந்த இலிங்கத்தைப் பூசித்து வழிபட்டனரென்றும், அந்த வழியால் ஆசிரய பரிவரித்தனஞ் செய்து வந்தவரான கூழங்கைச் சக்கரவர்த்தி இலிங்கத்தையும் எழில் நிறைந்த காட்சிகளையும் கண்டு அந்த இலிங்கத்தைப் பூசித்து பெரும் பேறு பெற்றாரென்றும் அதனால் பெருமகிழ்ச்சியுடையவராய்ச் செங்கற்களால் அவ்விடத்தில் ஓர் ஆலயத்தை அமைத் தாரென்றும், செங்கற்களால் ஆன ஆலயம் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்டதென்றும், பின் குழை மண் கொண்டு கருணாகரர் என்னும் பெயருடைய ஐயரவர்கள் அதனைப் புதுக்கி அமைத்தார் என்றும் கர்ண பரம்பரையாய்ப் பேசப்பட்டு வருகிறது.

ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலயத்துக்கும் கருணாகரத் தொண்டமானுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்றும், மிகமிகப் பழமையான ஆலயம் இது என்றும் கூறுவர்.

### அந்தணர் பரம்பரை

கருணாகர ஐயர், பரம ஐயர், அப்புக்குட்டி ஐயர் முதலானோர் இவ்வாலய வளர்ச் சிக்கு உறுதுணையாக இருந்தார்கள். பிரம்மஸ்ரீ அப்புக்குட்டி ஐயர் அவர்கள் காலத்தில் மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்பமண்டபம் என்பன அமைக்கப்பெற்றன. அக்காலங்களிலும் நித்திய, நைமித்திக பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. 1910 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் திகதி உரும்பிராய் பெரியாரும், பிரபல வைத்தியருமான வயிரவநாதர் வல்லிபுரம் என்பவர் கொடி ஸ்தம்பம் ஒன்றினைச் செய்து கொடுத்ததுடன், விழாவையுமேற்று நடத்திவந்தார். அன்று தொடக்கம் ஆவணிச் சஷ்டியில் துவஜாரோகணத்துடன் விழா ஆரம்பமாகி மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

## மலராக்கம்: தேர்த் திருவிழா உபயகாரர்

### உற்சவச் சிறப்பு

ஆவணி பூர்வபக்கச் சதுர்த்தியை முதலாகக் கொண்டு, ஆவணிச் சஷ்டியில் துவ ஜாரோகணமாகிப் பத்து நாள்கள் மஹோற்சவம் நடைபெறும். அடியார்களுக்கு ஆனந்தமான காலம். கருணாகரன் கருணை மழை பொழியும் நாள்கள். அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களைப் பூசைகள் செய்வித்தும், அங்கப் பிரதக்ஷணம் செய்தும், விரதமிருந்தும், காவடி முதலியன எடுத்தும் நிறைவேற்றுவர். மெய்யடியார்கள் எங்கே நினைப்பினும் அங்கே வந்து எதிர் நிற்பார் கருணாகரப் பிள்ளையார். அவரருளை வேண்டி உரும்பிராய், இணுவில், கோண்டாவில் உட்படப் பல பதி மக்களும் ஓடோடி வருவர். ஆலயத்துக்கு அயலில் உள்ள கிணற்றில் நீராடி, தோய்த்துலர்ந்து வஸ்திரத்தைத் தரித்தவாறு வழிபடுவதில் அடியார்களுக்கு ஒரு பேரின்பம். அருட் கருணாநிதியாகிய கருணாகரன் தம்மை வழிபடுபவர்களுக்குக் கருணை மழை பொழிந்துகொண்டேயிருக்கின்ற காட்சியை இரதோற்சவ விழா காட்டுவதாயமையும். சித்திர வேலைப்படாமைந்த சுந்தரத் தேரில் கருணாகரப் பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். இக் காட்சிகளைக் கண்டவர்களும், காண இருப்பவர்களும் புண்ணியசாலிகளே.

### சித்திரத் தேரில் வாரீர்! வாரீர்!!!

பஞ்சாட்சரத்தில் பதித்த ஈஸ்வரன் பக்குவத்தை
பார்உயர்த்த வந்த கருணாகரா!
விஞ்சு புகழ்சித்திரத் தேர் அமைத்தார்அன்பர்
விண்மேவு அருள் பரப்பமிக்கோர் செய்தார்.
மஞ்சு படிவானம் பொழிமழைப் பக்குவமே
மாண்பான வனப்பே மேவும்பதி
கெஞ்சு மடியார் வினைகளையும் விக்னேஸ்வரா
கேட்டவரமருளச் சித்திரத் தேரில் வாரீர்! வாரீர்.
மூன்றுகோவில் முற்றத்து முதல்வனே
மூசிக வாகனனே மோதகப் பிரியாய்.
சான்றுதரும் தத்துவத்தின் தனிப்பொருளே
பர்வதவர்த்தினி உவந்தேத்து பாலவிநாயகா!
குன்றுருவவேல் வாங்கி நின்றகந்தன்
குறமகளைப் புணரவருள் புர்ந்தகோவே
நன்றுதரு கருணாகரப் பிள்ளையாரே நாளும்
நாதவொலிச் சித்திரத் தேரேறி வாரீர்! வாரீர்!

**இன்று (22.09.2010) புதன்கிழமை காலை 6 மணிக்கு எம்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று தொடர்ந்து எம்பெருமான் புதிய சித்திரத் தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். தொடர்ந்து பச்சை சாத்தி இளைப்பாறு மண்டபத்தில் எழுந்தருளும் எம்பெருமானுக்கு பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும்.**

**நாளை (23.09.2010) வியாழக்கிழமை இடம்பெறும் தீர்தோற்சவத்தின்போது காலை 6.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு எம்பெருமானின் தீர்த்தோற்சவம் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து எம்பெருமான் வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்.**

**இன்று இடம்பெறும் புதிய சித்திரத் தேர் உற்சவத்திலும் நாளை இடம்பெறவுள்ள தீர்தோற்சவத்திலும் கலந்து கொண்டு எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அடியார்களை வேண்டிக் கொள்கிறோம்.**

இன்றைய தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானுக்கு இசை ஆராதனை செய்யவுள்ள கலைஞர்கள்

★ச.ரீசன் குழுவினர், இணுவில்.
★ப. சிவதாஸ் குழுவினர், இணுவில்.
★அ.முருகானந்தம் குழுவினர், கோண்டாவில்.
★கா. கிருஸ்ணா குழுவினர், கோண்டாவில்.
★எஸ்.சிவதாஸ் குழுவினர், கோண்டாவில்.
★எஸ். பாலமுருகன் குழுவினர், நல்லூர்.
★வீ.கே. பஞ்சமூர்த்தி குழுவினர், கோண்டாவில்.
★ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர் இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வல்லிபு[ர]
# தேர்த் திருவிழாச் சிற[ப்பு]




## பக்த அடியார்களுக்கு வேண்டிய வரம் ...

வரலாற்றுப் புகழ் பெற்ற வல்லிபுரத்திலே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் ஒருங்கே அமையப் பெற்று கோயில் கொண்டெழுந்தருளியிருந்து பக்த அடியார்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளி, அள்ளி வழங்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார் வல்லிபுர ஆழ்வார்.

பாம்பணை மேல் பள்ளி கொள்ளும் எம்பெருமான் பக்தர்கள் புடைசூழ இன்று தேரேறி வீதி உலா வந்து பக்த அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றா[ர்] பக்த அடியார்கள் பெறுதற்கரிய அரும் பேறுகளைப் பெற்று மகிழ்வுறவுள்ள[ர்]

எம்பெருமானின் ஆலயம் தோன்றிய வரலாறு மிக அற்புதம் வாய்ந்த வரலாறாகும். இவ் ஆலயவரலாறு பற்றி ஸ்ரீஸ்கந்தபுராணத்திலுள்ள தஷிண கைலாச மான்மியத்தில் வல்லிபுர வைபவ அத்தியாயத்திலே மிகச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

முன்னொரு காலத்திலே புரட்டாதிப் பூரணை நாளிலே வங்கக் கடல் பேரிரைச்சலுடன் பொங்கியது. அலைகள் மலைபோல் எழுந்து கரைமோதி[ன] வள்ளங்களை அலைகள் விழுங்கின. மீன்பிடிவலைகள் தாறுமாறாக அறுக்கப்பட்டன. அழகிய பெரிய மச்சமொன்று இவ்வினோதங்களைப் புரிவதை அங்குள்ள மீனவர்கள் கண்டனர். இவ்வினோதம் தொடர்ந்து மூன் நாள்களாக நடைபெற்று வந்தது. மக்கள் கூட்டம் கடற்கரைக்குச் சென்று அங்கு இடம்பெறும் வினோதச் செயல்களைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அந்நாளிலே வராத்துப்பளைக் கிராமத்தில் வல்லி நாச்சியார் (லவல்லி) என்ற விஸ்ணு பக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சுவர்நாக சாபத்தினால் புத்தி[ர] பேறு இன்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். சுவர் எம்பெருமானை நாள்தோறும் பூசித்து வந்தாள். எம்பெரும் கடல் கலக்கிய மூன்றாம் நாள் இ[...] வல்லிநாச்சியாருக்கு கனவில் தோன்றி கற்கோவளக் கீடற்கரைக்கு வருமா[று] திருவாய் மலர்ந்தருளினார்.

மறு நாள் காலை துயிலெழுந்த வள்ளி நாச்சியார் எம் பெருமானின்

கட்டளை[...]
கற்கோ[...]
அமர்ந்த[...]
அற்புத[...]
எம்பெரு[...]
மடியில்[...]
திளைத்[...]
மடியிலே[...]
கண்டே[...]
பிறந்தா[...]
பெண்க[...]
வல்[...]
தெய்வ[...]
தூக்கிவ[...]
பல்லக்[...]
கற்கோ[...]
கிராமங்[...]
நீர் அரு[...]
இருந்த[...]
திடீ[...]
சக்கரபெ[...]
பூசிக்கு[...]
ஆலயத்[...]
வருகின்[...]
மனிதன[...]
ஒருவரி[...]

## பிரதமகுருமார்களின் நல்லாசிகள்



ஸ்ரீமத் பகவத்கீதை
அத்தியாயம் 18 சுலோ-67

உனக்குக் கூறப்பட்ட இந்த ரஹஸ்யமான கீதோபதேசத்தை ஒரு போதும் தவம் இல்லாதவனுக்குச் சொல்லக் கூடாது, பக்தி இல்லாதவனுக்கும் சொல்லக் கூடாது, கேட்க விரும்பாதவனுக்கும் சொல்லக்கூடாது, எவன் என்னிடத்திலே குறைகாண்கிறானோ அவனுக்கு ஒரு பொழுதும் சொல்லக் கூடாது:-

வல்லிபுர மாயவன் மெய்யன்பர்களே! அவனருளாலே அவன் தாழ் வணங்கி! சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோயிலின் இன்றைய தினம் பக்திபூர்வமான மாயவனின் இரதோற்சவம் நடைபெறுகின்றது.

நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளைப் போக்கவே நைமித்தியம் எனப் படுகின்ற மகோற்சவம் ஆலயங்களிலே நடத்தப்படுகின்றது.



இறைவனது ஐந்தொழிலைக் குறிப்பதாகவும் மகோற்வசம் நடத்தப்படுகின்றது. அழித்தல் தொழிலைக் குறிப்பது இரதோற்சவம் எனப்படுகின்ற தேர்த் திருவிழாவாகும். ஆன்மாக்களிடமுள்ள அதர்மச் செயலைத் தூண்டுகின்ற ஆணவ மலத்தை அழிப்பதைக் குறிக்கும்.

அக்னி வடிவான தேரில் எம்பெருமான் வல்லிபுர மாயவன் வீதி வலம் வரும் போது ஆன்மாக்களின் ஆணவமலம் அழிக்கப்படுகிறது.

இத்தகைய புனிதம் நிறைந்த திருவிழா நாள்களில் வல்லிபுர மாயவனைத் தரிசித்து பெரும் பேற்றை அடைவீர்களாகுக!

எல்லாம் வல்ல வல்லிபுர மாயவன் திருவருளினாலே எமது மக்களின் துன்பதுயரங்கள் எல்லாம், மறைந்து ஒளிமயமான எதிர்காலமும் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வும் அமையும் என்பது உறுதி. சகல மக்களினதும் நலன் வேண்டி நாமும் பிரார்த்தித்து, வல்லிபுர மாயவனது நல்லாசிகளையும், எமது நல்வாழ்த்துக்களையும் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும், கூறிக் கொள்கின்றோம்.

*கண்ணன் கழலடி போற்றி*

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு J.P
பிரம்மஸ்ரீ சு.கணபதீஸ்வரக் குரு, இளையகுரு
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு J.P
பிரதமகுருமார்கள்.



## ஆ[...]

வல்லிபுரத்தா[...]
மாயக்கிருஷ்ண[...]
அன்பர்களுக்கெ[...]
கண்கொள்ளாக் [...]
வடமராட்சியின் வளர்ச்சிக்கும்,[...]
முக்கிய சின்னமாக விளங்குகி[...]
ஆழ் கடலைப் பார்த்து அரு[...]
தீர்த்தமாடிக் குதூகலிப்பது ஒரு[...]
"கேள்வியிலே பதிலாகக் கண்[...]
வல்லிபுர ஆழ்வார் அடியார்கள்[...]
இன்று பல்வேறு சமய மக்[...]
சிறப்பு, மாயவனின் அருளாட்[...]
திருவடம் பிடிக்க, கரங்கள் ஆ[...]

**அலை கடல் ஓரத்திலே வீற்றிருந்து அருளாட்சி நடத்தும் மாயக் கண்ணனே..! அலை எனத் திரண்டு வரும் மக்க[ள்...]**


**மகாலட்சுமி ராஜன்**
சைக்கிள் வேக்ஸ்
பஸ்நிலையம், பருத்தித்துறை
தொ.பே: 021 226 3248,
021 226 4013
உரிமையாளர்: பொ.இராசதுரை

**எஸ்வரி நகையகம்**
உரிமையாளர்:
ஏ.செல்வநாயகம்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

**தங்கம்ஸன்**
தொ.பே: 021 226 3205
நெல்லியடி, கரவெட்டி.

**சிதம்பரப்பிள்[ளை]**
புத்தக நிலைய[ம்]
நெல்லியடி, கரவெ[ட்டி]

தேசத்தின் வங்கியாளர்
**இலங்கை வங்கி**
பருத்தித்துறை
BOC

தேசத்தின் வங்கியாளர்
**இலங்கை வங்கி**
நெல்லியடி
BOC

உங்கள் முன்னேற்றத்திற்கான வங்கி
**ஹற்றன் நஷனல் வங்கி**
நெல்லியடி
HNB

**பனை தென்னை[...]**
**அபிவிருத்தி[...]**
**கூட்டுறவுச் ச[...]**
பருத்தித்துறை

வல்வெட்டித்துறை
மக்கள் வங்கியும்
உடுப்பிட்டி சேவை நிலையமும்
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

உங்கள் குடும்ப வங்கி
**தேசிய சேமிப்பு வங்கி**
பருத்தித்துறை
NSB
National Savings Bank

உங்கள் குடும்ப வங்கி
**தேசிய சேமிப்பு வங்கி**
நெல்லியடி
NSB
National Savings Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...புர ஆழ்வார் ஆலய ...றப்புமலர் 22.09.2010

## ...வரம் அருளும் வல்லிபுர மாயவன்

...கட்டளையை நினைத்து இறும்பூதெய்தி ஸ்நானம் செய்து கற்கோவளக் கடற்கரைக்கு ஆவலோடு சென்றார். கடற்கரையில் அமர்ந்த வராத்துப்பளை வல்லிநாச்சியார் நாராயண ஜெபம் செய்தார். அற்புதம் நிகழ்ந்தது. கடலைக் கலக்கி வினோதம் புரிந்த எம்பெருமான் ஆச்சரியம் மிக்க பேரழகுடன் வல்லி நாச்சியாரின் மடியில் விழுந்து விளையாடினார். வல்லிநாச்சியார் பேரானந்தத்தில் திளைத்தார். வியத்தகு அழகிய தோற்றத்துடன் வல்லி நாச்சியாரின் மடியிலே வீற்றிருந்த பாலகனைக் கண்ட பக்த அடியார்கள் கண்டோம் கண்டோம் அமுதுண்போம் கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான் என்று ஆரவாரம் கொட்டிப் பாடினர், ஆனந்தக் கூத்தாடினர், பெண்கள் மகிழ்ச்சி ததும்பக் கும்மி கொட்டினர்.

வல்லிநாச்சியாரின் கோரிக்கைக் கிணங்க பக்த அடியார்கள் தெய்வக் குழந்தையைப் பல்லக்கில் வைத்து மக்கள் புடைசூழ தூக்கிவந்தனர். கல்லும் முள்ளும் நிறைந்த பாதையிலே நீண்டதூரம் பல்லக்கைத் தூக்கி வந்தமையால் பக்தர்கள் களைப்படைந்து கற்கோவளம், வராத்துப்பளை, புலோலி, வல்லிபுரம், துன்னாலைக் கிராமங்கள் சந்திக்கும் இடத்திலே மரநிழலின் கீழ் பல்லக்கை இறக்கி நீர் அருந்தினர். பின்னர் பல்லக்கைத் தூக்கமுடியவில்லை. பல்லக்கில் இருந்த குழந்தையும் மாயமாய் மறைந்து விட்டது.

திடீரென அந்தணரொருவர் அவ்விடத்திலே தோன்றினார். அவர் சக்கரமொன்றைக் கொடுத்து அதனை அங்கேயே வைத்துப் பூசிக்கும்படி கூறி அவரும் மறைந்து விட்டார். இன்றும் எம்பெருமான் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசிக்கப்பட்டு வருகின்றது. உலக உயிர்களை காப்பாற்ற எம்பெருமான் மனிதனைப்போல தானே தோன்றுவார். வாழும் மனிதரில் தகுந்த ஒருவரிடம் தமது சக்தியைச் சிறிதளவு கொடுத்து அவரைக் கொண்டு பல சாதனைகள் புரிந்து காரியங்களை ஈடேற்றுவார். அதனாலேயே சாதாரண மனிதர்கள் சாதிக்க முடியாதவைற்றை நிறைவேற்றுபவர்களைத் தெய்வ அருள் பெற்றவர்கள் என்று போற்றி வருகின்றோம். சிவனைப் போலன்றி திருமால் அவதாரங்களையெடுத்து அடியவர்களை அண்மித்துச் சென்று அவர்களைக் காப்பாற்றி அருள் பாலிப்பவர். வல்லிபுர ஆழ்வாரிடம் செல்லும் பக்த அடியார்கள் வேண்டிய வரங்களைப் பெற்று மகிழ்ச்சிமிக்க வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வல்லிபுர ஆழ்வார் ஆலயம் இளைப்பாறிய அரச கணக்காளர் ஆர்.அன்னலிங்கம் தலைமையிலான அறங்காவலர் சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. செயலாளராகச் சட்டத்தரணி சபா இரவீந்திரன் செயற்பட்டு வருகின்றார். ஆலய பிரதம குருக்களாக ச.க.சுதர்சனக்குரு, பிரம்ம ஸ்ரீ ச.க.புருஷோத்தமக் குரு ஆகியோர் இருந்து பூசைகள் மிக ஒழுங்காக பக்தி ததும்ப மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று தேரேறி வீதி உலா வந்து பக்த அடியார்களுக்கு அருள் பாலிக்கும் எம்பெருமான் நாளை கற்கோவளம் வங்கக் கடலிலே தீர்த்தமாடுவார். நாளை மறு தினம் ஆலயக் கேணியிலே நன்னீரில் தீர்த்தமாடுவார். மாலை கொடியிறக்கம் இடம்பெறும். மறுநாள் ஆஞ்சநேயர் மடை இடம்பெறும். எம்பெருமானின் மகோற்சவ காலங்களில் பக்த அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று எம்பெருமானின் அருளைப் பெற்று உய்வார்களாக.

செல்வி அருணா



## அடியார்கள் மனதில் குடிகொண்டவன்

...வல்லிபுரத்தாழ்வார் என்றும், மாயவன் என்றும் பக்திப் பரவசத்துடன் துதிக்கப்படும் ...பக்கிருஷ்ணன், சக்கர வடிவிலே, மூலமூர்த்தியாக அமர்ந்து, நாடிவரும் ...பர்களுக்கெல்லாம் நம்பிக்கையைக் கொடுத்து இன்று தேரேறி வரும் காட்சி, ...கொள்ளாக் காட்சியாகவே அமைவது வல்லிபுரக் கோயிலின் சிறப்பாகும். ...வளர்ச்சிக்கும், புகழுக்கும் மதிப்புக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் ஒரு ...க விளங்குகின்றது.

... பார்த்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணன், தேருக்கு மறுநாள் அதே கடலில் ...கலிப்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். ''கேட்டவர்க்கு கேட்டபடி கண்ணன் வந்தான்'' - ...திலாகக் கண்ணன் வந்தான்'' எவ்வளவு அர்த்தமுள்ள வரிகள். இதற்குச் சாட்சியாகவே ...ர் அடியார்கள் மனதில் குடிகொண்டுள்ளார்.

...று சமய மக்களும் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குத் திரளாக வந்து வழிபாடு செய்கின்ற ...ன் அருளாட்சிக்கு மகத்தான சான்றாக மிளிர்கின்றது. தேரேறி வரும் வைகுந்தனின் ... கரங்கள் ஆயிரமாயிரமாய் இணைந்திட எல்லாம் வல்ல திருமால் துணையிருப்பானாக.

சபா ரவீந்திரன் J.P.U.M, செயலாளர், அறங்காவலர் சபை.

## அறங்காவல் சபைத் தலைவரின் வாழ்த்து



ஆலய வருடாந்த மகோற்சவத்தில் தேர்த்திருவிழா முடிசூட்டும் விழாவாகவே இடம் பெறுகின்றது. இன்று ஸ்ரீ வல்லிபுரேசன் தேரேறி வீதி உலா வந்து பக்த அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார். பல்லாயிரக் கணக்கான பக்த கோடிகள் ஆலயத்திலே எம்பெருமானின் பெறுதற்கரிய அருளைப் பெறப்போகின்றனர்.

இத்தேர்த்திருவிழா நேரடியாகக் கலந்து கொள்ள முடியாத பக்த அடியார்களுக்கு இச்சிறப்பு மலர் எம்பெருமானை நினைவு கூர்ந்து மனக் கண்ணிலே நிறுத்தி அருளைப் பெற்றுக் கொள்ள வழி வகுக்கும் என்பது எனது நம்பிக்கை. எனவே இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் எம்பெருமானின் வருடாந்த மகோற்சவம் 17 நாள்கள் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இன்று எம்பெருமான் தேரிலே பவனி வருகிறார். நாளை வங்கக் கடலிலே தீர்த்தமாடுவார். மறுநாள் ஆலயத் திருக்கேணியிலே நன்னீரில் தீர்த்தமாடுவார். இச்சிறப்பு வாய்ந்த புண்ணிய காலங்களிலே அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து அருள் பெற்றுய்ய வேண்டும். சாந்தியும் சமாதானமும் பெற்று அவர்களது வாழ்வில் ஒளி வீச வேண்டும்.

இ. அன்னலிங்கம்,
முகாமை அறங்காவலர்,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

### ...நம் மக்கள் வெள்ளத்தில் மிதந்து வந்து அருட்காட்சி கொடுத்திடுவாய்...!!

### இரத பவனி சிறப்புற வாழ்த்துவோர் :


...ப்பிள்ளை
...நிலையம்
..., கரவெட்டி.

ஜெஸ்வின்
கணனிப் பயிற்சியகம்
JL Game Center
Brosing
தும்பளை வீதி, பருத்தித்துறை.

சதாபொன்ஸ்
யாழ்.பருத்தித்துறை வீதி,
கிழக்கு அல்வாய்,
அல்வாய்.
உரிமையாளர்: எம்.சுந்தரலிங்கம்
(ஜே.பி.)
021 226 3206

எம்பெருமான் அருளைவேண்டி
நிற்கின்றோம்
சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு

...ன்னைவள
...ிருத்திக்
...வுச் சங்கம்
...த்துறை

பனை தென்னைவள
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
கரவெட்டி

புலோலி பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

உடுப்பிட்டி
பலநோக்குக்கூட்டுறவுச்
சங்கம்

பருத்தித்துறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பருத்தித்துறை

கட்டைவேலி - நெல்லியடி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெல்லியடி, கரவெட்டி.

சிவகௌரி
நகைமாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.
உரிமையாளர்:
பா.சிவனேசன்

நாவலர்
புத்தகசாலை
சிலையடி,
புலோலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



காலை முதல் மாலை வரை சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். புதிய உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். உத்தியோகஸ்த்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம்.

### இடபம்



மற்றவர்கள் பிரச்சினையாக நினைக்கும் விடயம் ஒன்றை நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்வீர்கள். விருந்தினர்கள் சிலரின் வருகையால் வீட்டில் கலகலப்பு சந்தோஷம் உண்டாகும். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். பயணங்களால் பலன் உண்டு. சோர்வில்லாமல் புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

### மிதுனம்



சிறிய விடயத்திற்காகப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நண்பர்களை அடையாளம் காண்பீர்கள்.

### கடகம்



குடும்ப உறுப்பினர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப் பேற்கலாம். சபலங்களால் சங்கடங்களுக்கு, இழப்புகளுக்கு ஆளாகலாம். நொடியில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்றுக்கு பல மணி நேரம் காத்திருக்கலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள்.

### சிங்கம்



எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்து செய்து பாராட்டுப் பெறுவீர்கள். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். அயலார் மத்தியில் உங்களின் மதிப்புக் கூடும்.

### கன்னி



திறமையை, புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தும் நாள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் பிள்ளைகளைப் பற்றி உறவினர்கள் சிலரிடம் பெருமையாகப் பேசி மகிழ்வீர்கள். பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். அரச காரியங்கள் அனுகூலமான முடிவுக்கு வரும்.

### துலாம்



நேற்றுவரை குடும்ப உறுப்பினர்கள் செய்த வேலை ஒன்றை இன்று நீங்கள் செய்யலாம். தொழில் ரீதியாக சிறு மாற்றங்களைச் சந்திக்கலாம். நண்பர்களை நம்பிச் சில காரியங்களில் இறங்குவீர்கள். உங்களிடம் உதவி செய்வதாக வாக்குறுதி அளித்த உறவினர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். கனவுத் தொல்லை உண்டு.

### விருச்சிகம்



காலையில் செய்யாமல் விட்ட வேலை ஒன்றை மாலையில் செய்வீர்கள். தந்தை வழி உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். புதிய வேலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலித்துத் திருப்தி காண்பர். சில வேலைகளை வேகமாக தொடங்கி விட்டு, பாதியில் விட்டு விடலாம்.

### தனுசு



மன உளைச்சல்கள் விலகி, சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும் நாள். பெரிய மனிதர்களின் நட்பை பெறலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். நண்பர்கள் தொடர்பான வேலை ஒன்றுக்காக அலையலாம். அதிக செலவில் வாங்க நினைத்த பொருள் ஒன்றைக் குறைந்த செலவில் வாங்குவீர்கள். ஆதாயகரமான நாள்.

### மகரம்



புதிய மாற்றங்களைச் சந்திக்கலாம். பழகிய சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பீர்கள். சில விடயங்களில் வேகமாக இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். நாடி வந்த சிலருக்கு மற்றவர்களிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு ஏற்படும்.

### கும்பம்



நீங்கள் நினைப்பதே சரியென நினைத்துச் செய்வீர்கள். உடன் பிறப்புக்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சிறிய வேலை ஒன்றுக்காகப் பலமுறை அலைய நேரிடலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கலாம். தாய் வழி உறவினர்களால் அன்புத் தொல்லையுண்டு.

### மீனம்



திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மாமன், மைத்துனர்களுக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கலாம். மருத்துவச் சிகிச்சை தொடர்பான விடயங்கள் நல்ல விதமாக அமையலாம். தொழில் ரீதியான விமர்சனங்களைச் சந்திக்கலாம். அலைச்சல் உண்டு.

---


**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்**

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
|---|---|
| அன்பொளி கல்வியகம் | அன்பொளி கல்வி நிலையம் |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 20.09.2010 திங்கட்கிழமையிலிருந்து 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை*
*அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*
இயக்குநர்கள்


## மரண அறிவித்தல்

### செபஸ்ரியன் அந்தோனிப்பிள்ளை

(செல்வரட்ணம்-ஆயுள்வேத வைத்தியர்)



மன்னாரைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு சமனகையை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் அந்தோனிப்பிள்ளை (செல்வரட்ணம்-ஆயுள்வேத வைத்தியர்) 18.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அருந்ததி, வளர்மதி, ஸ்ரீமதி, இந்திரன், காந்தன், ரஞ்சன், நேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுந்தரலிங்கம், யோகநாதன், அமரர் ஜீவராஜ் மற்றும் அனிற்றா, கவிதா, சுனிதா காந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் றொபினி, உதயகுமார், குமரன், நான்ஸி, மயிந்தன், கஸ்தூரி, சுதன், சிந்துஜா, கரிகரன், செந்தூரன், சபினா, தொபியாஸ், செறினா, டானியேல், டேவிட், நயோமி, ரியானா, செரோன், செரோமி ஆகியோரின் பேரனும் ரெமா, மஹா, பிறியானா, றேச்சல் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 23.09.2010 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சமனகை, பண்டத்தரிப்பு. (103634) தகவல்: மனைவி-சரஸ்வதி.

## சீனர்களின் சடலங்கள் ஹெலியில் கொழும்புக்கு

மட்டக்களப்பு, செப்.22

மட்டக்களப்பு கரடியனாறுப் பகுதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் உயிரிழந்த இரு சீனப் பிரஜைகளின் சடலங்களும் ஹெலியில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கரடியனாறு பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற வெடி விபத்தில் 'சைனா கொவெக்' நிறுவனத்தின் உதவித் திட்டமிடல் முகாமையாளரான 'சூ' என்பவரும், அந்நிறுவனத்தின் கல்குவாரியின் பொறுப்பதிகாரியான 'லோ' என்பவரும் உயிரிழந்ததென்பது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் பலியான பொலிஸாரின் சடலங்களும் ஹெலியில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன. (ஒ-16)


**பணியாளர்கள் தேவை**

சுதுமலையில் இயங்கும் தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு (Communication) பெண் பணியாளர்கள் தேவை. அண்மையில் உள்ளவர்கள், அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும்.

தொ.பே.இல:- 0773405951
chelvameng@yahoo.com

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977ஆம் ஆண்டு, பட்டதாரி, 5' 6'', கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும் மணமகனிற்கு, படித்த, அழகிய மணமகள் தேவை. முதல் தொடர்பிலேயே ஜாதகம், படம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை அனுப்பப்படும்.

thanam1977@gmail.com
விளம்பர இல: 4076
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு).

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.


**தவறிவிட்டது**

திறப்புக் கோர்வை ஒன்று கிளிநொச்சி ம.ம.வித்தியாலயத்திற்கும் அருகிலுள்ள தேநீர்க் கடைக்கும் இடையில் 17.09.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ம.ம.வித்தியாலயத்தில் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: 0776164072

**கொடி தினச் சின்னம்**

பிரதேச செயலாளர் பிரிவுகளில் இயங்கும் மூத்த பிரஜைகள் சங்கங்களின் நிர்வாகிகள் எல்லோரும் கோக்குவில் பேரவைப் பணிமனையிலிருந்து வந்து கொடி தினச் சின்னங்களை 25.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

கௌரவ செயலாளர், மூத்த பிரஜைகள் பேரவை, கொக்குவில்.





சீட்டிழுப்பு இலக்கம் 683 திகதி 20-09-2010

வெற்றி எண்கள்

12 49 52 56 L

ஜக்பொட் பரிசு ரூ. 15,127,720/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,127,720/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 2,000/= | 24,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 401 | 1,000/= | 401,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 762 | 1,000/= | 762,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16671 | 60/= | 1,000,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8102 | 40/= | 324,080/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 198895 | 20/= | 3,977,900/= |
| | | மொத்தம் ரூ. 7,289,240/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 600381994-6-36 |
| மாத்தளை | 600386613-3-13 |
| வவுனியா | 600381331-1-21 |
| பொலன்னறுவை | 600386126-8-48 |
| இரத்தினபுரி | 600387213-9-19 |
| கொழும்பு | 600385909-8-48 |
| கண்டி | 600396921-7-07 |
| மாத்தறை | 600382338-2-12 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,689,240/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 15,667,900/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 செப்டம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா நிவாரணக் கிராமங்களில் 27 ஆயிரம் பேரே தங்க வைக்கப்பட்டுள்ளனர்

## வவுனியா அரச அதிபர் தகவல்

வவுனியா,செப்.22

வவுனியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் ஐந்து நிவாரணக் கிராமங்களிலும் 27 ஆயிரம் பேர் தங்க ஸ்வக்கப் பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

'உதயனுக்கு' இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் தற்போதுள்ள கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் 5 ஆயிரத்து 629 பேரும், ஆனந்தகுமாரசுவாமி நிவாரணக் கிராமத்தில் 8 ஆயிரத்து 327 பேரும் இராமநாதன் நிவாரணக் கிராமத்தில் 5 ஆயிரத்து 501 பேரும் அருணாச்சலம் நிவாரண கிராமத்தில் 3 ஆயிரத்து 870 பேரும், வலயம் 4 நிவாரணக் கிராமத்தில் 3 ஆயிரத்து 674 பேரும் என 27 ஆயிரம் பேர் வவுனியா மாவட்டத்திலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்த மக்களில் இரண்டு லட்சத்து 35 ஆயிரத்து 749 பேர் வவுனியா மாவட்டத்தின் 16 இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 2 லட்சத்து 8 ஆயிரத்து 748 பேர் கடந்த 16 ஆம் திகதி வரை அந்த முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிவாரண கிராமங்களான கதிர்காமர், ஆனந்தக்குமாரசுவாமி, இராமநாதன், அருணாச்சலம், வலயம்- 4 ஆகியவை தவிர்ந்து ஏனைய 11 நிவாரணக் கிராமங்களிலும் தங்கவைக்கப்பட்டிருந்த அனைத்து மக்களும் விடுவிக்கப்பட்டு அவை மூடப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

# மு.கா.ஸ்தாபகரின் சிரார்த்த தினம்

மன்னார்,செப்.22

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஷ்ரப்பின் 10 ஆவது சிரார்த்ததினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'கத்தமுல் குர் ஆன்' ஓதலும், நினைவுப் பேருரைகளும் கிளையின் தலைவர் ஜனாப் ஆலம் தலைமையில் நடைபெற்றது. இதில் உலமாக்கள், பள்ளிவாசல் தலைவர்கள் உட்பட பல கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

மன்னார் மூர்வீதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைத் தலைவர் ஜனாப் ஏ.எம். அஸீஸ், மக்கள் காதர் ஆகியோரால் நினைவுப் பேருரைகள் நிகழ்த்தப்பட்டன. (க-80)

# மன்னார் தமிழ் செம்மொழி விழா பேராளர்களாகப் பங்குபற்ற விண்ணப்பிக்கவும்

மன்னார்,செப்.22

மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவில் பேராளர்களாகப் பங்கேற்க விரும்புகின்றவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் அறிவித்துள்ளார்.

மன்னாரில் அடுத்தமாதம் 22, 23, 24, 25 ஆம் திகதிகளில் தமிழ்ச் செம்மொழி விழா நடைபெறவுள்ளது. இதில் பேராளர்களாகப் பங்கேற்க விரும்புவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றோடு தங்களின் கலை, இலக்கியச் செயற்பாடுகள், முயற்சிகள் பற்றிய குறிப்புக்களையும் 130, வைத்தியா சாலை வீதி, மன்னார் என்ற முகவரிக்கோ அல்லது nesan mnr@ gmail.Com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதுடன், பேராளர் தொடர்புக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் மட்டுமே பேராளர்களாகப் பங்கேற்க முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

# மின்சாரசபைக் காரியாலயம் முல்லைத்தீவுக் கச்சேரியில்

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை மின்சார சபையின் கிளை அலுவலகம் ஒன்று முல்லைத்தீவுக் கச்சேரியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மின்சார விநியோகம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஒரு காரியாலயம் இல்லாததால் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர். இதனை நிவர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜி.ஏ.சந்திரசிறி நடவடிக்கை எடுத்தார். இதன்பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் தமது காரியாலயத்தை இலங்கை மின்சாரசபை ஆரம்பிக்கவுள்ளது.

எனினும் முல்லைத்தீவில் இருக்கும் மின்சாரசபைக் கட்டடம் சேதமடைந்து காணப்படுவதால் அதனைப் புனரமைக்கும் வரை கச்சேரியில் இம் மின்சாரசபை காரியாலயம் இயங்கி வரும். மேலும் மின்சார விநியோகத்திற்கான விண்ணப்பப் படிவங்களையும் அவை தொடர்பான தகவல்களையும் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (314-318)

# கறுப்புக் கண்ணாடிகளுடன் ஓடித்திரியும் வாகனங்கள்

மன்னார்,செப்.22

நாடு பூராவும் நிறமூட்டப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட சிற்றுந்துகளுக்குத் தடை விதிக்கப்பட்டபோதிலும் மன்னாரில் இவை தாராளமாக ஓடித்திரிவதைக் காண முடிகின்றது.

நிறமூட்டப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட சிற்றுந்துகளில் பல சட்ட விரோதச் செயல்கள் இடம்பெற்றதால் போக்குவரத்துப் பொலிஸாரால் இவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மன்னாரில் கறுப்பு நிறமூட்டப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட பல வாகனங்கள் ஓடித்திரிகின்றன. இவற்றைக் கண்டதும் மக்களில் சிலர் அச்சத்தில் ஓடி ஒழிவதைக் காண முடிகின்றது.

மன்னார் போக்குவரத்துப் பொலிஸார் இதில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாகும். (க-80)

# அப்பா உன் மடியில்... இறுவட்டு வெளியீட்டு விழா

மன்னார்,செப்.22

அருட்தந்தை றொக்சன் அவர்களின் இறுவட்டு வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது.

வங்காலை புனித ஆனாள் ஆலய உதவிப் பங்குத் தந்தை அருட்பணியாளர் அ.றொக்சன் குரூஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட 'அப்பா உன் மடியில்...' என்ற இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலய முன்றலில் நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா.யோசேப்பு ஆண்டகை இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மன்னார் - வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பொறியியலாளர் ஜொய்ஸ் குரூஸ் கலந்து கொண்டார். மதிப்பீட்டுரையை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பல குருக்கள், அருட்சகோதரிகள், வங்காலை மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)




# மன்னாரில் இன்றும் நாளையும் மின்வெட்டு அமுலில்

மன்னார்,செப்.22

இன்றும் நாளையும் மன்னார் முழுவதும் பகலில் மின்வெட்டு அமுலில் இருக்குமென மன்னார் மின்சாரசபையினர் அறிவித்துள்ளனர்.

உயர் மின் கோபுரங்களில் ஏற்பட்டுள்ள கோளாறுகளைச் சீர்செய்யும் முகமாகவே காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை மின்வெட்டு அமுல் செய்யப்படுவதாக மின்சார சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபகாலமாக மன்னாரில் தொடரும் மின்வெட்டினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு பெறுமதி வாய்ந்த மின் இலத்திரனியல் உபகரணங்கள் பழுதடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

# மன்னார் பள்ளிவாசல்களில் வலுவிழந்தோருக்கு வசதிகள் இல்லை

மன்னார்,செப்.22

மன்னாரில் பெரிய ஜும்மாப் பள்ளிவாசல்கள் பல இருந்தபோதிலும் இவற்றில் வலுவிழந்தவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லையென வலுவிழந்த முஸ்லிம் மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

மன்னாரில் எருக்கலம்பிட்டி, தாராபுரம், புதுக்குடியிருப்பு, தலைமன்னார், மூர்வீதி, உப்புக்குளம், பெரியகடை ஆகிய பிரதான இடங்களில் பலகோடி ரூபா செலவில் இப்பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் ஒன்றிலாவது வலுவிழந்தோருக்கான நடைபாதைகள், கழிவறைகள் ஏதும் அமைக்கப்படவில்லை. இதனால் வலுவிழந்தவர்கள் தமது சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்தப் பள்ளிவாசல்களுக்குச் செல்லத் தயங்குகின்றனர். பள்ளிவாசல்களின் பரிபாலனசபையினரும் இது தொடர்பாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 500 வலுவிழந்த முஸ்லிம் மக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-80)

# கைவிடப்பட்ட கால்நடைகள் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பு

மன்னார்,செப்.22

மன்னார் மாவட்டத்தில் யுத்தத்தின் போது உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் இனம் காணப்பட்டு மீண்டும் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கில் சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளனர். இவர்களால் விட்டுச் செல்லப்பட்ட கால்நடைகளே தற்போது இவர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வேட்டையான் முறிப்பு, சாளம்பன், மினுக்கன், பாப்பாமோட்டை ஆகிய இடங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு சுமார் 560 கால் நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வைபவங்களில் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மைத்திரி டயஸ் உட்பட 541, 542 ஆவது படைப்பிரிவின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதுவரை சுமார் 8 ஆயிரம் கால் நடைகள் இனம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-80)



மன்னாருக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவரும் பிரித்தானியரால் அமைக்கப்பட்ட தொங்குபாலம் மற்றும் நீர்த்தேக்கத்தை முதற் படத்திலும் அரேபியரால் பள்ளி முனையில் நடப்பட்ட பிரமாண்டமான பெருக்கு மரத்தை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: எம்.ஏ.காதர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் ஓராண்டு...

பூவாக 14.06.1952

சருகாக 02.10.2009



திருமதி

## இரத்தினபூபதி உருத்திரன்

ஆண்டு ஒன்று போனது நீ மறைந்து
துயரம் மட்டும் மறையவில்லை
விழுதுகள் அழுகின்றன - தாயே!
விருட்சத்தை இழந்த துயரில்
இயமன் பறித்தது உன் உயிரை அல்ல
இதயத்தில் துளிர்த்த இன்பப் பயிரை
இல்லத்தின் அகல் விளக்கே!
இதயத்தின் ஒளிவிளக்கே - நீ
இல்லாத போது ஜீவ ஒளி ஏதம்மா?
ஜென்மங்கள் பல போனாலென்ன - எம்
நெஞ்சங்களில் நாம் என்றும்
ஆராதிக்கும் தெய்வம் நீயே அம்மா!

உன் பிரிவால் உருகும்:
கணவர், மகன், மருமகள்.
*'பூபதி அகம்'*
*காளிகோயிலடி*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

(103632)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தையா குலசேகரம்பிள்ளை

திதி : சதுர்த்தசி

அன்னையிடம் 30.10.1926

அம்பாளிடம் 14.10.1997

ஐயா!
எங்கள் ஆலயமும் ஆண்டவனும் நீயே!
அன்பூறும் உங்கள் இதயம் ஓர் அழகான
கண்ணாடி - அதில்
அழகுபார்த்தோரை அழகுபடுத்திக்
காட்டினாய்; கண்ணாடி உடைந்தது
அழகு இழந்தோம்; ஆதரவும் இழந்தோம்
அம்பாளே!
ஆண்டாண்டும் ஆசி வேண்டி
வணங்குகிறோம்.

நி.மு.: *எழுதுமட்டுவாள்*
த.மு.: *மானிப்பாய் வீதி, உரும்பிராய்.*

(103634)

- குடும்பத்தினர்.

YMCA JAFFNA

# INVITATION
## Talent Search 2010

(A competition Promoting young talent in Jaffna)
A Morning of Western Song and Instrumental
By
Children of all ages
On
Saturday 25th, 2010, at 9.30 am.
At
**THE UDUVIL GIRLS' COLLEGE**
ALL are invited!
Be there to encourage the young Participants!

*Coordinator,*
*Western Music Talent Search 2010*
*Uduvil Girls' College*
*Uduvil Chunnakam*

(வி/570659)

BOSCH Invented for life

# போஸ் மற்றும் ஸகில்ஸ்

வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்துகிறது. சக்தி உபகரணம்

SKIL POWER TOOLS

# சக்தி உபகரணம் சேவை முகாம்

செப்டம்பர் 23, 24, தினங்களில்




வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டர் பொறியியல் பொது நிறுவனத்தின் விற்பனை முகவர்களான

**ஆர்க் எண்டர்பிறைசஸ்**

150, ஸ்டான்லி வீதி, யாழ்பாணம்.




- பொஸ் மற்றும் ஸகில்ஸ் மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்கையில் விஷேட கழிவு
- சேதாரத்துடன் சக்தி உபகரணம் தொழிற்படல் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான விஷேட கழிவு









dimo TECHNOLOGY உன்னத எதிர்பார்ப்பு

**வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டர் பொறியியல் பொது நிறுவனம்**

65, ஜயதவன வீதி, கொழும்பு – 14.
தொலை : 0777270879

யாழ்ப்பாணக்கிளை
214, ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 0777373660, 0773686651

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 222 ஓட்டங்களால் வென்றது சென்றல்

வலி.வடக்கு,செப்.22

அமரர் வி.ரி.ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்தும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய காலிறுதி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் 222 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழகம் 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன் 17 நான்குகள் ஒரு ஆறுடன் 92 ஓட்டங்களையும் பாலேந்திரா 10 நான்குகளுடன் 78 ஓட்டங்களையும் சசிகாந் 38 ஓட்டங்களையும் சிவசங்கர் 27 ஓட்டங்களையும் சதீஸ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரவிசங்கர் 10 ஓவர்கள் பந்து வீசி, ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 46 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் சிவதாஸ் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 57 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் முகுந்தன், டிலக்சன் முறையே 34, 46 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

360 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 29.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

கஜதீபன் 33 ஓட்டங்களையும் சாந்தசீலன் 16 ஓட்டங்களையும் சஞ்சீவன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெசிந்தன் 09 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், சுபதீஸ் 08 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், விமலகாந் 09 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சுதர்சன் 08 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,செப்.22

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணி எதிர் வண்ணார்பண்ணை காமாட்சி விளையாட்டுக்கழகம் (காலை 8.30 மணி).
* யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் (பிற்பகல் 1 மணி). (த-86)

* * *

வலி.வடக்கு,செப்.22

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நலன்புரி சங்கம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச சபை உழியர்களுக்கு இடையே நடத்தும் 06பேர் பங்குபற்றும் 05 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* வேலணை பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.
* சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.
* ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக அணி எதிர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலக அணி.
* புத்தூர் பிரதேசசபை உப அலுவலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து சுன்னாகம் பிரதேச சபை அணி மோதவுள்ளது. (த-86)

* * *

யாழ்ப்பாணம்,செப்.22

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

# கலைவாணி, யங்ஹென்றீசியன் அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.22

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம், இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் ஆகியவை பாசையூர் அன்ரனிஸ் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளன.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் கடந்த வாரம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் இளவாலை யங் கென்றீசியன் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான மற்றொரு ஆட்டம் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பாரதி விளையாட்டுக் கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# வென்றது உடுவில் சிந்து

யாழ்ப்பாணம்,செப்.22

கட்டுடை விநாயகர் விளையாட்டுக் கழக அணியுடனான ஆட்டத்தில் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டு சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் இவ்வாண்டிற்கான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்தவாரம் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் சிந்து விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக அணியினை 11:05 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி கொண்டது. (த-23)




# அரையிறுதியாட்டத்தில் இருதயராஜா வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.22

வேலணை அம்பிகை நகர் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி தீவக ரீதியில் நடத்தப்பட்ட 9பேர் பங்குகொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் எதுவித கோலையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்குச் 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (த-23)

# கிரிக்கெட் பயிற்றுநருக்கான பயிற்சி முகாமும் பரீட்சையும்

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை கிரிக்கெட் சபையினால் யாழ்.மாவட்டத் தில் தெரிவுசெய்யப்பட்ட கிரிக்கெட் பயிற்றுநருக்கான (தரம் I) பயிற்சி முகாம் ஒன்று நாளை வியாழக்கிழமை முதல் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமைத் தொடர்ந்து பரீட்சையும் இடம்பெறும் என யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் ஏ.எஸ். நிஷாந்தன் அறிவித்துள்ளார். (த-23)

# விளையாட்டு உத்தியோகத்தர் பதவி போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.22

வடமாகாண பொதுச் சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர் வகுப்பு IV, தரம் II இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளன என வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 0263262951 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-16)

# மெலிஞ்சிமுனை இருதயராஜா சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.22

அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்துடனான ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வேலணை அம்பிகை நகர் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி தீவகரீதியில் இடம்பெற்று வந்த 9பேர் பங்குகொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வேலணை அம்பிகைநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய வேலணை அம்பிகைநகர் விளையாட்டுக்கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

# விளையாட்டு வீரர்கள் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.22


சுவிஸ் அபிவிருத்திஅமைச்சின் நிதியுதவியுடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட விளையாட்டு வீரர்களின் நிலையம் நாளை காலை 8.30 மணியளவில் சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி ஹான்ஸ் பிற்றர் ஏற்றரினால் திறந்துவைக்கப்படவுள்ளது. (த-23)



மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் விளையாட்டு அணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மாகாணமட்ட எல்லே போட்டியில் முதலிடம் பெற்ற [illegible] த்திலும், கரப்பந்தாட்டத்தில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற 15வயதுப் பிரிவு அணியை இரண்டாவது படத்திலும் [illegible] இரண்டாம் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு அணியை இறுதிப் படத்திலும் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கையின் அனைத்து மாகாண ஆளுநர்களின் 13ஆவது தேசிய வருடாந்த மாநாடு அண்மையில் திருகோணமலை அலஸ்தோட்டம் சாயு புளூ ஹோட்டலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. 9 மாகாணங்களின் ஆளுநர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், மாநாடு இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் மொஹான் விஜேவிக்கிரம பரிசொன்றை கையளிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (த)

# நவீன கல்வி அபிவிருத்தியை நோக்கியதாக பாடசாலைகளில் நவோதயா வார நிகழ்வுகள்

## இறுதிநாள் வைபவங்கள் நாளை

யாழ்ப்பாணம், செப். 22

நவோதயா, துரித கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நவோதயா பாடசாலைகளின் 2010 ஆம் ஆண்டுக்கான நவோதயா வார நிகழ்வுகள் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகின. இந்நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை வரை இடம்பெறும். கல்வியமைச்சின் அறிவுறுத்தல்க ளுக்கு அமையயாழ்.மாவட்டத்தில் 5 வலயங்களிலும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்ட பாடசாலைகளிலுல் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பாடசாலை அபிவிருத்தியையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் சமூக ரீதியாக ஏற்படுத்தும் ஓர் செயற்பாடாகவே நவோதயா வார நிகழ்வு அமை கின்றது.

1998 இல் இத் திட்டம் அமுல்படுத்தப் பட்ட போது 342 பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நவீன கல்வி அபிவிருத்தியில் கிராமப் பாடசாலைகளையும் கவனத்தில் எடுத்து நகர்ப் புறப் பாடசாலை மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு இணையாக பயணிக்க வைக்கும் ஒரு முயற்சியாகவே இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

நவோதயா 2010 நிகழ்வுகள் பாடசாலைகள் சார்ந்த பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். நவீன கல்வி உலகின் நவஉதயமாக இத் திட்டம் திகழவேண்டுமெனில் மேலும்பல அபிவிருத்திச் செயற்பாடுகள் பௌதிக வள ரீதியாக விரிவுபடுத்தப்படவேண்டும் என்பது நவோதயா பாடசாலைகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

யாழ்.மாவட்டம், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட நீண்ட வரலாற்றினை உடைய (174 ஆண்டுகள்) மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் திருமதி வே.சண்முகரத்தினம், நவோதய 2010 வார நிகழ்வுகள் தொடர்பாக தெரிவிக்கையில்:

இவ்வாண்டுக்கான நவோதயா வார நிகழ்வுகள் நாள்தோறும் விசேட செயற்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் முதலாம் நாள் நவோதயா வார ஆரம்பநாள் நிகழ்வுகள் சிறப்பாக ஆரம்பமாகின.

இரண்டாம், மூன்றாம் தினங்கள் சிரமதான தினமாக ஒழுங்குசெய்யப்பட்டன. இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்களிப்பு மட்டுமன்றி மானிப்பாய்ப் பிரதேச படை அதிகாரி தலைமையில் படையினரும் இணைந்து பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

நான்காம் நாள் நிகழ்வு சுற்றாடல் விழிப்புணர்வு தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவர்கள் நாடகம் மூலம் டெங்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியமை சிறப்பம்சமாகும். ஐந்தாம் நாள் சுகாதார போசாக்கு தினமாகும். இதில் மானிப்பாய் பிரதேச சுகாதாரப் பிரிவினர் பல்ஊடக எறியி (MULTI MEIA) மூலம் சுகாதரமும் போசாக்கும் தொடர்பானயும் விளக்கங்களையும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

6 ஆம் நாள் நிகழ்வு கணித, விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப தினமாக இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் புத்தாக்கக் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

7 ஆம் நாள் மற்றும் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கலை இலக்கிய நிகழ்வுகளாகக் கொண்டாடப்படவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். அன்றைய தினம் பல்வேறு கலை நிகழ்வுகள்(தமிழ்த்தினம்)இடம்பெறவுள்ளன.

நவோதயா துரித அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் மாணவர் நலன்சார்ந்த அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையும் பாடசாலை சமூகத்தவர்களால் பாராட்டப்படுகின்றது. இவ் வருடமும் பாடசாலையின் சிறு அபிவிருத்திக்கென நவோதயா வார நிகழ்வினை ஒட்டி ரூபா ஒரு இலட்சம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த)




யாழ்ப்பாணம், செப். 22

புன்னாலைக்கட்டுவன், ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை வியாழக் கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (201)

* * *

தென்மராட்சி, செப். 22

சாவகச்சேரி, செருக்கற்பதி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறும். (201-207)

## வலி.மேற்குப் பிரதேச சபைக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடம்

நாவற்குழி, செப். 22

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு இரண்டு மாடிகளைக் கொண்ட பொது நோக்கு மண்டபமும் அலுவலகமும் இணைந்த ஒரு கட்டடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் 35.455 மில்லியன் ரூபா செலவில் இக் கட்டடம் அமையவுள்ளது.

வடமாகாண சபையின் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி இதற்குரிய கேள்விப் பத்திரங்களைக்கோரியுள்ளார்.

(த-121)


# மரண அறிவித்தல்

## பேதுறுப்பிள்ளை கிறகோரி (செல்லத்துரை)



மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.21, அடப்பன் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறுப்பிள்ளை கிறகோரி (செல்லத்துரை) நேற்று (21.09.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறுப்பிள்ளை- தயாபரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்- மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பறோசலினின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, ஆனாப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை, அகுஸ்தீனுப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அந்தோனிப்பிள்ளை, சந்தியாம்பிள்ளை, பேரின்பம், டில்லிமலர், ஞானமலர் ஆகியோரின் மைத்துனரும் சகாயநாதன் (ராசு), ஜெறோம் (தேவதாஸ்), செல்வநாயகி (பிறீடா), மரியநாயகி (ஐடா), யோகநாதன் (யோகதாஸ்- லண்டன்), யேசுதாசன் (அல்போன்ஸ்- லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மரிஸ்ரெல்லா, புஸ்பராணி, அந்தோனிப் பறுநாந்து, ராஜசெல்வம், அனுஷியா (லண்டன்), செல்வந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சுபைதா, கியூட்சன் (லண்டன்), சுதர்ஷன், சுதர்ஷினி, சுரேந்தினி, கொலிண்டன், கொன்சலிற்றா, நிதர்ஷன், நிரோஜன், றொசிங்ரன், யூட்ணா, றட்ணா, கிருபா, றொபின்சன், கஜி, செல்வநேசன், சுலக்ஷனா, சுலக்ஷன், ஸ்ராலின் (லண்டன்), கரோலின் (லண்டன்), டிவோணா (லண்டன்), டிவைனா (லண்டன்) ஆகியோரின் பேரனும் சுயந்தன், கில்சன், சுயானி, கலையினி, சுஜீவா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இல.21, அடப்பன் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் இருந்து இன்று (22.09.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மண்டைதீவு, புனித பேதுறுவானவர் ஆலயத்தில் இரங்கல்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் புனித பேதுறுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கி.சகாயநாதன் (ராசு-மகன்)

(103655)


### நெல்லியடி ம.வி. யில் நவோதயா இறுதி நிகழ்வு

வடமராட்சி, செப். 21

நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இந்த ஆண்டுக்கான நவோதயா வார இறுதி நிகழ்வுகள் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர்ஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார்.

காலை 8.30 மணிக்கு கல்லூரியின் 'எல்' மண்டபத்தில் பிரதியதிபர்அ.அரியரத்தினத்தின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களான கு.செல்வன், க.ம.ஈஸ்வரதேவன், திருமதி [illegible] ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)


# பாராட்டி வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் அண்மையில் பேராசிரியரா கக் கௌரவிக்கப்பட்டு நீண்ட காலத்திற்குப் பின்னர், யாழ்ப்பாணப் பல் கலைக் கழகக் கலைப் பீடத்தில், இளம்வயதில் 'பேராசிரியரான' பெருமை யைப் பெற்றிருக்கின்ற என் பேராசானும் என் முதுதத்துவ மாணிப்பட்டத்திற்கான (M.Phil) ஆய்வின் நெறியாளருமான

பேராசிரியர்

## கலாநிதி கி.விசாகரூபன்

அவர்களைப் பாராட்டுவதில் அகமகிழ்வடைகின்றேன். பேராசிரியரின் பதவிக்காலத்தில் தமிழ்த்துறை, மேலும் பல சிறப்புக்களை அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

பெருமிதத்துடன்,

**திரு.ந.சத்தியவேந்தன்,**
B.A. (HONS), M.Phil (Jaffna)
*(முன்னாள் உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)*

(103644)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...அரசகேசரிப் பிள்ளையார் ஆலய... ...ப்புமலர் - 22.09.2010



குடமுழுக்குச் செய்தான். தான் அமைத்த அந்த ஆலயத் திருமுற்றத்தில் வைத்தே தான் செம்பாட்டுக்களாற் பாடிய இரகுவம்சத்தை அரங்கேற்றினான். இக்காரணம் பற்றியே இக்கோயில் அரசகேசரிப் பிள்ளையார் கோயில் என்றும் செம்பாட்டுப் பிள்ளையார் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது.

அரசகேசரி கட்டிய கோயில் போர்த்துக்கேயர் காலத்தில் அழிவுற ஒல்லாந்தர் கால இறுதியில் அது மீண்டும் அமைக்கப் பெற்றிருக்கிறது. 2½ ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இவ்வாலய மஹோற்சவம் விநாயக சதுர்த்தியை ஒட்டிக் கொடியேறி பதினொரு நாள்கள் இடம்பெறுகின்றது. இவ்வாலய சித்திரத்தேர் 1967 இல் உருவாக்கப்பெற்றது. யாழ்ப்பாணத்தின் தனித்துவமான தேர்களுள் ஒன்றாக இது கருதப்படுகின்றது.

நீர்வைமணி.

## ஏர்நிறை செல்வனைத் தேரினில் காண்க



*காப்பிய (ரகு) வம்சம் கண்ட நல்மந்திரியின்*
*நாப்பண் நீர்வையின் நாயகன் - பாப்புனைந்து*
*தம்பாட்டுச் சீர்பெற்றோர் பூசித்துப் பூவைத்துச்*
*செம்பாட்டுப் பிள்ளையென்றார் பார்*

*எத்தனையோ துன்பம் எதிர்கொண்டு வந்தாலும்*
*அத்தனையும் தூளாக்கும் என்னப்பன் - வித்தகனாம்*
*நீர்வைப்பதி யாரென்ன நீளுலகார் வாழ்வார்*
*ஏர்நிறை செல்வன்மீ தாணை*
*தேர் மீ(து) அமர்ந்தருள்க தேறுதல் தந்திடுக*
*பார்மேல் தமிழர் பகைமாழ்க - நேர்கின்றேன்*
*நண்ணுவார் காக்கும் நாயகா நீயென்றும்*
*கண்ணிறை நல்லருள் தா!*

'சிவத்தமிழ்ச் சொல்லழகர்' ச.லலீசன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் அரசகேசரிப் பிள்ளையார்

சகல வளங்களும் பெற்ற சிறப்பு மிக்க ஊர் நமது நீர்வேலிக் கிராமம். நமது ஊரின் மத்தியிலிருந்து மக்களுக்கு அருள்பாலிப்பவர் அரசகேசரிப் பிள்ளையார். வேண்டுவோர்க்கு வேண்டுவதை ஈயும் எம்பெருமான் மீது ஊர் மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர்.

'பிள்ளையார் கோயிலில் நேர்த்தி வைத்தால் விரும்பிய வரம் கிட்டும்' என்று நம்புபவர்கள் எமது ஊர் மக்கள். அப்பேற்பட்ட சிறப்பும் புதுமையும் வாய்ந்த ஆலயத்தின் அறக்காவல் சபையின் தலைவராக இருக்கும் வாய்ப்புக்கிட்டியது விநாயகப் பெருமானின் அருள் என்றே கருதுகிறேன். என்னுடன் பணியாற்றும் சகல உறுப்பினரும் பூரண ஒத்துழைப்பைத் தருகின்றனர்.

எமது ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சோமதேவசர்மா தமது மகன் ஜெகன் உதவியுடன் தமது பணியைச் சிறப்புறச் செய்கிறார். அவருக்கு எமது நன்றிகள்.

நமது ஊர் மக்களும் ஆலயம் சிறப்பாக நடப்பதற்கு வேண்டிய நிதியுதவியை அளித்து வருகிறார்கள். அவர்களுக்கு விநாயகப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

இ.தியாகராஜா, அறங்காவலர்சபைத் தலைவர்.
ச.சந்திரசூடி, செயலாளர்.

## பிரார்த்தனைச் செய்தி



நீர்வேலி மண் அறிஞர்கள், குருமார், அருளாளர்கள் பிறந்த மண். இவ்வாறு பெருமை மிக்க இவ் ஊரில் நிறைந்த அருளலைகள் சிறந்த கலையம்சம் கொண்ட அரசகேசரி விநாயகர் தேரேறி வந்து மக்களின் வல்வினைகளைக் களைந்து பேரருள் புரியும் இன்றைய நாளில் சகல செல்வயோக சுபவாழ்வு வாழ எல்லாம் வல்ல அரசகேசரி விநாயகனை இறைஞ்சுவோமாக.

ச.க.முருகையா, பொருளாளரும் நிரந்தர ஆலயத் தொண்டனும்.

## அருட்பெருங்கடலில் மூழ்கித் திழைக்க வாரீர்!

மூத்தவரும் தேசிக வாகனரும் சித்திகள் பல தந்து சிந்தை மகிழ வாழ வைக்கும் எங்கள் கருணைக் கடல் மூல கணபதி அரசகேசரியான் இன்று தம்பி முருகன் வள்ளி தேவசேனாவுடன் தேர் ஏறி எழிலாய் வருகிறான். வல்வினை, தொல்வினை, தீரவினை யாவையும் அறவே களைந்து அருட்பெருங் கடலில் மூழ்கித் திழைக்கவைத்து காத்தருள்வான் ஐயமில்லை வாரீர்! பணிவீர்!!

நீரூர் முருகதாசன்.

**...யகா...! முருகன் வள்ளி தேவசேனாபதியுடன் தேரிலே எழுந்தருள்வாய்!!**


...ின் கால்நடை
...ரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.
...பட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட

...கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு
...வும் மிகவிரைவாகவும் பொருள்களை




...தரன்
...போட் சேவை

தொடர்புகளுக்கு:
42 3/1, Bosswell Place,
தொ.பே: 0112 362664, 0114555391.

...அன் கம்பனியின்

...வகைகள், ❄போட்டோக் கொப்பி இயந்திரங்கள் ❄ ரோனர் வகைகள்
...த்தின் இரு சக்கர உழவு இயந்திரங்களையும் மொத்தமாகவும்
...யாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
...ரவகைகள் ❄கிருமிநாசினி வகைகள் ❄ தண்ணீர்த்தாங்கிகள்
...கள் ❄ பெயின்ற் வகைகள் என்பவற்றையும்
...ஸ் கம்பனிகளின் கிருமிநாசினி வகைகள், உரவகைகள், கால்நடை
...னைக்குத் தேவையான மளிகைப் பொருள்களையும் மொத்தமாகவும்
...ின் கீழ் நியாயவிலையில் பெற்றிட தலைசிறந்த நிறுவனம்

...களஞ்சியம்
...ர்வேலி வடக்கு, நீர்வேலி.

ஸ்ரீமகாவிஷ்ணு

**இரத பவனி சிறக்க வாழ்த்துவோர்:**

**சண் வர்த்தக நிலையம்**
குறுக்கு வீதி, நீர்வேலி.

**SNV Hardware**
Point Petro Road, Neervely Centre, Neerveli.

**அம்பாள் அரைக்கும் ஆலை**
நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி, நீர்வேலி

**கண்ணன் ஸ்ரோர்ஸ்**
அச்செழு

**திலக்சன் சுருட்டு தொழிலகம்**
கரந்தன் வீதி, நீர்வேலி.

**கிருஸ்ணா களஞ்சியம்**
நீர்வேலி வடக்கு

**நவநீதன் மல்ரி சென்ரர்**
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

**பொ.கிருஷ்ண குமார்**
கட்டட ஒப்பந்தகாரர்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**நந்தினி வண்ணச் சோலை**
முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ஒப்பிலாமணி நடேசரூபன்

**கரன் ஜூவலறி**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**ஆனந்தன் சுவையகம்**
& பல்பொருள் வாணிபம்
அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வீதி, நீர்வேலி.

**கஜானன் அரைக்கும் ஆலை**
இராஜ வீதி, நீர்வேலி வடக்கு.
உரிமையாளர்: S. நாகரத்தினம்.

**அபிராமி மருந்தகம்**
பருத்தித்துறை வீதி, நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி.

**ஜெயகலா அரைக்கும் ஆலை**
அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வடக்கு வீதி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தஞ்சமடைந்த இடங்களெல்லாம் சவக்காடுகளாக மாறிப்போயின

கண்ணீர் துயர் சுமப் போரின் குறியீடாக இருந்தாலும் அது கல்லையும் கரைக்கவல்ல ஆயுதம். அந்த ஆயுதம்கூட பயனற்றுப்போய்விட்டது. காணாமற்போன உறவுகளைப் பற்றிக் கதை வந்தவுடனேயே அவர்களை அறியாமலேயே கண்களில் நீர் சுரந்து விடுகின்றது. அந்தக் கண்ணீர் எதிரே நிற்போரிடத்தேயும் சோகத்தின் தாக்கத்தை உண்டுபண்ணி அவர்களிடத்தேயும் கண்ணீரை



உற்பத்தி செய்துவிடுகின்றது. அது கண்ணீருக்கு மட்டுமே உள்ள சக்தி. அந்த சக்தி அதிகாரம் உள்ளவர்களின் முன்னால் இந்த ஏதிலிகளுக்கு பயனற்றுப்போய்விட்ட விடயம். எத்தனை தடுப்பு முகாம்களுக்கு ஏறி இறங்கியிருப்பார்கள். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு, அமைச்சுச் செயலகங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் போன்ற ஏராளமான

## யார் துடைப்பார் இவர்களின் கண்ணீரை? ➡ 3

இடங்களில் எல்லாம் இந்த மக்களின் கண்ணீர்த் துளிகள் உறைந்துபோய்க் கிடக்கின்றன. உப்புக் கரிக்கும் இந்த நீர்த் துளிகள்தான் நிதமும் இந்த மக்களுடன் கூடவே உறவாடுகின்றன.

சின்னத்துரை பரமேஸ்வரி - (வயது - 60) என்ற தாயின் புலம்பல் எங்களை அவர் அருகாகச் செல்ல வைத்தது. ஏற்கனவே கண்களில் துளிர்த்துக் கிடந்த நீர்த்துளியோடு எங்களைப் பார்த்தார். ''என்ர பிள்ளைக்கும் உங்கட வயசுதான் இருக்கும். மாத்தளனில் அவனை இயக்கம் பிடிக்கேக்க 20 வயசு. அவங்கள் கொண்டு போன பிறகு என்ர பிள்ளையப் பாக்க முடியாட்டியும் அவன் எங்கயெங்க நிக்கிறான் எண்டு ஆக்கள் வந்து சொல்லுவினம். அது மட்டும் நிம்மதியாக இருந்தது. ஏதோ எங்க இருந்தாலும் என்ர பிள்ளை உயிரோட இருக்கிறான் எண்ட நினைப்பிலேயே இருக்க முடிஞ்சிது. ஆனா வர வர சனத்துக்கு இழப்புகள் கூடிட்டுது. அங்க இருக்க ஏலாது. ஓடுற சனத்தோட சேர்ந்து ஓடுறதைத் தவிர வேற வழி இல்லை. தொடர்ந்து திக்குத் திசை தெரியாமல் ஓடிக்கொண்டே இருந்தம். ஒழுங்கான சாப்பாடு தண்ணீ இல்லை. இருக்கிறதைக் கொண்டு கால் வயிறோ அரைவயிறோ தான் சாப்பிட்டம். அங்க சாப்பிடுறதுக்கும் பெரிசா ஒருத்தருக்கும் மனம் இல்லை. ஷெல் அடியில இருந்து தப்பிறதுக்காக ஓடுறதுக்கு உடம்பில தென்பு இருக்க வேணும் எண்டதுக்காகத்தான் சாப்பிட்டம்.



மகளைத் தேடி அழும் குமாரசாமி கனகலிங்கம்

எல்லா இடமும் சவக்காடு மாதிரி ஆக்களின்ர 'பொடி' சிதறிக்கிடக்கும். அதுகளைப் பார்த்துக்கொண்டு நிக்க ஒருத்தருக்கும் நேரம் இருக்காது. ஓடுற வேகத்தில பிணங்கள மிதிச்சுக்கொண்டும் சனம் ஓடினதுதான். இப்பிடி ஓடிவந்தபிறகு மகனைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. கடைசியா நடந்த சண்டையில அவன் ஆமியிட்டப் பிடிபட்டதா நாலைந்து பேர் சொல்லிச்சினம். அது மட்டும்தான் எனக்குத் தெரியும். பிள்ளைய எங்க வைச்சிருக்கிறாங்கள்? என்ன செய்யிறாங்கள் எண்டு அறியிறதுக்காக நான் ஏறியிறங்காத இடமில்லை. என்ர கால் தேஞ்சதுதான் மிச்சம். பிள்ளையப் பற்றி ஒருத்தரும் வாய் திறக்கிறாங்கள் இல்லை. இண்டைக்கு ஆணைக்குழுவிட்ட பதிஞ்சால் எங்கட பிள்ளையளை விடுவாங்களாம் எண்டு ஆரோ சொல்லிச்சினம். தகவல் அறிஞ்ச உடனே சீலையைச் சுத்திக்கொண்டு வந்திட்டன். ஆனா இஞ்ச வந்தபிறகுதான் தெரியுது இதுவும் வழமைமாதிரி பேப்பர வாங்கிக்கொண்டு போற விளையாட்டுத்தான். அவங்களுக்கென்ன? ஏசிக் காரில வந்திட்டுப் போயிடுவாங்கள். நான் உருத்திர புரத்தில இருந்து இந்த ஏலாத வயசில நடந்து வாறன். என்ர பிள்ளை இருக்கேக்க இப்பிடி என்னை நடக்க விடுவானோ? பிள்ளை போனபிறகு எனக்கு அணை, துணை இல்லை. எல்லா வேலைக்கும் நான்தான் ஓடித்திரிய வேண்டிக் கிடக்கு. அவனத் தேடியும் நான்தான் அலையவேண்டும். இந்த அலைச்சல் எப்பதான் முடியப்போகுதோ தெரியேல்ல. நான் கண்ணை மூடமுதலாவது என்ர பிள்ளைய என்ர கண்ணில காட்டமாட்டாங்களோ?'' கேள்வியோடு தன் கதைய்ச் சொல்லி முடித்தார் அந்த அம்மா. அவர் கையில் இருந்த புகைப்படம் நீண்ட கால அலைச்சலில் அகப்பட்டு உருக்குலையும் நிலையை அடைந்திருந்தது. மகனின் பிறப்புச் சான்றிதழ், மகனை விடுவிக்குமாறு பல்வேறு தரப்புகளுக்கும் அவர் எழுதிய கடிதங்கள் என எல்லாமே கசங்கிப் பழுப்பேறிப் போய் இருந்தன. இவை எல்லாம் அந்தத் தாய் காலத்தின் ஒவ்வொரு பக்கங்களுக்கும் தூக்கி வீசப்பட்டுக்கொண்டிருப்பதை உணர்த்தின.

தனது கணவனின் உயிரைக் கவர்ந்து செல்லும் யமனிடம் இருந்து மீட்பதற்காக தொடர்ந்தும் அவன் பின்னாலேயே அலைந்த இதிகாசத்தில் வரும் சாவித்திரியை அங்கு நின்ற பெண்கள் நினைவூட்டிக்கொண்டிருந்தனர்.

கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு வெளியே சைக்கிளில் நின்ற ஒரு பெண் அப்போதுதான் தகவல் அறிந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடிவருகிறவர்களுக்கு, ஆணைக்குழுவின் அமர்வு நடைபெறுமிடத்தைக் காட்டிக்கொண்டிருந்தாள். இயல்பான முகம். எந்தவித சலனமும் இல்லாமல் மற்றவர்களின் அலைச்சலைக் குறைப்பதற்காக வழிகாட்டிபோல செயற்பட்டுக்கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணைப் பார்ப்பவர்கள் யாருடனோ துணையாக வந்திருக்க வேண்டும் என்றுதான் எண்ணுவார்களே தவிர தன்னுடைய கணவனைப் பறிகொடுத்த பெண்ணாக அவளை ஒருபோதும் அடையாளப்படுத்த மாட்டார்கள்.

தேவராசா சயந்தினி - (வயது - 29) என்ற அந்தப் பெண்ணின் கணவரும் பிடிபட்டு வெலிகந்த தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறார். எல்லோரும் தமது உறவுகளை விடுவிக்குமாறு கோரும் கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கையில் இவர் மட்டும் ஆறுதலாக இருந்தது ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணியது. ஆனாலும் அவரின் வார்த்தைகள் அவரின் செயற்பாடுகளுக்கான காரணத்தை உணர வைத்தன.

''இவங்களுக்குச் சொல்லி ஒண்டும் நடக்கப்போறேல்ல. நான் முந்தின விசாரணைக் குழுவுக்குக் கொடுத்த கடிதத்தின்ர கொப்பியைத் தான் இங்கையும் கொடுத்தனான். இவங்கள் உதுகள வாங்கிக்கொண்டுபோய் எங்கையாவது குப்பைக் கூடைக்குள்ளதான் போடுவாங்கள். எங்களுக்கும் அது வடிவாத் தெரியும். ஆனாலும் ஒரு மனத்திருப்திக்காகக் குடுக்கிறம். நெடுக அழுதழுது இப்ப அழவே முடியாமக் கிடக்கு. தடுப்பில இருக்கிற அவரப் பார்க்க நெடுகலும் போக ஏலாது. உழைப்புப் பிழைப்பு இருந்தாலாவது கையில காசிருக்கும். அவரும் இல்ல. காசுக்கு எங்க போறது? எப்பவாவது காசு கையில சேர்ந்தால் அவருக்குப் பிடித்த சாப்பாடுகள் செய்துகொண்டு போய்வருவோம். அவருக்கும் அண்டைக்குத்தான் நல்ல சாப்பாடு கிடைக்கும். இந்தா விடுகிறம் எண்டு ஆறுமாதத்துக்கு முதலே சொன்னவங்கள். ஆனா இன்னும் விட்டபாடா இல்லை. அவர விட்டாத்தான் எங்கட குடும்பத்தில திரும்பவும் சந்தோசம் வரும்.'' என்று கூறிவிட்டு தன்னைப் போலவே உறவுகளை இழந்தவர்களுக்குக் கடிதங்களை ஒப்படைக்கவேண்டிய இடத்தைக்

**ஓளண்யன்**

காட்டிக்கொண்டிருந்தார்.

அதன் பிறகு 43 வயதான குமாரசாமி கனகலிங்கம் என்பவர் தன் மகளை இழந்த கதையைச் சொன்னார்.

''என்ர பிள்ளை கனகாம்பிகை மகா வித்தியாலயத்தில ஓ.எல். படித்துக் கொண்டிருந்தவா. ஆனாலும் அவங்கள் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள். வீட்டுக்கு ஓராள் கட்டாயம் சண்டைக்குப் போகவேணும். நானும் என்ர பிள்ளையக் கொண்டுபோக விடாமல் எவ்வளவோ முயற்சி செய்துபார்த்தும் முடியேல்ல. கலைமகள் (வயது- 18) தான் மூத்த பிள்ளை. வலு கெட்டிக்காரி. படிப்பிலையும் வீட்டு வேலையிலையும் அவள மிஞ்சி



சின்னத்துரை பரமேஸ்வரியின் செல்ல மகன் எங்கே?

ஒருத்தரும் இல்லை. இயக்கம் கொண்டுபோன பிறகு ஒருநாள் என்ர பிள்ளைக்கு காலில காயம் எண்டு ஆரோ வந்து சொல்லிச்சினம். (சிறிது நேரம் உரையாட முடியாமல் பெரும் குரல் எடுத்து அழத்தொடங்கினார். சுற்றுச் சூழலோ, தான் அழுவதை மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற நினைப்போ இல்லாமல் மகளின் இழப்பால் அந்தத் தந்தையின் விழிகளில் இருந்து சுடு நீர் இறங்கிக்கொண்டிருந்தது). அண்டையில் இருந்து ஒழுங்காக நித்திரை இல்லை. எப்பவும் மகளின் நினைப்பாகவே இருக்கு. அவாவ காயத்தோட ஆமி ஓமந்தை முகாமில வைத்திருக்கிறதா அறிஞ்சு அங்க போனம். ஆனா அங்கை இல்லை எண்டு சொல்லிப் போட்டாங்கள். அதுக்குப் பிறகும் கன இடங்களில அவா இருக்கிறதா கேள்விப்பட்டு ஓடிப்போனம். ஒரு இடத்திலையும் இல்லை எண்டுதான் பதில் வந்திது. ஜனாதிபதிக்குக் கூட கடிதம் எழுதிப்பார்த்தாச்சு. ஒரு பிரியோசனமும் இல்லை. என்ர பிள்ளையப் பிடிச்சவைய கை எடுத்துக் கும்பிட்டுக் கேக்கிறன். எங்கை இருந்தாலும் என்ர பிள்ளைய என்னட்டத் தாங்கோ. இல்லாட்டி என்ர கண்ணிலையாவது காட்டுங்கோ'' அவர் சொல்லிக் கொண்டே போக எங்களுக்கு விழிகள் கசியத் தொடங்கின.

(இன்னும் கண்ணீர் காயவில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்கள் மூவர் இந்தியாவில் வைத்துக் கைது

## சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள்

சென்னை, செப். 22

சென்னை, பாரிமுனையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இலங்கையைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை கைதுசெய்து, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கடல் வழியாக படகு மூலம் இலங்கையில் இருந்து வந்துள்ள சிலர் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்லவுள்ளதாக தமிழக கியூ பிரிவுப் பொலிஸார் சென்னை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர். அவர்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருந்தனர். இதையடுத்து, சென்னைப் பொலிஸார் கடலோரப் பகுதிகளில் தீவிரமாகக் கண்காணிப்பில் ஈடுபட்டுவந்தனர். அத்துடன் இரவில் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமானவர்களை விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சென்னை பாரிமுனை தம்புசெட்டி தெரு, என்.எஸ்.சி. போஸ் வீதி சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சந்தேகத்துக்கிடமான முறையில் 3 இளைஞர்கள் நடமாடுவது குறித்து வடக்கு கடற்கரைப் பொலிஸாருக்குப் பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர். உடனே அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த மூன்று தமிழ் இளைஞர்களையும் கைது செய்தனர்.

விசாரணையில், குறித்த மூன்று இளைஞர்களும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் என்பது தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயகுமார், விஜயகுமார், முல்லைத்தீவைச் சேர்ந்த அந்தோணிதாஸ் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் முன்னுக்குப்பின் முரணான தகவல்களைத் தெரிவித்ததாகவும் முதலில் அகதிகள் முகாமில் இருந்து வந்ததாகக் கூறினார்கள். பின்னர் ஆஸ்திரேலியா நாட்டில் வேலை வாங்கித்தருவதாக ஒருவர் தம்மை இங்கே வரச்சொன்னதாகவும் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் கூறியுள்ளனர்.

மேலதிக விசாரணையில் தம்மை போல் மேலும் பலர் ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக இலங்கையில் இருந்து வந்து பூந்தமல்லி அருகேயுள்ள வேலப்பன் சாவடியில் தங்கியிருப்பதாகவும் இளைஞர்கள் கூறியுள்ளனர்.

# இந்தியச் செய்திகள்

# திருமணம் முடித்த 10ஆவது நாளில் வெளிநாடு சென்றவர் திரும்பவில்லை

## *பணம் கொடுத்து ஏமாந்த மனைவி முறைப்பாடு*

திருமணம் முடிந்த 10ஆவது நாளில், மலேசியா சென்ற கணவர் தான் தொடர்பு கொள்ளும் போதெல்லாம், 'இந்த எண் உபயோகத்தில் இல்லை' என ஏழு ஆண்டுகளாக ஏமாற்றி வருவதாக மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே கலையூரை சேர்ந்தவர் விஜயலட்சுமி(24). இவருக்கும், அபராமம் அருகே பொட்டகவயலை சேர்ந்த ராஜிவ்காந்தி (28) என்பவருக்கும் கடந்த 2004இல் திருமணம் நடந்தது.

மேசன் வேலை செய்து வந்த ராஜிவ் காந்திக்கு, வெளிநாடு சென்று வேலை பார்க்கவேண்டும் என்ற ஆசை இருந்தது. இதற்காக தனது திருமணத்திற்கு, நகைக்குப் பதிலாக வெளிநாடு செல்லத் தேவையான பணத்தை மனைவி வீட்டாரிடம் பெற்றுக்கொண்டார். திருமணம் முடிந்த 10ஆவது நாளில் மலேசியாவுக்குச் சென்றார். வேலைக்குச் சேர்ந்த பின்னர், தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். அதன் பின்னர் எந்தத் தொடர்பும் இல்லை.

விஜயலட்சுமி தொலைபேசியில் தொடர்புகொண்ட போதெல்லாம், 'இந்த எண் உபயோகத்தில் இல்லை' என தானே கூறி ஏமாற்றி வந்தார். விஜயலட்சுமியின் பெற்றோர், மலேசியாவில் உள்ள உறவினர் வேல்முருகனைத் தொடர்பு கொண்டு, தங்கள் மருமகனின் செயற்பாடுகள் குறித்து தெரிவித்தனர்.

வேல்முருகன் இது தொடர்பாக கேட்ட போது ராஜிவ்காந்தி தெரிவித்தவை வருமாறு:-

எனது பெற்றோர் என் பேச்சைக் கேட்காமல் திருமணம் செய்து வைத்தனர். எனக்கு இதில் உடன்பாடில்லை, நான் இந்தியா திரும்பமாட்டேன். - இப்படிக் கூறினார்.

# ஆண்டுக்கு 100 மணி நேரம் தியானம், உடற்பயிற்சி செய்தால் 100 வயது வரை மகிழ்ச்சியாக வாழலாம்

## *இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.சொக்கலிங்கம்*

சென்னை, செப். 22

ஆண்டுக்கு 100 மணி நேரம் தியானம், 100 மணி நேரம் உடற்பயிற்சி செய்தால், 100 ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழலாம் - என்று இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.சொக்கலிங்கம் கூறியுள்ளார்.

இதய சிகிச்சை நிபுணர், டாக்டர் வி.சொக்கலிங்கம் எழுதிய 'இதயம் காக்க' என்ற புத்தகம் மற்றும் சி.டி. வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. புத்தகம் மற்றும் சி.டியை சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் வி.கு.சுப்புராஜ் வெளியிட ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி.சிவம், நடிகர் விவேக் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

விழாவில், இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.சொக்கலிங்கம் பேசியபோது தெரிவித்தவை வருமாறு:-

நாம் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை, மனதில் பாரமாக ஏற்றுக்கொள்ளும்போது, மாரடைப்பு ஏற்படுகிறது. பெரும்பாலான மாரடைப்பு அதிகாலை 5 மணியில் இருந்து 8 மணிக்குள் நடக்கிறது. இந்தியாவில் ஒரு நாளில் 90 பேர் இதய நோயால் இறக்கின்றனர். அதில் 25 வயதில் இருந்து 30 வயதுடையவர்களின் இறப்பு விகிதம் அதிகரித்துவருகிறது.

இரவு நித்திரைக்குச்செல்வதற்கு 30 நிமிடங்களுக்கு முன், வாழ்க்கையில் நடந்த நல்லவிடயங்களை நினைத்துப்பார்க்க வேண்டும். மன அழுத்தம் இல்லாமல் பார்த்துக்கொண்டால், இதய நோயில் இருந்து நம்மைப் பாதுகாக்க முடியும். ஒரு ஆண்டுக்கு 100 மணி நேரம் தியானம், 100 மணி நேரம் உடற்பயிற்சி செய்தால், 100 ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழலாம். 'இதயம் காக்க' புத்தகம் மற்றும் சி.டிக்களின் மூலம் கிடைக்கும் பணத்தை, ஏழை, எளிய மாணவர்களின் படிப்புக்கு செலவிடத் திட்டமிட்டுள்ளேன்.

- இப்படி டாக்டர் வி.சொக்கலிங்கம் கூறினார்.

# சபரிமலைக் கோவில் நெய்ப் போத்தல்களை தொடர்ந்து கடத்தி வந்தவர்கள் பிடிபட்டனர்

சபரிமலை, செப்.22

சபரிமலைக் கோவில் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தும் நெய்ப் போத்தல்களைக் கடத்திச்சென்றவர்களை அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர்.

சபரிமலை சன்னிதானத்தில் இருந்து நாள்தோறும் நெய் மற்றும் பொருள்கள் கடத்தப்பட்டு வருவதாக தேவசம்போர்ட் அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் தேவசம் போர்ட் விஜய்மோகன் தலைமையில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது.

அப்போது மும்பை தபால் நிலையம் அருகே ரூ.25ஆயிரம் மதிப்புள்ள நெய்ப் போத்தல்களை அதிகாரிகள் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்துள்ளனர்.

# ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் இளம்பெண்ணை இரகசியத் திருமணம்?

மாஸ்கோ, செப். 22

ரஷ்யாவின் பிரதமராக இருப்பவர் விளாடிமிர் புடின். இவர் உலகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கிறார். இவருக்கும், மனைவி லுட்மிலாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

எனவே கடந்த பெப்ரவரி மாதம் இவர்கள் இருவரும் இரகசியமாக விவா கரத்து செய்துகொண்டனர். இந்த நிலை யில் புடினும் ஓர் இளம் பெண்ணும் காதலித்து வருகின்றனர் என்றும் , இருவரும் திருமணம் செய்து கொள்ள இருக்கின்றனர் என்றும் வதந்தி பரவியது.

தற்போது அந்தப் பெண் யார் என்று ரஷ்ய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அப்பெண்ணின் பெயர் அலினா கபேவா. 24 வயது நிரம்பிய இவர் ஒரு புகழ் பெற்ற ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஆவார்.

இவர் ரஷ்ய நாடாளுமன்றத்தில் எம்.பி.யாகவும் உள்ளார். இவர்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்ய இருக்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதே நேரத்தில் கடந்த ஜூன் மாதம் 15ஆம் திகதியே இவர்களின் திருமணம் முடிந்துவிட்டது என்றும் சில பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

அலினா கபேவா தனது 15 வயதிலேயே ஐரோப்பிய சாம்பியன் ஷிப் போட்டியில் பங் கேற்று ரஷ்யாவுக்காக தங்கப் பதக்கம் வென்றார். இதைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்க பதக்கம் வென்று உலக கவனத்தை தன்பால் ஈர்த்துள்ளார்.

மற்றொரு போட்டியில் அவர் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வெண்கல பதக்கம் பெற்று ரஷ்ய மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தினார். இதற்காக ரஷ்யாவே அவருக்கு வருந்தி கண்ணீர் சிந்தி யது. அப்போதே அவர் புடினின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

ஜிம்னாஸ் டிக் வீராங்கனை அலினா கபேவாவின் தந்தையிடம் திருமணம் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்த அவர் எனது மகளுக்கு திருமணம் நடந்ததா? இல்லையா? என்பது தெரியாது.

அதே நேரத்தில் புடினுடன் அவளுக்கு திருமணம் நடந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். ஏனெனில் அவர் மிக உயர்ந்த மனிதர் - என்றார்.

# உலக அரங்கில்

# பிரதமர் போட்டியிலிருந்து விலக நேபாள காங். வேட்பாளர் மறுப்பு

காத்மாண்டு, செப். 22

பிரதமர் பதவி போட்டியிலிருந்து விலக மாட்டேன் என்று நேபாள காங்கிரஸ் துணைத் தலைவர் ஆர்.சி.பொதியால் காத்மாண்டுவில் திங்கட்கிழமை தெரிவித்தார்.

நேபாள பிரதமர் பதவி போட்டியிலிருந்து மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டா அண்மையில் விலகினார். இதையடுத்து புதிய அரசு அமைவதற்கு ஏதுவாக நேபாள காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.சி.பொதியாலும் போட்டியிலிருந்து விலகிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதனை அவர் மறுத்து விட்டார். போட்டியிலிருந்து விலக மாட்டேன் என் றும், 8ஆவது சுற்று வாக்குப்பதிவை எதிர் கொள்வேன் என்றும் திட்டவட்டமாக தெரி வித்தார்.

இதனால் புதிய அரசு அமைவதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

# அதிநவீன உளவு விமானம்: அமெ. இராணுவம் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், செப். 22

பாதுகாப்பு காரணங்களுக்காக அமெரிக்க இராணுவம் பல புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகிறது. அந்த வகையில் தற்போது வானில் பறந்தபடியே உளவு பார்ப் பதற்காக அதிநவீன விமானத்தை தயாரித்து வருகிறது.

அது போயிங் ரக விமானத்தை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. ரூ.440 கோடி செலவில் இந்த விமானம் தயார் செய்யப்படு கிறது.

இது ஆளில்லாமல் சூரிய சக்தி மூலம் தானாக இயங்கக்கூடியது. இதற்கு சோலார் ஈகிள் (சூரிய கழுகு) என பெயரிடப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் இது சூரிய ஒளியை உறிஞ்சி சேமித்து வைத்து கொள்ளும்.

அதன் மூலம் இரவு நேரத்திலும் கூட தொடர்ந்து பறக்கும். விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன கருவிகள் போட்டோ எடுத்து அதன் மூலம் தகவல்களை அமெரிக்க இராணுவத்துக்கு அனுப்பும்.

விமானத்தில் சக்தி வாய்ந்த எலெக்ட்ரிக் மோட்டார்கள், புரோபல்லர்கள் (உந்து விசை கருவிகள்) ஆகியவை பொருத்தப் படவுள்ளன். இதை ஆளில்லா விமானம் ஆகவும், போர்க்காலங்களில் இதை பயன்படுத்தவும் முடியும். அடுத்த ஆண்டு (2011) இது பயன் பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மியான்மரில் நவம்பர் 7இல் பொதுத் தேர்தல்: எதிர்க்கட்சித் தலைவர் சூகி வாக்களிக்க முடியாது

யாங்கூன், செப். 22

மியான்மர் வாக்காளர் பட்டியலில் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகியின் பெயர் இடம்பெறவில்லை. இதனால், நவம்பர் 7 பொதுத்தேர்தலில் அவர் வாக்களிக்க முடியாது.

1990இல் அந்நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆங்சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால், இந்தத் தேர்தல் முடிவைப் புறக்கணித்த இராணுவ ஆட்சியாளர்கள், ஆங்சான் சூகியை வீட்டுக் காவலில் வைத்தனர்.

இந்நிலையில், நவம்பரில் மீண்டும் அங்கு பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. இதில் ஆங்சான் சூகி போட்டியிட முடியாத வகையில் புதிய சட்டங்களை இராணுவ ஆட்சியாளர்கள் கொண்டு வந்தனர். மேலும், வாக்காளர் பட்டியலிலிருந்து அவரது பெயரை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொதுத் தேர்தலையொட்டி புதிய வாக்காளர் பட்டியல் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. இதில், ஆங்சான் சூகியின் பெயர் இல்லை. அவருக்கு உதவியாக இருக்கும் இரண்டு பெண்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

ஆங் சான் சூகியின் வீட்டுக் காவல் அவ்வப்போது நீடிக்கப்பட்டு வருகிறது. இப்போது அவருக்கு விதிக்கப்பட்டுள்ள 18 மாதங்கள் வீட்டுக் காவல் நவம்பர் 13ஆம் திகதி முடிவடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

திருவண்ணை - கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

### கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விகிர்தி வருஷம் புரட்டாதி திங்கள் 31 ஆம் நாள் (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை கேதார கௌரி விரதம் ஆரம்பமாக இருப்பதால் விரதகாரர்கள், 23.09.2010 வியாழக்கிழமை முதல் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(103646) - தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் முன்னாள்
கல்விப் பணிப்பாளரும், வலிகாமம்
வலயத்தின் கல்விப் பணிப்பாளராக
உன்னத சேவையில்
வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகப்
பதவி உயர்வு பெற்றுச் சென்ற

**திரு. ப.விக்னேஸ்வரன்**

அவர்களின் பதவிக் காலம் சிறப்புற
அமைய வாழ்த்துகின்றோம்.

*அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.*
**யா/இந்து ஆரம்பப் பாடசாலை.** (சி/570644)

## பாராட்டி மனமுவந்து வாழ்த்தி மிக மகிழ்கின்றோம்!



எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய
யாழ்.மாநகர சபை உறுப்பினரும், யாழ்பாடி
விருந்தினர் விடுதி முகாமையாளரும், தமிழரசுக்
கட்சி மத்திய குழு உறுப்பினரும், யாழ்.மத்திய
கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும்,
வண்ணை. வீரமாகாளி அம்மன் ஆலய திருப்பணிச்
சபைத் தலைவரும், 'ஏ-பவர்' நிறுவனத்தில் முன்னர்
முகாமையாளராகப் பணியாற்றியவருமான

**உயர்திரு.**
**நடராஜா ராஜதேவன்**

அவர்கள் யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளமையையிட்டு மிக மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். அவரது பணி நல்ல முறையில் தொடர ஸ்ரீ வீரமாகாளி அம்மன் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*122/18, 4ஆவது ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*
கலாபூஷணம் திரு.க.சுந்தரலிங்கம் ஓவியர். (103668)



## புனித வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை திருவிழா

யாழ்.போதனா வைத்தியசாலை
23.09.2010 தொடக்கம் 26.09.2010

- ★ 23.09.2010 திரிதின வழிபாடுகள் பி.ப. 4.30 மணிக்கு திருச்செபமாலை, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
- ★ 25.09.2010 பி.ப. 4.30 மணிக்கு குணமாக்கல் வழிபாடும், நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.
- ★ 26.09.2010 காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் ஆசீரும் இடம்பெறும்.

அன்னையின் ஆசிபெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(103659) - ஆன்மகுருவும், நலன்விரும்பிகளும்.

## நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி நிறுவுநர் நினைவு தினம் 22.09.2010

நிறுவுநர் அமரர்
முகாந்திரம் முதலியார்
அத்தியார் அருணாசலம் J.P.
அவர்களின்
வாழ்க்கையில்





வித்தியாதான மொன்றே மேலான தென்றெண்ணி
அத்தியா ரின்றோ ரகத்தியராய்- நித்தியமும்
தேசம் மொழி சமயச்சீரின் திறமறிந்து பாசமுடன் செய்தார் பணி!

பேத்தி குடும்பம்
திரு.திருமதி சிவகுமாரன், நீர்வேலி.

### காணி விற்பனைக்கு

அச்செழு, நீர்வேலி, பூலசிட்டியில் அமைந்துள்ள 2 3/4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 0731050**

### சேவை

UK,IRELAND, POLAND போன்ற நாடுகளுக்கு STUDENT VISA ஆவணங்கள், ஒழுங்குகள் துரித கதியில் செய்து கொடுக்கப்படும். மற்றும் Financial Sponsorship என்பன.

தொடர்பு கொள்ளவும்:- 0779218444, 0214910959

### கடை வாடகைக்கு விடப்படும்

அச்சுவேலியில் பஸ் நிலையத்திற்கு அருகில் மேல்வீட்டுடன் கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **021 3007021**

### வேலையாள்கள் தேவை

மிக்சர் தயாரிப்பில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

**புத்தூர்ச் சந்தி, மீசாலை.**
**0775574603.**

### தவறிவிட்டது

சி.றஞ்சினி, சி.கணேஸ்வரன் இவர்கள் பெயரில் 08.09.2008 ஆண்டு இல.3608 திரு.விஸ்வலிங்கம் சட்டத்தரணி முகநூலில் 08.09.2008ஆம் ஆண்டு நன்கொடை காணி உறுதி அம்பட்டப்பாலத்துக்கும் நல்லூருக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.சிவன் (சிவம்), மணியக்காரன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். - சி.ரஞ்சினி சார்பாக மு.சிவன் (தந்தை)

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற விலாசத்தைச் சேர்ந்த தில்லை நடராசா சிவதாசன் என்பவரது NPHZ 7423 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளுக்குரிய வாகன அடையாள அட்டை மற்றும் முன்புற இலக்கத்தகடு என்பன யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் சென்றவாரம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த விலாசத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

#### வயாவிளான் ம.ம.வி.யில் நவோதயா வார நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.22

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நவோதயா வார இறுதி நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறனும் கலந்து கொள்வர்.

கண்காட்சி, கலை நிகழ்வுகள், சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (ஓ-ஐ)

#### தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.22

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் குறித்த கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தருகில் உள்ள உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஓ-10)

## துரையப்பா அரங்கில் நடந்த களியாட்ட நிகழ்வில் காயமுற்றவர் மரணம்

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வின் போது 'கோல்' கம்பம் விழுந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் நேற்றுக் காலை சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது சனநெரிசல் காரணமாக மைதானத்தில் நடப்பட்டிருந்த 'கோல்' கம்பம் எதிர்பாராத விதமாக சரிந்து விழ்ந்தது.

இந்தச் சம்பவத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் பிரஸ்தாப இளைஞர் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நான்கு தினங்களின் பின்னர் அவர் மரணமானார்.


மல்லாகம் குளமங்காலைச் சேர்ந்த எஸ்.ஜோன்சன் (வயது 18) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஓ-86)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கனகசிங்கம்
சதானந்தம் (ஆனந்தம்)

(ஓய்வுபெற்ற வெலியாத்து உத்தியோகத்தரும் அகில இலங்கை சமாதான நீதிவானும், ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாவும்)



மலர்வு
23.12.1933
உதிர்வு
25.09.2007

திதி: வளர்பிறை சதுர்த்தசி

*அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்*
*இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள்*
*அன்புத் தெய்வமே நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து*
*மூன்றாண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத*
*நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத*
*தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.*
*என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திப்போமாக.*

நீங்காத நினைவுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

சிவன் கோயிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

## European College of Higer Studies

மாணவர்களின் நலன்கருதிய சேவையின் ஒரு மைல் கல்லாக லண்டனில் ஆங்கிலமும் அதனூடான துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் IELTS அவசியமற்ற புதிய விசா நடைமுறையைக் கொண்டு வருகின்றனர்.

இன்னும் லண்டனில் பிரதான கல்லூரிகளான

- ❋ Bicke Hall College of computing
- ❋ Union College
- ❋ London Richmond College
- ❋ London victoria College
- ❋ Thames College of Technology
- ❋ Inter Link College

என்பவற்றுடன் இணைந்து 2½ வருடத்திற்கு குறையாமல் Sponsor வசதியுடன் விசாக்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

**European College of Higer Studies**

315½ Parameswara Junction, Palaly Road, Jaffna
T.P.: 0213734747, 0771882507, 0711841084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வர்த்தகர்கள் பொருள் கொள்வனவில் தர நிர்ணயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் கொழும்பில் இருந்து கொண்டு வரும் பொருள்களின் தர நிர்ணயம் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் முகவரியை உறுதிப்படுத்தி, பொருள்களின் கொள்வனவை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

வணிகர் கழகத்தினர் நேற்று மாலை ஊடகவியாளர்களுடனான சந்திப்பு ஒன்றை வணிகர் கழக அலுவலகத்தில் நடத்தினர்.

இச் சந்திப்பில் வணிகர் கழகத்தினர் மேலும் தெரிவிக்கையில்:

எந்த ஒரு பொருளாக இருந்தாலும் பொருள்களில் குறிப்பிட்ட விலைக்கே வர்த்தகர்கள் விற்பனை செய்ய வேண்டும் இதனைக் கருத்தில் கொண்டு பொது மக்கள் பொருள்களை கொள்வனவு செய்யும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மரக்காலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் தமது வர்த்தக நிலையங்களைப் பதிவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறும் சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகுவது தவிர்க்க முடியாததாகும்.

ஆங்கில மருந்தகங்களில் மருந்தாளர்கள் கடமையாற்ற வேண்டும். மருந்தாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு மருந்தாளர்களைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-7-86-313)

# குழந்தை அனாதரவாகக் கைவிடப்படவில்லை

யாழ்ப்பாணம், செப். 22

''குழந்தைகளைப் பிரசவித்தவுடன் கைவிட்டுச் செல்லும் தாய்மார்'' என்ற தலைப்பில் கடந்த மாதம் முப்பதாம் திகதி உதயனில் வெளிவந்த செய்தியில் -

கிளிநொச்சி வைத்தியசாலையில் பிறந்த குழந்தை ஒன்றும் அனாதரவாகக் கைவிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது தவறானது என்று கிளிநொச்சி நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தச் செய்தியால் கிளிநொச்சி வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு உண்டான மன உளைச்சல் குறித்து வருந்துகிறோம்.

- ஆசிரியர்

# உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு; யாழ்.செயலகத்தில் நேற்று கலந்துரையாடல்

## அமைச்சர் டக்ளஸூம் பங்குபற்றினார்

யாழ்ப்பபாணம், செப். 22

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் மீள்குடியமர எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சகல பிரதேச செயலர்கள் குறிப்பிட்ட சில திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

சுண்ணக்கல் அகழ்வு விவகாரம் தொடர்பாக முதலில் ஆராயப்பட்டது. தற்போது மாவிட்டபுரம் - கீரிமலை வீதியின் தெற்குப் பக்கத்திலும் வடக்குப் பக்கத்திலும் சுண்ணக்கல் அகழப்பட்டு வருகின்றது. முதலில் அரச காணிகளில் அகழப்பட்ட சுண்ணக்கல் தற்போது தனியார் காணிகளிலும் அகழப்படுவதாகவும், வடக்கு பக்கத்தில் அமைந்துள்ள காணிகள் சிமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

என்ன தேவைகளுக்காக சுண்ணக்கல் அகழப்படுகின்றது என்று யாருக்காவது தெரியுமா? என அமைச்சர் வினவிய போது பல்வேறுபட்ட காரணங்கள் தெரிவிக்கப்பட்டன. இருந்த போதும் சுண்ணக்கல் அகழப்படுவது உண்மையென்றும் ஆனால் என்ன தேவைக்காக அகழப்படுகின்றது என்பது தெரியவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் இது தொடர்பில் தெரிவிக்கையில்; தினமும் சுண்ணக்கல் அகழப்படுகின்றது. ஆனால் எங்குகொண்டு செல்கிறார்கள் என்று எமக்குத் தெரியாது. காங்கேசன்துறை வீதியால் கொண்டு செல்லப்படுவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித்தடைகள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டன. மேலும் பொன்னாலை, சுழிபுரம் மேற்குப் பகுதிகளில் கடற்தொழிலுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும், மக்கள் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் இவை தொடர்பில் உரிய முடிவுகளை பெற்றுத்தரக்கூடியவற்றுக்கு பெற்று தருவதாக அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ். - கீரிமலை பேருந்து சேவையில் ஈடுபடும் 769 இல பஸ் சேவையை தெல்லிப்பழையுடன் படையினர் நிறுத்துவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை வீதியால் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பேருந்து தெல்லிப்பழை மாவிட்டபுரம் ஊடாக கீரிமலையைச் சென்றடைவதற்கு படைத்தரப்பு முன்னர் அனுமதி வழங்கியிருந்தது. தற்போது தெல்லிப்பழைச் சந்தியுடன் பேருந்தை நிறுத்துவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஒ-15)

# இன்று நடைபெறும் தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், செப். 22

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று புதன்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று; முற்பகல் 10 மணிக்கு விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்காட்சி வழங்குவார்.

நாளை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

(சிறப்பிதழ் 11 ஆம் பக்கத்தில்)

(ஒ-10)

* * *

கோப்பாய், செப். 22

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று காலை 8.30 மணிக்கு பிள்ளையார் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருட்காட்சி தருவார்.

தேர்த்திவிழாக் காட்சிகளை www.neervely.com என்ற இணையத்தளத்தில் பார்க்க முடியும்.

(சிறப்பிதழ் 6 ஆம் 19 ஆம் பக்கங்களில்)

(ஒ-201-72)

# முத்த பிரஜைகள் கொடிதினத்துக்கு ஒத்துழைக்குமாறு செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் கொடி தினம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் - முதலாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது - இதற்கான ஏற்பாடுகள் மூத்த பிரஜைகள் பேரவையினால் செய்யப்பட்டுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் லயன்.வ.பரமசிவம் தெரிவித்துள்ளார்.

நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பேரவை இந்தப் பிரதேச மூத்த பிரஜைகளின் குறைகளைக் கண்டு அறிந்து உதவிகளைச் செய்து வருகின்றது. ஆளணி பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் சகல மூத்த பிரஜைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு பிரச்சினையாகவுள்ளது. இக் கொடிவாரத்தை முன்னிட்டு கொடிகளை விற்பனை செய்வதன் மூலம் இதற்கான நிதியைச் சேகரிக்கவுள்ளோம். ஆகவே சகலரும் எமக்கான உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்வேண்டும் என்று வேண்டி நிற்கிறோம்.

இச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான கொடித்தினச் சின்னங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-ற)

# தனியார் பஸ் ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதல் சீருடைகள்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ சீருடைகள் அடுத்த மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் முதல் கட்டமாக கடந்த வருடம் மேல்மாகாணத்தில் உள்ள தனியார் பஸ்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 500 தனியார் பஸ் ஊழியர்களுக்கு உத்தியோகபூர்வ சீருடைகளை வழங்க உள்ளதாகவும், ஊழியர் ஒருவருக்கு தலா இரண்டு சீருடைகள் வீதம் அவை இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-314-318)

# கால்நடை சிகிச்சை நிலையத்துக்கு பெரும்பான்மை இன வைத்தியர் நியமனம்

## மொழிப் பிரச்சினையால் அவதிப்படும் மக்கள்

யாழ்ப்பாணம், செப். 22

கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளைத் தமது வீட்டில் வளர்க்கும் மக்கள் அவற்றிற்கு காணப்படும் நோய் களுக்குச் சிகிச்சை பெறும்பொருட்டு பிற வுண் வீதியில் உள்ள கால்நடை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்லமுடியாத நிலை காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கிறார்கள்.

இதற்கு மொழிப்பிரச்சினையே காரணம் எனவும், தற்சமயம் இந்த வைத்திய நிலையத்தில் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றுபவர் சிங்கள வைத்திய அதிகாரி என்பதால் தமது பிராணிகளை அங்கு கொண்டு சென்று அவற்றின் நிலைமைகளை எடுத்துக் கூற மொழி ஒரு பிரச்சினையாக உள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்திய அதிகாரிக்குத் தமிழ் பேசத் தெரியாது எனவும், அங்கு பணியில் உள்ள ஊழியர்களுக்குச் சிங்களம் புரியாது எனவும், தமிழ் தவிர்ந்த ஏனைய மொழிகளைப் பேசமுடியாத நிலையில் உள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது பிராணிகளுக்கு உள்ள நோய்கள் தொடர்பாக அங்கு எடுத்துக் கூற முடியாத நிலை உள்ளதால் பிராணிகளும் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமிழ் தெரிந்த ஒரு வைத்திய அதிகாரியை நியமிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

(த-7)

# பிரித்தானிய காரை நலன்புரி சங்கம் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி உதவி

காரைநகர், செப். 22

பிரித்தானிய காரை நலன்புரி சங்கம் காரைநகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக காரைநகர் அபிவிருத்திச் சபை ஊடாக நிதி உதவி வழங்க முன்வந்துள்ளதாக காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் சி.ஜெயராசா தெரிவித்துள்ளார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய அபிவிருத்திக்காக 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும், காரைநகர் பாலாவோடை இ.த.க. பாடசாலை அபிவிருத்திக்காக 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும், காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலைக்கு ஒரு லட்சத்து 77 ஆயிரம் ரூபாவும் வழங்குவதுடன்

காரைநகர் பிரதேசத்தை சேர்ந்த வறுமைக்கோடிற்குட்பட்ட கண்பார்வை குறையுடைய நூறு பேருக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கற்றாக்குக்கான கண்சத்திரசிகிச்சை செய்வதற்கான நிதிகளையும் உடன் வழங்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

அபிவிருத்திச் சபையின் தலைவர் மகாராணி க.சோமசேகரம் முப்பத்தையாயிரம் ரூபா நிதியினை அபிவிருத்திச் சபை ஊடாக காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

(த-250)

# இந்தியாவின் 20 புதிய பஸ்கள் வட மாகாணத்துக்கு ஒதுக்கீடு

## யாழ். 11, வவுனியா 8, கிளிநொச்சி 1

யாழ்ப்பாணம், செப். 22

இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கத்தினால் வடமாகாணத்துக்கு 20 புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் வவுனியா மாவட்டத்துக்கு எட்டு பஸ்களும், யாழ்.மாவட்டத்துக்கு பதினொரு பஸ்களும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒரு பஸ்ஸுமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட பஸ்களில் ஐந்து யாழ்.மாநகரசபைக்கும் மூன்று பஸ்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.மத்திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பஸ்களும் கிளிநொச்சி செயலகத்துக்கு ஒரு பஸ்ஸும் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 17 லட்சம் ரூபா பெறுமதியான இந்த பஸ்களை ''டாட்டா'' நிறுவனமூடாக இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கம் வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக நேற்றுமுன் தினம் யாழ்.மாநகரசபைக்கு ஐந்து பஸ்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை ஏனைய பஸ்கள் கொழும்பில் வைத்து கையளிக்கப்படவுள்ளன.

(ஒ-16)


CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 21, 2010
பங்குச்சந்தைச் சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI) 6,702.99↑
மிலங்கா(MPI) 7,055.94↑

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 6,700.73Mn
பங்குகளின் அளவு(No.) 114.43Mn
வியாபாரம்(No.) 36,888
சந்தை முதல்(Mkt.Cap)Rs. 2,207.60Bn

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கொழும்பு பார்மசி 1335.00
சிலோன் பிறின்ரேர்ஸ் 184.70
பீபிள்ஸ் லீசிங் பைனான்ஸ் 341.10
கொழும்பு இன்வெஸ்மென்ற் ரஸ்ற் 290.00
யூனியன் அசூரன்ஸ் 181.60

குறைவு(Top 5 losers) - விலை Rs.
பின்லேஸ் கொழும்பு 183.40
றீவ(f) கொம்பர்ஸ் 12.50
டேடன்ஸ் 110.00
சி.ரி.லான்ட் 35.60
தண்கொட்டுவ போசலன் 81.70

மேலதிக தகவல்கள் -www.cse.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்

# வவுனியாவில் மழை ஆரம்பம்: மீள்குடியேறிய மக்கள் பாதிப்பு

கொழும்பு, செப். 22

வவுனியா பிரதேசத்தில் மழை பெய்யத் தொடங்கியுள்ளதையடுத்து, சொந்த இடங்களில் மீள்குடியேறி, கூடாரங்களில் வசிக்கும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வீமன்கல் கிராமப்பகுதியில் 33 வருடங்களின் பின்னர் மீள்குடியேறியுள்ள குடும்பங்களின் கூடாரங்களுக்குள் மழைநீர் புகுந்ததால் இருக்கவோ படுக்கவோ முடியாத நிலை ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

வீமன்கல் மட்டுமல்லாமல், குடாகச்சகொடி, பாவற்குளம், ரன்கெட்கம உள்ளிட்ட வேறு பல மீள்குடியேற்றக் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாதிப்புகள் குறித்து வவுனியா அரச அதிபர் திருமதி சாள்ஸைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது ஆரம்பித்துள்ள மழையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் இன்னும் தமக்கு வந்து கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் மழையினால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு வழங்குவதற்கென அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு மேலதிகமாகக் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

இதேவேளை, தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான கூரைத்தகடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அத்துடன், தொடர்ச்சியான அல்லது கடும் மழையினால் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டு அதற்கென ஒரு திட்டத்தை வகுக்குமாறு அவர்களிடம் கோரப்பட்டிருப்பதாகவும், அந்தத் திட்டத்திற்கமைய பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்படும் குடும்பங்கள் பராமரிக்கப்படுவார்கள் என்றும் வவுனியா அரச அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

## புதையல் தோண்டினராம் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட ஏழு பேர் கைது

தேவாலயமொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் வாகரை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஏழு பொலிஸார் மற்றும் இரு சிவிலியன்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திம்புலாகலவிலுள்ள சிரிபுற என்ற இடத்திலுள்ள புராதன தேவாலயமொன்றில் இவர்கள் புதையல் தோண்டியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

## பலாலி தவிர்த்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்கின்ற இனவாதப் போக்கினால் நீங்கள் பலவற்றை இழந்தவர்களாக இருக்கின்றீர் கள்

எமது நாட்டில் தற்போது சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டுள்ளது. எமக்குள்ளே மொழிரீதியான பிரச்சினைகள் காணப்பட்டாலும் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்கின்ற மனநிலையை உருவாக்க வேண்டும். அத்துடன் உங்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்தும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அங்குள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம். அத்துடன் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இதுவரை 450 வரையான குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளோம்.

**யாழ்ப்பாணம் அன்றும் இன்றும்**

1981ஆம் ஆண்டுதான் நான் முதன் முதலில் யாழ்ப்பாணம் வந்தேன். அப்போது மானிப்பாய், சண்டிலிப்பாய் பிரதேசங்களில் பல்வேறுவிதமான வளர்ச்சிகளைக் கண்ணுற்றேன்.

ஆனால் இன்று இப்பகுதியைக் காணும்போது மிகவும் கவலையாக உள்ளது. இந்த நிலைக்குள் உங்களைத் தள்ளி விட்டது கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய யுத்தம்தான்.

வடமராட்சி கிழக்கில் மக்களை மீள்குடியேற்றம் செய்தது போல வலி.வடக்கிலும் பலாலி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மக்களை மீள்குடியமர்த்துவதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மிக விரைவில் அது சாத்தியப்படும்.

எனவே இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் சகோதரத்துடனும், ஒரே நாட்டு மக்களாக நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

இதேவேளை, 51ஆவது படைப்பிரிவின் கீழ் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 1,800 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றில் 30 குடும்பங்களுக்கு நேற்று கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் 511 படைப்பிரிவின் தளபதி கேணல் கொஸ்தா, 513 படைப்பிரிவின் தளபதி எல்.டி.சில்வா மற்றும் 51ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் வல்கம, கால்நடை வைத்திய சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி அமிர்தலிங்கம், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.சுந்தரசிவம், நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன், வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி, வலி.வடக்கு பிரதேச செயலர் ஆர்.முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி ஜெயவீரசிங்கம் ஆகியோர் உட்படப்பலர் கலந்து கொண்டனர். (ஒ-9)

## தடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை நியாயப்படுத்துகின்றனர். இவை இந்தியாவின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும், ஒற்றுமைக்கும் பங்கம் விளைவிக்கும். இந்நாட்டின் மக்கள் பிரிவுகளுக்கிடையில் அமைதியின்மை யையும் ஏற்படுத்தும்.

இந்திய மத்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது 1992 ஆம் ஆண்டில் இரண்டு வருடங்களுக்கு தடை விதித்திருந்தது. அந்தத் தடை இவ்விரண்டு வருடங்களாகத் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகின்றது.

அதனை நீக்கினால் தடை உத்தரவு தோற்கடிக்கப்பட்டுவிடும் என்றும் தமிழக அரசின் வழக்கறிஞர் எஸ்.தனஞ்சயன் எடுத்துரைத்தார்.

வை.கோபாலசாமி, விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறும் தமக்கு பொது இடங்களில் தடை இன்றி விடுதலைப் புலிகள் தொடர்பில் பேச அனுமதிக்குமாறு கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது தடைவிதிக்கத் தகுதி யான காரணம் எதுவும் இல்லை. இலங்கை யில் இருந்து வரும் அப்பாவிகளான இளைஞர்களையும் யுவதிகளையும் விடு தலைப் புலி ஆதரவாளர்கள் என்று முத் திரை குத்தப்படுகின்றது. அதனால் அவர் கள் தேவையற்ற பிரச்சினைகளை எதிர் நோக்க நேருகின்றது.

இப்போதுள்ள தடையை நியாயப் படுத்தும் சட்டத்துக்கு விரோதமான எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை - வைகோ தனது மனுவில் தெரிவித்திருந்தார். (அ-10)

## 130 பேர் கொண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் தன்னுடன் ஒரு பட்டாளத்தையே அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். அந்தப் பட்டாளத்துக்குச் செலவு செய்த பணத்துக்கு ஈடான தொகையைக் கூட அந்நாடுகளிடமிருந்து இலங்கை அரசு உதவியாகப் பெறுவதில்லை. மக்களின் பணம் இவ்வாறு வீணடிக்கப்படுவதுதான் மீதம்.

இப்போது கூட ஐ.நா. சென்றிருக்கும் ஜனாதிபதி தன்னுடன் 130 பேரை அழைத்துச் சென்றுள்ளார். இவர்களுக்காக மக்களின் பணத்தில் இருந்து 14 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால், ஐ.நாவின் கூட்டத்தில் 4 அல்லது 5 பேர்தான் இலங்கை சார்பாக கலந்துகொள்ள முடியும். அப்படி இருக்கும்போது ஏன் ஒரு பட்டாளத்தை அழைத்துச் செல்லவேண்டும்.

பாணின் விலையை 3 ரூபாவால் அதிகரித்து மக்கள் மீது சுமையேற்றி அரசு கோடிக்கணக்கான ரூபாவை இவ்வாறு வீண் விரயம் செய்கிறது.

இவ்வாறான வீண் விரயத்தை ஏற்க முடியாது. இதுதான் கடுமையாக எதிர்க்கின்றோம். வீண்விரயத்தை உடன் நிறுத்துமாறு நாம் அரசிடம் கோருகின்றோம். - என்றார்.

## வல்லிபுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்களின் போக்கு வரத்து வசதிகளை இலகுவாக்கும் பொருட்டு விசேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.

தொடர்ந்து நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்தம் இடம்பெறவுள்ளது. (ஒ-16-236)

(சிறப்பிதழ் 12ஆம், 13ஆம் பக்கங்களில்)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் காயமடைந்த ஆறுபேர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

குறித்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து அப்பகுதியிலுள்ள வேப்பமரத்துடனும் மின்சாரக் கம்பத்துடனும் மோதியதை அடுத்தே மேற்படி விபத்து இடம்பெற்றது என ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நான்கு பேரில் இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள், நிதி அமைச்சின் பிரதிநிதிகள், ஐ.ஒ.எம். நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரும் வருகை தரவுள்ளனர். மேலும் உலக வங்கியின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டத்தில் பங்கேற்ற அனு பவம் வாய்ந்த அதிகாரிகளும் இதில் கலந்து கொள்கின்றனர்.

இக்கலந்துரையாடலின்போது இந்திய அரசின் வீட்டுத்திட்டம் தொடர்பாக திரட்டப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் அவர்களிடம் கையளிக்கப்படும். மேலும் வீடுகள் நிர்மாணிக்கத் தேவையான வளங்கள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

இந்தியக்குழுவினர் காரைநகர், யாழ்ப்பாணம், மருதங்கேணி ஆகிய இடங்களுக் குச் சென்று நேரடியாகக் களநிலைமைகளை நாளை ஆராயவுள்ளனர். அதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட் டத்துக் கும்அவர்கள் செல்வார்கள் என்றும் தெரிய வருகின்றது. (ஒ-15)

## ஐ.தே.கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறும் கட்சியாக மாற்றவேண்டும் என்ற உணர்வு எம் எல்லோருக்கும் உண்டு. அதற்கேற்பவே நாம் செயற்படுகிறோம். அதற்கேற்பவே கட்சியின் சீர்திருத்த யோசனைகளும் அமைந்துள்ளன.

நாம் பிரிந்து நின்றால் அது அரசுக்கு இலாபமாக அமைந்துவிடும். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும். அந்த வகையில் அனைத்துக் கட்சிகளையும் அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

எமது ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு அவ்வாறே உள்ளது. அதில் பிளவு எதுவும் ஏற்படவில்லை. அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்க எமது கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த தீர்மானம் தொடர்பில் சிறிய சலசலப்பு ஏற்பட்டது. இருந்தும் கூட்டமைப்பு உடையவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பில் தொடர்ந்து இருக்க இணக்கம் தெரிவித்துள்ளது. இது இவ்வாறிருக்க, ஐ.தே.க. எம்பிக்கள் எவரும் நாடாளுமன்றில் தனித்துச் செயற்பட முடியாது. கட்சியின் அரசமைப்பின் படி அவர்கள் கட்சிக்குக் கட்டுப்பட்டே செயற்பட வேண்டும். கட்சியை விட்டு விலகிச் சென்றால் மாத்திரமே அவர்களால் தனித்துச் செயற்பட முடியும் - என்றார்.


கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 24.09.2010 |
| பிரிவு 02 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டடணச் சலுகை வழங்கப்படுகின்றது

மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

சிறப்பு சலுகையுடன் புதிய பிரிவுகள்
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation - of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
Real Offer 75% for All
22/9/2010, 24/9/2010, 25/9/2010
DMI COMPUTER EDUCATION
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. 021-222 4403
M. M. V. வீதி, நெல்லியடி. Tel.: 021-320 7700

உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Skill migration, Career guidance
Free : BCS-UK, IELTS / TOEFL, Hardware, ICDL
BIT, CIMA, CCNA, CIW_WEB
Network Software Engineering
ICTA Schol. (Government)
Salary Scale more than 50,000$
www.payscale.com
MCS
Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்
324, Palaly Road, Jaffna. Parameswara Junction,
SMS your name & course to 0772 395 895 & get Schol.
Don't miss Closing Date 23.09.2010

வேலையாள்கள் தேவை
அல்லாரை வீதி, மீசாலை சந்திக்கு அருகில் அமைந்துள்ள "கஜானன் பன் முக வேலைகள்" என்னும் வணிக நிலையத்திற்கு கணனி ரைப்பிங் தெரிந்தவர்கள் தேவை. மீசாலைப் பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகள்: T.P.: 021 7913846


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.